உ
Harai Ram

ஸ்ரீ மத்யை கோதாயை நம :

திருப்பாவை ஈராயிரப்படி

("ஆய்" என்கிற ஜநந்யா சார்யார் அருளியது)



This book is published with the financial assistance of
Tirumala Tirupati Devasthanams
under their scheme
'Aid to Publish Religious Books'

விளக்கவுரை எழுதியவர் :

ஸ்ரீ வில்லிபுத்தூர் வித்வான்

R. கண்ணன் ஸ்வாமி

சென்னை—600 011.

ஸ்ரீ :

ஸ்ரீ மத்யை கோதாயை நம :

முன்னுரை

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்குந் தன்மையளாய்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து.

திருமகள் கேள்வனை ஸ்ரீ மந்நாராயணனையே பரம் பொருளாக அறுதியிட்டுப் பேசக்கூடிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்திற்கு இருகண்கள் போன்றவை வடமொழியும் தமிழும் திருமங்கை யாழ்வார் "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி என்றே போற்றுகின்றார் வட மொழியில் மூலப்ரமாணமாகப் போற்றப்படுவது வேதமேயாகும். அதே போன்று தமிழில் மூலப்ரமாணமாகப் போற்றப்படுவது மயர்வறமதி நலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்ய ப்ரபந்தமேயாகும் வேதத்தில் கர்மகாண்டம் என்றும், ஞான காண்டம் என்றும் இரண்டு பகுதிகள் உண்டு. கர்மகாண்டத்தில் உலக வாழ்க்கைக் குண்டான பல விஷயங்களைச் சொல்லி எம் பெருமானைப் பற்றியும் சொல்லுகிறது ஞான காண்டத்திலோ வென்றால் பகவானைப் பற்றியே பேசுகின்றது. ஆழ்வார்கள் அருளிச் செயலோ முழுதும் பகவானைப் பற்றியே பேசுகின்றது. மனித உறுப்புக்களுள் சிறந்தது கண் அதனினும் கருவிழி ஏற்றமுடையது. கருவிழியிலும் சிறந்தது அதன் நடுவே உள்ள 'பாவை' (Pupil) என்பதேயாகும் கண்ணே! கண்ணின் மணியே! மணியாடு பாவாய்! என்று அறிஞர்களும் கூறுகின்றனர் நமது கண்போன்ற தமிழில் கருவிழிபோன்றது ஆழ்வார்களின் அருளிச்செயல் கருவிழியின் கண் உள்ள "பாவை" போன்றது ஆண்டாள் அருளிய திருப்பாவை ஆகும்.

வேதத்தினால் விளக்கப்படும் பரம் பொருளாகிய திருமால், தன்னை எளிமைப் படுத்திக்கொண்டு மானிட உருவில் தயரதனுக்கு மகனாய்த் தோன்றினார். அது கண்டு வேதமும் தன்னை எளிமைப்படுத்திக்கொண்டு வால்மீகி வாக்கில் ராமாயணமாகத் தோன்றியது அது போன்று பூமிதேவியானவள் மண்ணுலக மாந்தரை வாழச்செய்ய குன்றாத வாழ்வான வைகுந்தவான் போகம் தன்னை இகழ்ந்து ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருமகளாய்த் தோன்றினாள் அது கண்டு வேதத்தின் தலையாய பகுதியாகிய உபநிஷத்துக்களும் ஆண்டாள் வாக்கிலிருந்து அருமையான திருப்பாவையாகத் தோன்றின. அதனால்தான் திருப்பாவை "வேதமனைத்துக்கும் வித்து" என்றே போற்றப்

படுகிறது. வேதத்தின் பொருள் தெரியாதவர்கள் திருப்பாவை மூலந் தேற்றென அறிகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

ஒரு நூலுக்குப் பற்பல உரைகள் தோன்றுவதிலிருந்தும், அந்நூல் பல மொழியில் மொழி பெயர்க்கப்படுவதிலிருந்தும் அதன் பெருமையை உணரலாம். பகவத் கீதை பல உரைகளைக் கொண்டதாகவும், உலகிலுள்ள பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டதாகவும் விளங்கிவருகிறது. அண்மையில் சீன மொழியில் கூட மொழி பெயர்க்கப் பட்டு வருவது உலகறிந்ததே. தமிழில் திருக்குறளுக்குப் பத்துப்பேர் உரையெழுதியுள்ளனர். ஆயினும் நால்வர் உரை இன்னும் வழக்கில் உள்ளது. அதுபோல திருப்பாவைக்கு இதுவரை பல உரைகள் தோன்றியுள்ளன. இன்னம் தோன்றிவருகின்றன. அவற்றுள் பெரியவாச்சான் பிள்ளை அருளிய மூவாயிரப்படியும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய ஆறாயிரப் படியும் மிகப்பிரபலமாக இன்றும் வழங்கி வருகின்றன. திருநாராயணபுரத்தில் தோன்றிய "ஆய்" என்கிற ஜநந்யாசார்யார், ஈராயிரப்படி, நாலாயிரப்படி என்று இரு உரைகள் எழுதியுள்ளார். ~~இருபத்து~~
32 எழுத்து ~~நான்கு பத~~ங்களைக் கொண்டது வடமொழியில் ஒரு க்ரந்தம் என்றும், தமிழில் ஒரு படி என்றும் வழங்கப்படுகிறது. அம்மாதிரி ஈராயிரம்படிகள் (32 எழுத்துகள்) கொண்டது இது. ஆதலால் ஈராயிரப்படி என அழைக்கப்படுகிறது.

வைணவ நூல்களில் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிக்கு அடுத்தபடியாக அதிக உரைகள் கொண்டது திருப்பாவையே ஆகும். திருவாய்மொழி எப்படி "ஸஹஸ்ரகீதி" என்கிற பெயரில் வங்காள மொழியில் மிகப்பெரிய விளக்க உரையுடன் எழுதப்பட்டு ப்ரபலமாக வழங்கி வருகிறதோ அது போன்று இத் திருப்பாவையும் தெலுங்கு, கன்னடம், குஜராத்தி, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இன்றும் ப்ரபலமாக வழங்கி வருகிறது.

திருப்பாவையின் பற்பல உரைகள் புத்தக வடிவில் தமிழில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டபோதிலும் 'ஆய்' அருளிய ஈராயிரப்படி என்ற உரை இதுகாறும் தமிழில் வெளிவரவேயில்லை. நாலாயிரப்படியாகிய உரை 1952இல் திருவல்லிக்கேணி தேவேதாந்தவர்த்தினீ சபையினரால் வெளியிடப்பட்டது.
1982 ~~1962~~இல் ஈராயிரப்படி நாலாயிரப்படி ஆகிய இரு உரைகளும் தெலுங்குலிபியில் பதிக்கப்பட்டுள்ளன. திருப்பாவை இவ்வளவு ப்ரபலமாக இருந்தபோதிலும் ஏனோ இதுகாறும் ஈராயிரப்படி என்ற உரை யாராலும் பதிப்பிக்கப்படவேயில்லை. இவ்விரு உரைகளையும் பரிசீலித்தவர்கட்கு இவ்வாசிரியரது நுண்மாண் நுழை புலமும் பன்மொழிப்புலமையும், உயர்ந்த கருத்துக்களை எளிய இனிய முறையில் விளக்கும் திறனும் கற்பனைத்திறனும் நன்கு புலப்படும். மற்ற உரையாசிரியர்கள் சொல்லாத பல விளக்கங்களை இவர்தம் உரையில் காணலாம். இவர் ஸாம வேதத்திலிருந்து பல மேற்கோள் காட்டியிருப்பதிலிருந்து ஸாம வேதத்தவர் என்றும், அதில் வல்லுநர் என்றும் தெரிய வருகிறது.

நாலாயிரப்படியில் "கற்றுக்கறவை" என்ற பாசுரத்தில் "அபித்வா சூர நோநுமோதுக்தாஇவ தேநவ ஈசாந ஸூஸ்ய ஜகத:" என்று எம்பெருமானுக்கும் பசுவிற்கும் ஒற்றுமை கூறும் ஸாம வேதத்தின் பகுதியை அருமையாக எடுத்துக்கூறியுள்ளார்.

மேலும் நாலாயிரப்படியில் "அன்றிவ்வுலகமளந்தாய் அடி போற்றி' என்ற பாடலில் அடி போற்றி திறல் போற்றி, புகழ் போற்றி கழல் போற்றி எனக் கூறிவந்த ஆண்டாள், "குன்று குடையாவெடுத்தாய் குணம் போற்றி என்கிறுள். இங்கு குணம் என்பது எந்த குணத்தைக் குறிக்கிறது என்பதனை மற்ற உரையாசிரியர்கள் அவ்வளவாக விளக்கவில்லை இவர் ஒருவரே எண்ணி எண்ணி வியக்கத்தக்க அருமையான விளக்கம் தந்துள்ளார். அதாவது இந்திரனுக்குப் பூசை செய்து வந்த இடையர்களைக் கண்ணன் ஏழாவது பிராயத்தில் தடுத்து விட்டார் ஆய்ப்பாடியில் வாழுங்காலத்து நமக்குச் சோறும் தண்ணீரும் பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் தருவது இந்த கோவர்த்தன மலையே ஆகும் எனவே நமக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கக்கூடிய கோவர்த்தன மலைக்குத்தான் பூஜை செய்ய வேண்டுமேயொழிய கண்ணுலே காணுத இந்திரனுக்கு எதற்காகப் பூஜை செய்வது? என்று தடுத்துவிட்டார் கண்ணன் வார்த்தையைக் கேட்ட கோபர்கள் பலரும் ஒரு மனதாக கோவர்த்தன மலைக்கே பூசை செய்தனர். அதுகண்டு பொருத இந்திரன் சினங்கொண்டு மேகங்களை ஏவிப் பெருமழை பொழியச் செய்து பசுக்களையும், கன்றுகளையும், கோபாலர்களையும் ஏன் ஆய்க்குலம் முழுவதுமே அழிக்கத் திட்டமிட்டான். ஏழு நாட்கள் இடைவிடாது யானைத்துதிக்கை அளவிற்கு மழை பொழிவித்தான். அதுசமயம் கண்ணன் கோவர்த்தன பர்வதத்தைக் குடையாகப் பிடித்து ஏழு நாட்களும் எவருக்கும் எவ்விதமான குறையுமின்றிப் பாதுகாத்தான். மேகத்திலுள்ள நீரெல்லாம் வற்றிவிட்டதால் மழையும் நின்றுவிட்டது. உண்மையை உணர்ந்தவனுகிய இந்திரன் தான் செய்த தவறுக்கு பெரிதும் வருந்துகிறுன் வெட்கித்துக் கண்ணன் காலில் பையச் சரண் புகுந்தான் தன்னையும் தன்னடியார்களையும், பசுக்களையும் அழிக்க முற்பட்ட இந்திரனைக் கண்ணன் ஏதும் கூறுது மிக்க பொறுமையுடன் புன்முறுவல் பூத்தவண்ணம் பேசாது இருந்துவிட்டார் அப் பொறுமைக்குணத்துக்குத்தான் பல்லாண்டு பாடுகிறுள் ஆண்டாள்.

இப்பொறுமைக்கு இவ்வாசிரியர் அருமையான தொரு விளக்கம் தந்துள்ளார். ஒரு தாய்க்கு ஒரே ஆண்டில் சித்திரையில் ஒரு குழந்தையும் பங்குனியில் ஒரு குழந்தையும் பிறந்து விட்டது பங்குனியில் பிறந்த குழந்தைக்குத் தாய்பால் கொடுக்கிருள் சித்திரையில் பிறந்த சவலைக் குழந்தை தாயிடம் தனக்குப் பால் தருமாறு கேட்கிறது தனக்குப் பால் தராமல் தம்பிக்கே பால் தருவதைக் கண்டு கோபங் கொண்டுகையால் தாயை அடிக்கிறது; கூரிய நகத்தால் கிள்ளுகிறது மிக்க நோவுபட்ட போதிலும் தாய் தன் மூத்த குழந்தையைத் திரும்ப அடிக்கமாட்டாள்: கோபம் கொள்ளவும் மாட்டாள். பொறு

மையோடு இருந்து விடுவாள், காரணம் சவலைக் குழந்தையாகிய அது தனக்குப் பால் தராததால் நம்மை அடிக்கிறது. அதன் வயிற்றில் அடித்து விட்டோமல்லவா; அதனால் அது நம்மைக் கையால் அடிக்கிறது. கையில் பலம் உள்ள வரையும் அடித்து விட்டுப் போகட்டும் என்று உடம்பைக் கொடுத்துக் கொண்டு அடியையும் பொறுத்துக் கொண்டிருப்பாளாம் தாய். அது போன்று இந்திரனாகிய குழந்தைக்குச் சோறிடாமல் கோவர்த்தன மலையாகிய குழந்தைக்குச் சோறிட்டதால் சினங் கொண்ட சவலைப் பிள்ளையாகிய இந்திரன் மழையாகிய தன்கைகளால் அடிக்கிறான் கை ஓயுந்தனையும் அடித்து விட்டுப் போகட்டும் என்று பொறுத்துக்கொண்டிருக்கும் தாயின் நிலையில் உள்ளார் கண்ணன் என்று இவ்வாசிரியர் அருமையாக விளக்கியுள்ளார் இவ்வளவு அருமையான விளக்கங்கள் தந்துள்ள இவ்வாசிரியரின் மற்றொரு உரையாகிய ஈராயிரப்படி எப்படி இருக்கும்? அதனையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை அடியேனுக்கு ஏற்பட்டது தெலுங்கு மொழியில் வல்லுநர்கள் சிலரை அணுகி இந்நூலைப் படித்துச் சொல்லுமாறு கேட்டு இன்புற்றேன் "யான் பெற்றபேறு பெறுக இவ்வையகம் என்ற அவாவில் இவ்வுரையை எல்லோரும் படித்து இன்புற வேண்டும் என்ற எண்ணத்தினால் எலியெலும்பனாகிய அடியேன் இந்நூலை எப்படியும் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற ஆசை கொண்டேன்.

இந்நூலில் மிக அருமையான தமிழ்ச் சொற்றொடர்களையும், வருணனைகளையுப் காணமுடிகிறது எடுத்துக் காட்டாக ஒன்று காண்போம். கண்ணன் ராஸக்ரீடை புரியுங்காலத்து உள்ள இயற்கைச் சூழலை அருமையாகச் சித்திரித்துக் காட்டுகிறார். "தண்டலிட்ட நிலவும், விள்ளலிட்ட நாண் மலர்ச் செறிவும், இருண்ட சோலையும், பளிங்குப் பாறையும், செங்குன்றுத் தாழ் வரையும் பரப்புமாறப் பூத்த காவியோடையும் நாயடியிட்டுப் புகுந்த தென்றலுமாயிருக்கிற யமுனா தீரத்திலே இத்தகைய அருமையான தமிழ்ச் சொற்றொடர்களைப் பயன்படுத்துவதிலிருந்தே இவரது ஆழ்ந்த தமிழறிவு அறியப்படுகிறதன்றோ.

மேலும் சாதாரண மனிதர்கள் ஞானம் மிக்கரிஷிகள், ஆழ்வார்கள் பெரியாழ்வார் ஆண்டாள் இவர்களுக்கிடையே ஒருவர்க்கொருவர் பர்வதத்துக்கும் பரமாணுவுக்கும் உள்ள வாசி உண்டு என்று மற்ற உரையாசிரியர்கள் சொல்லிப் போனார்களே யொழிய அவ்வேறுபாடு எவ்வாறு என்று விளக்கிக் கூறவேயில்லை. இவ்வாசிரியர் ஒருவரே உரிய எடுத்துக் காட்டுகளுடன் விளக்கிக் கூறியுள்ளார் தன்யஜமானி பிள்ளையே ஆட்சிக்கு வரவேண்டும் என்றெண்ணிய கூனியும் தன் பிள்ளை பரதனே நாடாள வேண்டும் என நினைக்கும் கைகேயியும் தன் மைந்தன் இராம பிரானே அரசாட்சி புரியவேண்டும் என்றெண்ணிய தசரதனும் போன்றவர்கள் தான் தேஹாத்மாபிமானம் மிக்க சாமானிய மனிதர்கள் இராமன் சாதாரணமனிதனல்ல பரம்பொருளேயாவான் என்ற வசிஷ்ட விச்வாமித்ரர்களைப் போன்றவர்கள் மற்றைய ரிஷிகள். இவர்கள் தேஹம் வேறு ஆத்மா வேறு. ஆத்மாக்

களெல்லாம் பரமாத்மாவுக்கே யுரியன: அவனுக்குத் தொண்டு செய்வதற்கே இந்த ஆத்மாக்கள் ஏற்பட்டுள்ளன என்ற ஞானம் படைத்தவர்கள் ரிஷிகள். எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதற்கென்றே அந்த ஆத்ம வஸ்து ஏற்பட்டது என்ற அறிவோடு நில்லாது ராகவன் காட்டிற்கெழுந் தருளிய காலத்தும், ஏன் வாழ்நாள் முழுதுமே அவனை விட்டுப் பிரியாது நிழலும் அடிதாறும் போல இருந்து தொண்டு செய்த இளைய பெருமாளைப் போன்றவர்கள் ஆழ்வார்கள். ராமனுக்கு மிகவும் பரந்த்ரனாய் அவன் வைத்த இடத்தில் தான் இருந்து கொண்டு ராமகுணானுபவம் பண்ணிக் கொண்டிருந்தவனாகிய பரதாழ்வானைப் பொன்றவர் பெரியாழ்வார் உண்ணும் சோறு. பருகுநீர். தின்னும் வெற்றிலை எல்லாமே ராமன்என்றெண்ணிய பரதாழ்வானையே தெய்வமாகக்கருதி அவனுக்குத் தொண்டு செய்வதையே தன்லட்சியமாக எண்ணிய சத்துருக்னாழ்வானைப் போன்று பாகவதகைங்கர்யத்தின் எல்லை நிலத்திலே நிற்பவள் ஆண்டாள் என்கிறார் இவ்வாசிரியர். இவ்வாறு ஒவ்வொரு கருத்துக்களையும் மிக அருமையாக விளக்கிக் கூறும் பாங்கு உன்னுந்தோறும் உன்னுந்தோறும் உவகையளிக்கிறது.

இத்தகைய அருமையான விளக்கங்களுடன் கூடிய இவ்வுரை யானது தமிழிலக்கிய உலகுக்குப் பெருமை தேடித்தருவதோடு மட்டுமின்றி, இலக்கிய ஆராய்ச்சி பண்ணக் கூடியவர்களுக்கும் பேருதவியாக ஒரு கருவூலமாக விளங்குகிறது. பக்திக் கண் கொண்டு பார்ப்பவர்களுக்கும்; தமிழ் இலக்கிய ரஸிகர்களுக்கும் ஒரு பெருவிருந்தாகும். இதில் வரக் கூடிய வடமொழிச் சொற் களுக்கும், ஸம்ப்ரதாய வார்த்தைகளுக்கும் தக்கபெரியோர் களின் உதவி கொண்டு விளக்கமான உரை எழுதியுள்ளேன். ஆயினும் ஐந்தாவது பாட்டில், "தூமலர் தூவித் தொழுது" என்ற இடத்தில் "இலை வாணிபம் பண்ணாத மலர்" என்றுள்ளது. அதன் பொருள் விளங்க வில்லை. ஸம்ப்ரதாயம் தெரிந்த அறிஞர்கள் தெரிவிப்பார்களானால் நன்றியுடன் ஏற்றுக் கொள் வேன். இந்நூலுக்கு விளக்கவுரை எழுதுவதற்கு உறுதுணையாய் இருந்து அறிவுரை கூறியவர், திருப்பதி, வடமொழிக் கல்லூரிப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவரும் நியாய வேதாந்த சிரோமணி & தமிழ் வித்வானும், பரம சாந்தருமாகிய அவருக்கு T. A. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமியே ஆவார். மங்களைத் அடியேனது க்ருதஜ்ஞதாபுரஸ்ஸரமான ப்ரணாமம் உ வே தெரிவித்துக் கொள்கிறேன். தெலுங்கு மொழியிலிருந்து தமிழில் எழுதித் தந்ததுடன், அருகிலிருந்து அவ்வப்போது அறிவுரை, கூறி நல்லமுறையில் ப்ரூப் திருத்தி உதவியவராகிய காஞ்சீபுரம் வித்வான் ஸ்ரீ. உ. வே. நரசிம்மாசாரியார்ஸ்வாமி திறத்தில் தலையலால் கைம்மாறிலேன்.

தற்காலத்திலுள்ள பேப்பர் விலையும் அச்சுக்கூலியும் பார்க் கும்போது புத்தகம் பதிப்பிப்ப தென்பது அடியேனைப் போன்ற வர்கட்குக் கனவிலும் கருத முடியாத ஒன்றாகும். ஆசையோ பெரிது; அரங்கன் திருவருளால் எளியேன் கனவை நனவாக்கும் வகையில் இப் புத்தகம் வெளிவருவதற்குப் பொருளுதவி செய்த

திருமலை திருப்பதிதேவஸ்தானத்தாருக்கும், T.V.S. சுந்தரம் சாரிடீஸ் நிர்வாகிகளுக்கும். ஸ்ரீமத்பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரிய ஜீயர்ஸ்வாமிக்கும், சேஷசாயி பேப்பர் மில் EXECUTIVE SECRETARY ஸ்ரீ S. K. நடராஜன்அவர்கட்கும், T. S. கிருஷ்ணா சாரிடபிள் டிரஸ்ட் நிர்வாகிகளுக்கும் கர்சான் கோசேஷாசலம் சிமாதாபவுண்டேஷன் நிர்வாகிகளுக்கும், S. எதீந்த்ரலுசெட்டி சாரிடியினருக்கும், ஸ்ரீ மான் C. வெங்கடாசலம் செட்டியார் அவர்கட்கும், ஸ்ரீ M.S. சுந்தரம் பிள்ளை அவர்கட்கும், மேலும் உதவுவதாக வாக்களித்துள்ள மற்ற சாரிடியினருக்கும் எளியேனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன் குறித்த காலத்தில் அழகிய முறையில் அச்சிட்டுக் கொடுத்துதவிய ரவிசங்கர் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. V. மாணிக்கம் அவர்களுக்கும், மில் விலைக்கு பேப்பர் கொடுத்து உதவிய, ஈரோடு சேஷசாயி பேப்பர் மில் நிர்வாகிகளுக்கும் எனது நன்றி உரித்தாகுக. எளியேன் பதிப்பித்தவற்றில் ஏதும் பிழையிருப்பின் கருணைகூர்ந்து தெரிவித்தால் வருங்காலத்தில் திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும்.

'இந்நூலைப் பாலர் முதல் பண்டிதர்வரை பலரும் படித்துப பயன்பெறுவதுடன் ஸ்ரீ ஆண்டாள் அரங்கன் திருவருளால் நீங்காத செல்வம் நிறைந்து, வாயு நன் மக்களைப் பெற்று, நல்ல பதத்தால் மனை வாழ்க என்று வேண்டிநிற்கிறேன்.

செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்.

சென்னை-11.
1—2—85

தொண்டர்தொண்டன்
R. கண்ணன்.

ஶ்ரீ:

திருப்பாவை ஈராயிரப்படி

வேதத்தின் விழுப் பொருளை விளக்குவதற்காகத் தோன்றிய திருப்பாவைக்குத் தோன்றிய வ்யாக்யானங்கள் பலப்பல. அவற்றுள் ஈராயிரப்படி, நாலாயிரப்படி இரண்டு வ்யாக்யானங்களையும் அருளிச் செய்தவர் பரமகாருணிகரான திருநாராயண புரம் "ஆய்" என்கிற ஜநந்யா சார்யர் ஆவார். இவரது இயற் பெயரோ, வாழ்க்கை வரலாறுகளோ எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் இவர் மகா மேதாவியாய், பரம சாந்தி குணசீலராய் விளங்கினார் என்பது தெரியவருகிறது. வடமொழியில் "ஜனனீ" என்பதும், தமிழில், "ஆய்" என்பதும் "தாய்" என்னும் பொருளதாகும். சிருங்கிபேரபுரத்தில் (கங்கைக்கரையில்) இலக்குவன் இராமபிரானுக்கு குகனைப்பற்றி அறிமுகம் செய்து வைக்குங்காலத்து "தாயினும் உயிர்க்கு நல்லான்" என்று கூறியதாகக் கம்பர் குறிப்பிடுகிறார். திரு எட்டெழுத்தின் பெருமையைக் கூறப் புகுந்த திருமங்கை யாழ்வார், "பெற்ற தாயினும் ஆயின செய்யும்"! என்கிறார். அதுபோன்று இவ்வா சாரியர் மேல்கோட்டை திருநாராயணபுரத்தில் எழுந்தருளி யுள்ள "யதிராஜஸம்பத்குமாரர்" என்று அழைக்கப்படுகின்ற செல்வப்பிள்ளைக்குத் தஞ்சமாகிய தாயைப் போல புஷ்பகைங் கர்யம் முதலிய இடையறாத தொண்டு செய்து போந்த படியாலே "ஆய்" (தாய்) என்றே அழைக்கப் பெற்றார் போலும்.

கச்சிமாநகரில் உள்ள பேரருளாளனின் நியமனத்தால் "தேவராஜர்" என்கிற நாலூராச்சான்பிள்ளை ஈடுவ்யாக் யானத்தைக் காஞ்சீபுரத்திலிருந்து திருநாராயணபுரம் கொண்டு போய், அங்கே திருவாய் மொழிப்பிள்ளை, ஆய் அஹோபிலமட மூலபுருஷர் முதலானோர்க்குக் காலக்ஷேபம் ஸாதித்தார் என்பர். "ஶ்ரீசைலநாதகுரு, மாத்ரு குரூத்தமாப்யாம் ஶ்ரீ ஸூக்தி தேசிக வரேணச யஸ்த்ரிதைவம்" என்பதன் மூலம் இதனை அறியலாம்.

ஆசார்யஹ்ருதயத்துக்கும், ஶ்ரீவசனபூஷணத்துக்கும் முதன் முதலாக வ்யாக்யானம் அருளிச் செய்தவர் இவரேயா வார். விசதவாக்சிகாமணியான ஶ்ரீ மணவாளமாமுனிகள், "ஜ்ஞானசதுர்த்தியின் மேலேயிறே ஆநந்தஷஷ்டிகளுக்கு உதயம்" என்கிற ஆசார்யஹ்ருதய சூர்ணிகையின் வ்யாக்யானம் இவர்பால் கேட்டறிந்தார் என்பர். திருவயிந்திரபுரத்தில் வில்லிபுத்தூர்ப் பகவர் அனுஷ்டானமும் இவரே அருளியதாகக் கூறுவர்.

இவர் திருப்பாவைக்குச் செய்தருளிய வ்யாக்யானங்களில் இவரது பரந்த தமிழ்ப் புலமையும், வேத சாஸ்திர இதிஹாஸ புராணங்களில் பாரங்கதர் என்பதும் நன்குபுலப்படுகிறது.

"ஶ்ரீதேவராஜகுருதோ த்ரவிடாக மாந்த
பாஷ்யம் ஹ்யவாப்ய புவிய : ப்ரதயாஞ்சகார
தம் யாதவாத்ரிபதி மால்ய ஸமர்ப்பணைக
நிஷ்டம் பஜேய ஜநநீகுரும் அஸ்மதார்யம்"

திருப்பாவைத் தனியன்கள்

நீளாதுங்கஸ்தன கிரிதடீஸுப்தம்
உத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்
ஸித்தம் அத்யாபயந்தீ
ஸ்வோச் சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம்
யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம்
பூய ஏவாஸ்து பூய :

அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கர்க்குப்
பன்னுதிருப்பாவை பல்பதியம்-இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள்நற்பாமாலை பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக்கொடுத்த சுடர்க் கொடியே தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய்— நாடி நீ
வேங்கடவர்க் கென்னை விதியென்ற இம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.

முடிவில் சொல்ல வேண்டியவை

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடம் தோன்றுமூர்—நீதியால்
நல்ல பத்தர் வாழுமூர் நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோனூர்.
பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே.
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே.
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே.
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே.
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே.
உயரரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே.
மருவாருந்திருமல்லி வளநாடி வாழியே.
வண்புதுவை நகர்க் கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

—ஆண்டாள் திருவடிகளே சரணம்—

ஸ்ரீ :
ஸ்ரீ மத்யை கோதாயை நம :
ஸ்ரீ மதே ராமானுஜாய நம :

அவதாரிகை

எம்பெருமானாரை "ஒருரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச் செய்யவேணும்" என்ன, "திருப்பல்லாண்டுக்கு ஆள்கிடைச்கினும், திருப்பாவைக்கு ஆள்கிடையாது" என்றருளிச் செய்தார். (1) "மோவாயெழுந்தமுருடர்கேட்கைக்குஅதிகாரிகளல்லர்; முலையெழுந்தார் கேட்க வேணும்; அவர்களிலும் எம்பெருமானைத்தாங்கள் அனுபவிக்கவேணுமென்றிருக்கும் (2)பரிவாணிச்சிகளான பிராட்டி மார்க்கும் கேட்க நிலமல்ல. பல சொல்லியென்? பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையான தானே சொல்லித்தானே கேட்குமித்தனை" என்றருளிச் செய்தார்.

ஒரு பர்வதத்துக்கும் பரமாணுவுக்கும் உள்ள வாசி (வித்தியாசம்) போரும் ரிஷிகளுக்கும் ஸம் ஸாரிகளுக்கும்; அத்தனை வாசி போரும் ஆழ்வார்களுக்கும் ரிஷிகளுக்கும். அப்படியே பெரியாழ்வாருக்கும் ஆழ்வார்களுக்கும். அத்தனை வாசி போரும், பெரியாழ்வாருக்கும் திருமகளாருக்கும் பதின்மருடைய ஞானமும் ஸ்த்ரீதனமாக இவள் பக்கலிலேயிறே குடிகொண்டது. பத்துப் பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே.

ஆழ்வார்கள் எம்பெருமானாலே (3) மயர்வற மதி நலமருளப் பெற்றனர். இவள்தான் எம்பெருமானுக்கு மயர்வற மதிநலமருளினாள்; இவள் அருளுகையாவது எம்பெருமானை யெழுப்பித் தன்குறையை எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்கை.

இளையபெருமாள்படி ஆழ்வார்களது; ஸ்ரீ பரதாழ்வான்படி பெரியாழ்வாரது. ஸ்ரீ சத்ருக்னாழ்வான்படி அவர் திருமகளது. ஆழ்வார்களும் இளையபெருமாளும் பகவதனுபவத்தை ஆசைப்பட்டார்கள்; ஸ்ரீபரதாழ்வானும்பெரியாழ்வாரும் பகவத்ஸம்ருத்தியை ஆசைப்பட்டார்கள் ஸ்ரீசத்ருக்னாழ்வானும் நாய்ச்சியாரும் ஸ்ரீ மதுரகவிகளோடொப்பர்கள். நாய்ச்சியார் பெரியாழ்வாரையே உபாயமாக விச்வஸித்திருப்பர்.

இளையபெருமாள் (4) பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்தரானாப் போலே இவளும் தொடக்கமே பிடித்து ஸ்நேஹித்துப் போரும். இப்படி விலக்ஷணையான நாய்ச்சி யாரருளிச் செய்த ப்ரபந்தமிறே திருப்பாவை.

---

(1) மோவாயெழுந்த முருடர் = மீசை தாடி முளைத்த ஆண் பிள்ளைகள் (பெண்களே கேட்பதற்குத் தகுதியுள்ளவர் என்பது கருத்து.

(2) பரிவாணிச்சிகள் = பரிவுடைய (அன்புடைய) பெண்கள்

(3) மயர்வற மதிநலமருளல் - அஜ்ஞானத்தை நீக்கி தூய ஞானத்தைப் பெறச்செய்தல்.

(4) பால்யாத் ப்ரப்ருதிஸுஸ்நிக்தர் = இளமை தொடங்கியே நெருக்கமான அன்புள்ளவர்.

இப்ப்ரபந்தத்துக்குக் கருத்து—மார்கழி நீராட என்கிற இத்தை ஒரு வ்யாஜமாகக் கொண்டு நோன்பு முன்னாக எம்பெருமானை, "உனக்கு (5) சேஷமாயிருக்கிற இவ்வாத்மா (6) அனர்த்தப்படாதபடி பண்ணி இதற்கு (7) ஸ்வரூபானுகுணமான கைங்கர்யத்தையும் கொடுத்து அதுதான் (8) யாவதாத்மபாவியாம்படி பண்ணியருளவேணும் என்றபேக்ஷிக்கிறாள்.

அர்ச்சுனன் (9) ஷட்கத்ரயத்தாலும்கூட "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று அவனைக்கொண்டு உபாயத்தை அறுதியிடுவித்தாப்போலே இவளும் முதற்பாட்டில் நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று உபாயத்தை அறுதியிட்டுச் 'சிற்றஞ் சிறு காலையிலே" (10) உபேயத்தை அறுதியிட்டுக்கொண்டு நடுவே தேஹயாத்திரைக்கு உடலாக்கிவிடுகிறாள்." அன்றெனக் கவை பட்டினி நாள்" என்னுமவர்களிறே. "ஒழிவில் காலமெல்லாம்" என்று முண்டிறே. (11) மாலாகாரர் மகளிறே.

ஆழ்வார்களுக்கு (12) அந்யாபதேசம் ஆண்களாயிருக்கச் செய்தே பெண்களாகை. இவளுக்கு அந்யாபதேசம் ப்ராஹ்மணியான இவள் இடைச்சியாகை." "குலம்தரு"மிறே "பண்டைக்குலத்தைத் தவிர்ந்து" என்று முண்டிறே.

இவளுடைய ஞானபக்திகள் க்ஷணந்தோறும் பகவத் விஷயத்திலே கைவளர, வடபெருங்கோயிலுடையான் முகங்கொடாதேயிருக்க, இவளும் (13) ஐச்வர்யார்த்திகளுக்காக எல்லை நடந்து

---

(5) சேஷம் = அடிமை

(6) அநர்த்தப்படாதபடி = கெட்டுப் போகாதபடி

(7) ஸ்வரூபானுகுணமான = அடியவனாயிருக்கையாகிற ஆத்மஸ்வரூபத்துக்குத் தகுந்ததான

(8) யாவதாத்ம பாவியாம்படி = ஆத்மா உள்ள காலம் வரையிலுமிருக்கின்றவாறு

(9) ஷட்கத்ரயம் = பகவத்கீதையின்மூவாறு (பதினெட்டு அத்தியாயம்)

(10) உபேயத்தை = அடையத்தக்க பயனை (புருஷார்த்தத்தை)

(11) மாலாகாரர் = கம்ஸனை வதம் செய்யக் கண்ணன் மதுரைக்குச் சென்றிருந்தபோது சந்துகளையெல்லாம் தாண்டி கஞ்சனுக்குப் பூமாலை தொடுத்துத் தரக்கூடிய மாலாகாரர் வீட்டுக்குத்தானே தேடிச்சென்று அவர் அளித்த பூமாலையைக் கண்ணன் அன்புடன் ஏற்றுக்கொண்டார். அம்மாலாகாரரைப் போலவே பெரியாழ்வாரும் வடபெருங்கோயிலுடையானுக்குப் பூமாலை தொடுத்து ஸமர்ப்பித்து வந்தார் அதனால் பெரியாழ்வாரும் "மாலாகாரர்" என்றழைக்கப்படுகிறார்.

(12) அந்யாபதேசம் = மற்றொருவராய்த் தன்னை ஏறிட்டுக் கொள்ளல்

(13) ஐச்வர்யார்த்திகளுக்காக = இம்மை, மறுமை (ஸ்வர்க்கம்)ச் செல்வங்களை விரும்புமவர்களுக்காக

கொடுத்து இளைப்பாலே கிடக்கிறான்" என்று புத்தி பண்ணித் தன் திருமுலைத் தடங்களையிட்டு நெருக்கினாள்; அத்தாலும் எழுந்திருந்து (14) ப்ரதிவசனம் பண்ணக் கண்டிலள். காணாமையாலே (15) வ்யஜனாதிகளாலே மீளவும் (16) சிசிரோபசாரம் பண்ணினாள். அத்தாலும் எழுந்திருக்கக் காணாமையாலே "இது நோவல்ல; நம் பக்கல் (17) ப்ரணயாபராதத்தாலே கிடக்கிறான்" என்று நினைத்து மிகவும் தளர்ந்து திருவாய்ப்பாடியில் பெண்களை அனுசந்தித்துப் பார்த்தாள் அது காலாந்தரத்திலே ஆகையாலே உதவப் பெற்றிலோம் என்று தளர்ந்து மிகவும் (18) அவஸந்நையாய், நமக்கு தரிக்கைக்கு விரகு (உபாயம்) என்? என்று கூப்பிடச் செய்தே சில (19) சாபராணிப்ரப்ருதிகள் க்ருஷ்ணாவதாரத்திலே க்ருஷ்ணனோடே கலந்து பிரிந்த பெண்கள் தங்களாற்றாமையாலே "துஷ்ட காளிய திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா" என்று க்ருஷ்ணனை (20) அனுகரித்து தரித்தாப்போலே இவளையு மனுகரித்து தரிக்கச் சொல்ல, இவளும் க்ருஷ்ணனை அனுகரிப்பதிலும், க்ருஷ்ணனை அனுகரித்த பெண்களை அனுகரிக்கை நன்று என்று பார்த்து அனுகரித்துத் தரிக்கிறாள். அவ்வனுகாரம் முற்றி இடை முடியும், இடை நடையும், இடைப்பேச்சும்: முடை நாற்றமுமாய் விட்டது. இப்படி தானிருந்த ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், வடபெருங்கோயில் ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகையாகவும், வடபெருங்கோயிலுடையானே க்ருஷ்ணனாகவும், தன்னைப் பிராட்டியாகவும் தோழிமாராகவும் அனுகரித்துக்கொண்டு நோற்கிறாள்.

நோன்புக்கடியென்னென்னில்? மீமாம்ஸையிலே (21) ஹோளாதிகரணந்யாயத்தாலே சிஷ்டாசாரஸித்தம். "மேலை

---

(14) ப்ரதிவசனம் = பதில் வார்த்தை.

(15) வ்யஜனாதிகள் = திருவாலவட்டம் (விசிறி) முதலியன.

(16) சிசிரோபசாரம் = களைப்புடன் வருபவர்களுக்கு அது நீங்கப் பண்ணும் குளிர்ந்த உபசாரம்.

(17) ப்ரணயாபராதத்தாலே = மிகப்பெரியவனான நம்மை மிகத் தாழ்ந்தவளான இவள் விரும்புகிறாளே என்று நம்முடைய காதலையே அபராதமாகக் கருதி அத்தாலே

(18) அவஸந்நை = துன்பமடைந்தவள்

(19) சாபராணி ப்ரப்ருதிகள் = காடு வாழ் சாதியான வேடுவிச்சிகள் முதலியோர்.

(20) அனுகரித்து = ஒருவர் செயலைப்போல் மற்றொருவர் செய்கை (Imitate)

(21) ஹோளாதிகரணந்யாயம் = ஹோளா வஸந்தோத்ஸவம் (ஹோலிப்பண்டிகை) ச்ருதி ஸ்ம்ருதிகளில் இல்லாவிட்டாலும் பெரியோர்கள் அனுஷ்டித்துவருவதனால், ச்ருதி முதலியவற்றைப்போல் பெரியோர்களுடைய அநுஷ்டானமும் நமக்கு ப்ரமாணமென்று சட்டம் செய்த நூற்பகுதிக்கு ஹோளாதிகரணமென்று பெயர் அதில் கூறிய ந்யாயமாவது—முற்கூறிய சட்டம் வேதம் ஸ்ம்ருதி இவற்றில் விதிக்கப்படாமலிருந்தாலும் ஹோலிப்பண்டிகை முதலியன போன்று பெரியோர்கள் ஆசாரப்படி நடைமுறையில் கொண்டாடப்படும் நோன்பு.

யார் செய்வனகள் '' என்று நோன்பு நோற்க அறுதியிட்ட வாயாலே எல்லை நிலத்திலே நிற்கிற நாய்ச்சியார் தாமே அருளிச்செய்தார். ''பொய்யேநோற்கிறோ'' மென்று சொல்லலாமோ வென்னில், விவாஹஸமயத்திலும்(22)ப்ராணாந்திக ஸமயத்திலும் பொய் சொல்லலாம்'' என்று சாஸ்த்ரமுண்டு. உண்டென்று சொல்ல வேணுமோ ? அனுஷ்டானமேயன்றோ ப்ரதானம். இவ்விரண்டுக்கும் கைம்முதல் வேறே தேடவேணுமோ ? இவர்களுடைய ஆற்றாமைதான் என் செய்யாது ?

அழகிது, இதுதானிங்கு விளைந்தபடியென்னென்னில்' ச்ரியப்பதியாய், (23) அவாப்தஸமஸ்த காமனாய், புருஷோத்தமனாய், புண்டரீகாக்ஷனாய் ஸ்ரீ வைகுண்ட நிகேதனனாய், (24) ஸாத்விகைஸ்ஸேவ்யமானனாயிருக்கிற . ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே(25)நிர்ஹேதுகமாக வந்து பிறந்தருளி தன்னுடைய சீலாதிகளாலே ஜனங்களை ஈடுபடுத்தி வாரிப் பிடித்துக் கொண்டு போவானொருவனாகையாலே (26) ததர்த்தமாக திரு வாய்ப்பாடியிலே வந்து திரு வவதரித்துப் பெண்களும் தானுமாய் வளர்ந்தருளுகிற காலத்திலே க்ருஷ்ணனும் (27) ப்ராப்தயௌவனனாய் பெண்களும் குமாரிகளாயிருக்கிற இருப்பைக் கண்டு '' இவனிப்படி தூர்த்தனாயிரா நின்றான், இவன்பாடு பெண்கள் சேரக் கடவர்களன்று'' என்று எல்லாருமாகத் திரண்டு இப்பெண்பிள்ளைகளை நிலவறைகளிலே அடைத்தார்கள் ; க்ருஷ்ணன் பிறந்தபின்பு வெண்ணெய்களெல்லாம் மறைய வைத்தார்கள். இப்படி வெண்ணெயும் பெண்களும் க்ருஷ்ணனும் பிரிந்த தர்ம ஹாநிகண்டாவது, இவர்கள் பண்ணின பாக்யமாவது (28) நாடு வர்ஷமின்றிக்கேநோவுபட்டு பசுக்களுக்கு ஊணின்றிக்கே ப்ராணனின்றிக்கே (29) ஸஸ்யவ்ருத்திகளுமில்லையாய்த்து நாடு வர்ஷமின்றிக்கே இருக்கிறபடிகண்டு கோப வ்ருத்தர்களெல்லாரும் திரண்டு '' பசுக்களும் மனுஷ்யரும் பிழைக்கைக்கு விரகென்? ''

---

(22) ப்ராணாந்திகஸமயத்திலும் = உயிர் போகும் தருவாயிலும்

(33) அவாப்தஸமஸ்தகாமனாய் = எல்லா விருப்பங்களும் நிறைவேறப்பெற்றவனாய்

(34) ஸாத்விகைஸ்ஸேவ்யமானனாய் = ஸத்வகுணமுடையவர்களாலேவணங்கப்படுகிறவனாய்

(25) நிர்ஹேதுகமாக = ஒருகாரணமுமில்லாது,

(26) ததர்த்தமாக அதன் பொருட்டு

(27) ப்ராப்தயௌவனனாய் = வாலிபப்பருவத்தை அடைந்தவனாய்,

(28) வர்ஷமின்றிக்கே = மழையில்லாது

(29) ஸஸ்யவ்ருத்திகள் = பயிர்களின் செழிப்பு

என்று விசாரிக்க, அசரீரிபோலே புருஷவாக்யம்'' வர்ஷதேவதை த்ருப்தனாக வர்ஷமுண்டு'' என்று பிறக்க இவர்களும்'' வர்ஷார்த்தமாக இவ்வூரில் பெண்களடைய நோற்கக் கடவர்கள் என்றார்கள் இக்கிரமம் 'அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:'' என்றது போய் '' அகால பலிநோவ்ருக்ஷா : '' என்று புண்யகாலம் வந்தாப் போலேயிருந்தது (30) வர்ஷார்த்தமாக நோற்கைக்காக நிலவறைகளிலே அடைத்த பெண்களைப் புறப்படவிட்டு நந்தகோபர் வ்ருத்தராகையாலே எல்லாவற்றுக்கும் கடவனாக கிருஷ்ணனையும் (31)ஸாந்த்வவாதனம் பண்ணி பெண்களையும்கிருஷ்ணனையும் சேரவிட்டு சரணம் புக கிருஷ்ணனும் 'கோபீபரிவ்ருதோ ராத்ரிம் சரச்சந்த்ர மனோரமாம் என்று சொல்லுகிறபடியே (32) தண்டவிட்டநிலவும் (33) விள்ளலிட்ட நாண்மலர்ச் செறிவும் இருண்ட சோலையும் (34) பளிங்குப்பாறையும் (35) செங்குன்றுத்தாழ்வரையும் பரப்புமாறப்பூத்த காவியோடையும் (36) நாயடியிட்டுப் புகுந்த தென்றலுமாயிருக்கிற யமுனா தீரத்திலே பஞ்சலக்ஷம் குடியில் பெண்களையடைய மெய்க் காட்டிக் கொண்டு (37) கழகமிருந்து இனிநாம் (38) வைகவிருக்கில் மாதாபிதாக்கள் (39) அதிசங்கை பண்ணுவர்கள் உந்தமகங்களிலே போய்ச் சேருங்கோள்'' என்று தானும் நப்பின்னைப் பிராட்டி திருமாளிகை சேர, பெண்களும் தம் தாமகங்களிலேபோய்ப்படுக்கையிலே சேர, படுக்கை அடிக்கொதித்து மென்மலர்ப் பள்ளி வெம்பள்ளியாய் மத்யராத்ரியிலே எழுந்திருந்து . சிலர் உறங்குகிற பெண்பிள்ளைகளை எழுப்புகிறார்கள்.

---

(30) வர்ஷார்த்தமாக = மழையின் பொருட்டு

(31) ஸாந்த்வவாதனம்பண்ணி தேற்றரவுசெய்து (சமாதானப்படுத்தி.)

(32) தண்டவிட்டநிலவு = முழுமையாக நன்கு ஒளி வீசித் திகழ்கின்ற நிலவு.

(33) விள்ளலிட்ட நாண்மலர்ச் செறிவு அப்போதலர்ந்த பல வண்ணப்பூக்களின் திரட்சி

(34) பளிங்குப்பாறை ஸ்படிகமணிபோலே நிர்மலமான கற்பாறை.

(35) செங்குன்றுத்தாழ்வரை = அழகிய மணற்குன்றின் பக்கத்திலுள்ளபகுதி

(36) நாயடியிட்டுப் புகுந்த தென்றல் தென்மேற்குதிக்கிலுள்ள (நாய் என்பது நாயைக் குறிப்பாகவுடைய நிருதியைக் காட்டி பிறகு அவன் பாலனம் செய்கிற தென்மேற்குத் திசையைக் காட்டிற்று) மலயபர்வதத்தில் ஸஞ்சரித்து வாராநின்ற தென்றற் காற்று.

(37) கழகமிருந்து = கூட்டமாகஇருந்து (கோஷ்டியாக இருந்து

(38) வைகவிருக்கில் - தாமதிப்போமானால்.

(39) அதிசங்கை பண்ணுவர் = சந்தேகப்படுவர்.

உறங்குகிறார் ஆர்? எழுப்புகிறார் ஆர்? என்னில் (40) குணவித்தர் உறங்குகிறார்கள். (41) கைங்கர்யபரர் எழுப்புகிறார்கள். (42) ராமசரம் (43) ஒரு படிப்பட்டிராதிறே' 'சிந்நம் பிந்நம்''; அப்படி கிருஷ்ண குணங்களும் நாநாவாயிறே இருப்பது. இரண்டு ப்ரகாரமும் பரமபதத்திலுமுண்டு "அமரரும் முனிவருமிறே. முனிவரோடொப்பார் உறங்குகிறார்கள். அமரரோடொப்பார் எழுப்புகிறார்கள்.

ஆக நோன்புக்குக் காலத்தைச் சொல்லி, இதுக்குச் செய்யக் கடவன சொல்லி, அனுமதி பண்ணினார்க்குண்டான நன்மை சொல்லி, வர்ஷிக்கும் படியை நியமித்து நாமிதிலே அந்வயிக்கவே (44) ஸகல பிரதிபந்தகங்களும் போம்'' என்று சொல்லி மேல்பத்துப் பாட்டாலே ஒருவரையொருவர் எழுப்புகிறார்கள். மேல் (45)விசதமாக விருக்கும்:

ஈராயிரப்படியில் அவதாரிகை முடிந்தது

---

(40) குணவித்தர் = குணத்துக்குத் தோற்றவர் (நந்திக்கிராமத்தில் 14 ஆண்டுகள் ராமகுணங்களையே நினைந்துநைந்து உருகியிருந்த பரதாழ்வாரைப் போன்றவர்.)

(41) கைங்கர்யபரர் = தொண்டு செய்வதில் ஊற்றமுடையவர் பிரியில் தரியேன் என்று காட்டிற்குத் தொடர்ந்து சென்று எல்லா விதமான அடிமைகளும் செய்த இளையபெருமாளைப் போன்றவர்.

(42) ராமசரம் = ராமபாணம்

(43) ஒரு படிப்பட்டிராது = ஒரே விதமாய் இராது, (பலவிதமான செயல்களைச் செய்யும் என்றபடி)

(44) ஸகலப்ரதிபந்தகங்களும் = எல்லாவிதமான இடையூறுகளும்

(45) விசதமாக = விளக்கமாக.

ஸ்ரீ

திருப்பாவை ஈராயிரப்படி வ்யாக்கியானம்-முதற்பாட்டுக்கு வாக்யார்த்தம்

(1) "ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும் நாராயணனே" என்று அருளிச் செய்கிறார்,

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்குமாய்ப் பாடிச் செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோரெம்பாவாய்.

(மார்கழித்திங்கள்) கிருஷ்ணனோடே தங்களைக் கூட்டின காலத்தைக் கொண்டாடுகிறார்கள். "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்" என்று நிலைநின்ற தர்மத்தைப் பற்றுகிற காலம். மழைவிழுந்து ஹ்ருதயம் குளிர்ந்து ஸத்வோத்தரமான காலம். மலையினுச்சியில் கிடந்த (2) ஸஸ்யங்களும் நிலத்தில் கிடந்த ஸஸ்யங்களும் ஒக்கப்பருவம்செய்யும்காலம் "சைத்ர: ஸ்ரீமாநயம்மாஸ:" என்று பெருமாளை அனுபவிக்க வந்தவர்கள் சைத்ரமாஸத்தைக் கொண்டாடினாப்போலே மார்கழி மாஸத்தைக் கொண்டாடினார்கள். (மார்கழித்திங்கள்)" மாஸாநாம் மார்க்கசீர் ஷோஹம்". என்று எம்பெருமானும் அபிமானித்த மாஸமாகையாலே வைஷ்ணவமாஸம்.

(மதிநிறைந்த) "ஆபூர்யமாணே புண்யே நக்ஷத்ரே" என்று பூர்வபக்ஷமுமாகப் பெற்றது. (மதி நிறைந்த) பஞ்சலக்ஷம்குடியில் சந்த்ரர்களும் திரண்ட நாள் "திங்கள் திருமுகத்துச் சேயிழையாரிறே" (மதி நிறைந்த நன்னாள்) அத்யமே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதாச மேநிசா" என்று கம்ஸ ஸம்பந்தத்தாலே விடிவு காணப் புகா நின்றோமே" என்றிருந்த அக்ரூரனுக்கு விடிந்தாப் போலே விடிந்த நாள். (நன்னாளால்) (3) ப்ரக்ருத்யாத்ம விவேகம் பிறந்த நாள்.

(நீராட) அவனைப் பிரிந்த காலமாகையாலே சீத காலமே கோடைகாலமாய் விரஹதாபமாறக் குளிக்கை எம்மடுவிலே தான் இவர்கள் நீராடுகிறதென்னில், * தயரதன் பெற்ற மரதக

---

(1) ப்ராப்யப்ராபகங்கள் = அடையப்படும் பயனும் அடைவிக்கும் நெறியும்.

(2) ஸஸ்யங்கள் = பயிர்ப்பச்சைகள்.

(3) ப்ரக்ருத்யாத்ம விவேகம் = உடலைவிட உயிர்வேறு என்னும் பகுத்தறிவு.

மணித்தடத்திலேயிறே. தங்கள் (4) குணசேஷ்டி தங்களாலே வயிரவுருக்காக வுருக்கி வைத்தார்களாகக் கொள்ளீர் கிருஷ்ணனை (நீராட்) என்றது—மாறி மாறித் தங்கள் மெல்லிய தோளிலே அவன் தோயவும் இவர்கள் அவன் மார்பிலே தோயவுமிறே. அதாவது ' அப்பன் திருவருள் மூழ்கினள் இறே (போதுவீர்) (6) இச்சாமாத்ரமே அதிகாரம் (போதுவீர் போதுமினோ) அம்மடுவி லிறங்கும்போது தனி இறங்கவொண்ணுதாய்க் கொள்ளீர்' ஏக. ஸ்ஸ்வாது நபுஞ்ஜீத என்று—நல்லது கண்டால் தனி (7) புஜிக்குமவர்களன்றிறே (போதுவீர் போதுமினோ)' போருகைதானே ப்ரயோஜநம். " அழைப்பன் திருவேங்கடத் தானைக் காண —இறே அவ்விஷயத்துக்குத் தனி (8) வர்த்தக மானவோபாதி இவ்விஷயத்துக்குத் திரள் வர்த்தகம் " " தொண்டீர் எல்லாரும் வாரீர் இறே (நேரிழையீர்) மார்கழி நீராடவென்று நினைப்பிட்டபின்பு பெண்களுடம்பிலே பிறந்த செவ்வி " உருவுடையார் " என்றபடியே வடிவழகமைந்திருக் கிறது. (10) ப்ரதிபத்தியை ஆபரணமாகவுடையார்.

(சீர்மல்குமாய்ப்பாடி) கண்ட விட மெங்கும் கிருஷ்ணன் தீம்பு களும் அவன் வார்த்தைகளுமாய்ச் செல்லுகை. "கோவிந்த தாமோதர மாதவேதி" (செல்வச்சிறுமீர்காள்) பெண்களுக்கு (11) ச்ரீமத்தையாவது "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்று இளையபெருமாளைப் போலேயிருக்கை. (சிறுமீர்காள்) 'மறந்தும் புறந் தொழாமாந்தர்'

(கூர்வேல்கொடுந் தொழிலன் நந்த கோபன் குமரன்) நம்ம (12) பேக்ஷிதம் செய்து (13) தலைக் கட்டுவானொருவன் (கூர்வேல்) பெரியாழ்வார் மகளிறே. அங்குத்தைக்குக்காவலுண்டென்று தரித்திருக்கிறள் பிள்ளைபிறந்தவாறே வேலைக்கடைய விட்டான் :'மாணிக்கமே என் மணியே'' யிறே இதுடையவர்கள் காலிலேயிறே லோகமாகக் குனிவது :(நந்தகோபன்) "நந்தாமி பச்யந்நபிதர்சனேந பவாமித்ருஷ்ட்வாச புனர்யுவேவ'' ' யுவேவ் வஸுதேவோ பூத் விஹாயாப்யாகதாம் ஜராம்.'' பிள்ளையைக்

---

(4) குணசேஷ்டிதங்கள் குணங்களும் திருவிளையாடல் களும்

(5) வயிரவுருக்கு = வைரத்தைப் போலக் கடினமான இதயத்தையும் உருக்குவது.

(6) இச்சாமாத்ரமே அதிகாரம் = ஆவல் ஒன்றே தகுதி

(7) புஜிக்குமவர்கள் = அனுபவிக்குமவர்கள்.

(8) வர்த்தகமானவோபாதி = வளர்ச்சியுறச் செய்யுமது போல

(9) செவ்வி = அழகு.

(10) ப்ரதிபத்தி = நீராட வேண்டுமென்ற நினைவு.

(11) ச்ரீமத்தை செல்வம்மிக்கிருக்கை.

(12) அபேக்ஷிதம் விரும்பப்படும் பொருள்.

(13) தலைக்கட்டுவான் = முடித்துத்தருமவன்.

கண்டப்ரீதியாலே ஆநந்தத்தை உடையனுகவுமாம், நரைதிரை மாறி இளகிப்பதித்தபடி யென்று மாம். (குமரன்) சக்ரவர்த்தி திருமகன் போலே விநயம் பாவித்திருப்பன்.

(ஏரார்ந்த கண்ணி) "ஸதாபச்யந்தி" என்று பிள்ளையைக் கண்கைக்குத் திறந்திடுவாசலாக நிலைக்கதவைப்பிடுங்கிப் பொகட்ட கண்கள் தமப்பனுர், கைபாலே வேலொன்றும் கொண்டு நோக்கும் * அம்பன்ன கண்ணுள் அசோதை ஆகையாலே இவள் முகத்திலே அம்பிரண்டு கொண்டு நோக்கும். (அசோதை) "அஞ்சவுரப்பாளசோதை ஆணுடவிட்டிட்டிருக்கும்." அனுமதிபண்ணி நாட்டுக்கும் யசஸ்ஸைக் கொடுக்க வல்லள். (இளஞ்சிங்கம்) அவனுக்குக் குமரன் இவளுக்கு இளஞ்சிங்கம் ஒருத்தரும் முடி சூட்ட வேண்டா அதுக்கு. தானே (14) ம்ருகேந்த்ரமிறே. கம்ஸனை முடிக்கச் செய்ய வல்லமிடுக்குண்டாகை.

(கார்மேனி) நம்முடைய விடாயெல்லாம் தீரும்படியான அழகியதிருமேனி. (கார்மேனி) ஆச்சரியமான திருமேனி. "நீலமேக நிபமஞ்ஜனபுஞ்ஜச்யாம குந்தளம்" என்று ஆழ்வானருளிச் செய்தபடியே இருந்த திருமேனி. அவர்கள் நீராடப்புக்கவாறே பின்பு அவனுடம்பிலே இட்ட செவ்வி (செங்கண்) நம்பக்கல் வாத்ஸல்யாதிசயத்தாலே குதறிச் சிவந்தகண்கள். அஞ்ஜனகிரியில் இரண்டு தாமரைப்பொய்கை போலே (கதிர் மதியம் போல் முகத்தான்) தங்களாபத்துதீர அவனைக் கண்டால் (15) நகடு கழற்றின சந்திரனைப்போலே இவர்களைக் கண்ட பின்பு அவன் முகம் குளிர்ந்தபடி (கதிர்மதியம்) இவன் முகம் வெய்யிலிலே நிலவை யூட்டினுப் போலேயிருக்கை "சந்த்ர பாஸ்கரவர்ச்சஸம்" "முளைக்கதிரை" என்று சொல்லும் படியிருக்கை. ஆச்ரிதர்க்கு நிலவு போலே: அநாச்ரிதர்க்கு வெய்யில் போலே ஆச்ரிதர்க்குப் புனலுருவு; அநாச்ரிதர்க்கு அனலுருவாயிருக்கும் ஆச்ரிதர்க்குச் சந்திரன்; அநாச்ரிதர்க்கு ஆதித்யன் (போல் அம்முகத்தான்) நகட்டுச் சந்த்ரனும் கார் கால ஆதித்யனும் போலல்லன். அம் (அழகிய) முகத்தையுடையவனென்னுமத்தனை. "என்மகன் முகம் நேரொவ்வாய்" என்றும், "சந்திர காந்தாநநம் ராமம்" என்றும் சொல்லுமாப் போலே.

(நாராயணனே) (16) கோவர்த்தனேத் தரணுதிகளாலே அபலைகளான பெண்களுக்கும் கூடத் தெரியும்படி ஈச்வரத்வம் (17) இரு பொறியிட்டுக் கொண்டு போருகையாலே இத்

---

(14) ம்ருகேந்த்ரம் = மிருகங்களுக்கு அரசனுனசிங்கம்.

(15) நகடு கழற்றின சந்திரன் = களங்கத்தைப் போக்கிய சந்திரன்.

(16) கோவர்த்தனேத்தரணுதி = கோவர்த்தனமலையை எடுத்தல் முதலிய.

(17) இரு பொறியிட்டுக்கொண்டு (பொறி—ஸம்ருத்தி மூன்னிலுங்காட்டில் இவ்வவதாரத்தில் இரண்டு பங்குஸம்ருத்தியை உடையதாய்க் கொண்டு (மனுஷ்யத்வேபரத்வம்).

திருநாமத்தைச் சொல்லிற்று.

"ஏஷ நாராயண : ச்ரீமான் க்ஷீரார்ணவநிகேதந :
நாகபர்யங்கம் உத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்"

என்றார்களிறே.(18)ஸமிதைபாதிஸா வித்ரிபாதியாகைபன்றிக்கே, அவன்தானே செய்யக் கடவனென்கிறது "நாராயணனே' என்ற (19)அவதாரணை (நமக்கே)(20)அகிஞ்சனரான நமக்கு "வெறிதே அருள் செய்வர் என்றிருந்த நமக்கு (21) ஸ்வயத்னஸாத்யன் என்றிராத நமக்கு (பறை தருவான்) நோன்புக்கு உபகரணங்களை —பறையென்கிறது அவனோட்டை ஸம்ச்லேஷம் அவர்களுக்குப் பறை நமக்குக் கைங்கர்யம் இது இடைச்சிகள் துடைப்பேச்சு (22) ஸகோத்ரிகளறியுமத்தனை.

(பாரோர் புகழ) நன்மை தீமையறியாதார் புகழ. க்ருஷ்ணனையும், தங்களையும் சேரவொட்டாத இடையருமிடைச்சிகளும் கொண்டாடும்படி. அனுகூலர் கொண்டாட,ப்ரதிகூலரும் கொண்டாட. இந்த ரஸமறியார்களாகிலும் நாமும் க்ருஷ்ணனும் சேர்ந்த சேர்த்தி கண்டு நாடு புகழ (படிந்து) (23) அபிநிவேசித்து முன்பு சொன்ன மடுவிலே (24) அவகாஹித்து) [படிந்து—நீராடப் போருங்கோள்[என்று கீழோடே அந்வயம். (ஏலோரெம்பாவாய் இது பாத பூரணார்த்தமான அந்வயம். ஏல்—கேள், ஓர்—இத்தை அறுதியிட்டுக்கொள். எம்பாவாய்—எம் பிள்ளாய். நோன்புக்குச் சந்தஸ்ஸென்னுமாம்.

2. வையத்துவாழ்வீர்காள் ! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்

---

(18) ஸமிதைபாதி ஸாவித்ரிபாதி = அக்னியில் ஓமம் பண்ணுங்கா லத்துஸமித்துக்கும். (ஓமத்திலிடும் அரசுபுரசுகுச்சிகள்) ஸாவித்ரி (காயத்ரீ மந்த்ரத்துக்கும்) ஸமமான முக்கியத்வம் கொடுக்குமா போலே.

(19) அவதாரணை = உறுதியாகச்சொல்லல்; தேற்றேகாரம்

(20) அகிஞ்சனர் = கைம்முதல், (மூலதனம்) ஏதுமில்லாதவர்.

(21) ஸ்வயத்னஸாத்யன் = தன் முயற்சியால் வசமாக்கித் கொள்ளத் தகுந்தவன்.

(22) ஸகோத்ரி = ஒருகுடிப் பிறந்தார்.

(23) அபிநிவேசித்து = அடைந்தாலொழிய உயிர் தரிக்க மாட்டாத கழி பெருங் காதல் கொண்டு

(24) அவகாஹித்து = மூழ்கி

(வையத்து வாழ்வீர்காள்) வழியடி உண்கிற தேசத்திலே பிறவித்துக் கொண்டிருக்கிற பாக்யவதிகாள் ! (1) க்ருஷி பண்ணும் பூமியிலே (2) பலம் புஜிக்கப் பிறந்த பாக்யவதிகாள்.

(நாமும்) '' இந்த பலம் நமக்கொரு நாள் கைவரவற்றே என்றிருந்த நாமும் ; அவனாலே அவனைப் பெறவிருக்கிற நாமும் (நம் பாவைக்கு) நம்முடைய நோன்புக்கு இந்திரஜித்துநிகும்பிலை யிலே ஹோமம் பண்ணினாப் போலேயன்றிக்கே சக்ரவர்த்தி நாலாஹுதி பண்ணி நாலு ரத்னத்தைப் பெற்றாப்போலே நமக்கொரு நோன்பு கூடுவதே '' என்று கொண்டாடுகிறார்கள். (செய்யும் கிரிசைகள்) செய்து தலைக் கட்டும் க்ரியைகள் (கேளீரோ) கேட்கைதானே உத்தேச்யம் ஸ்ரீ நாரதபகவான் ஸ்ரீ ராமாயணத்துக்குப் போக்கு விட்டாப் போலே சொல்லியல்லது தரிக்க வொண்ணாதாயிருக்கிறபடி இவள் ஆசார்யத்வம் ஆசைப் பட்டன்று, இவர்கள் '' சொல்லாய் '' என்னச் சொல்லுகிறிலள்

(பாற்கடலுள் பையத்துயின்ற) திருப்பாற்கடலிலே (3)ஆர்த்தருடைய ஆர்த்தநாதம் செவிப்படும்படி (4) அவஹிதனாய்க் கொண்டு மெத்தெனக் கண் வளர்ந்தருளினபடி (5) ஜகத்ரக்ஷண சிந்தையிறே (துயின்ற பரமன்) உறக்கத்துக்கு(6)ஆலத்தி வழிக்க வேண்டியிருக்கை. * நம் பாற்கடல் சேர்ந்த பரமனிறே. '' கிடத்ததோர் கிடக்கையிறே. '' (7) அநாச்ரிதர்க்குப்புலியுறங்கினாப்போலே ஆச்ரிதர்க்கு என்றும் அபயமாயிருக்கும் தொட்டிற் காற்கடையிலே படுத்துக்கொள்ளும் தாயைப்போலே ஸம்ஸாரார்ணவத்தின் நடுவே கிடக்கை. (பரமனை) தகட்டிலழுத்தின மாணிக்கம்போலே திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்த பின்பு நிறம் பெற்றபடி

(பரமனடிபாடி நெய்யுண்ணோம்பாலுண்ணோம்) உண்டார்க்கு உண்ண வேணுமோ ? பாலைக் குடித்து வேப்பங்காயைத் தின்ன வேணுமோ ? ஆனால் க்ருஷ்ணனைச் சொல்லாதே (8) க்ஷீரார்ணவசாயியைச் சொல்லுவானென்னென்னில் கோபவ்ருத்தர்கள் தளும் பாமைக்காக ஒரு தேவதையின் பேரையிட்டுச் சொல்லுகிறார்கள்.

---

(1) க்ருஷி பண்ணும் பூமி = உழுது பயிரிடும் நிலம்

(2) பலம் புஜிக்கப் பிறந்த = பலனை அனுபவிக்கப் பிறந்த

(3) ஆர்த்தர் = துன்புற்றோர்

(4) அவஹிதனாய்க்கொண்டு = ஊக்கமுடையவனாய்க் கொண்டு

(5) ஜகத்ரக்ஷணசிந்தை = உலகத்தைக் காப்பதைப் பற்றிய கவலை.

(6) ஆலத்திவழித்தல் = திருஷ்டி சுற்றிப் போடல்.

(7) அநாச்ரிதர் = தன்னை அடையாத விரோதிகள்.

(8) க்ஷீரார்ணவசாயீ = திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவன்.

(நெய்யுண்ணோம் பாலுண்ணோம்) திருவடிகளைப் பாடு கையாலே தெகுட்டி (அருவருத்து) இவற்றால் கார்யமின்றிக்கேயிருக்கை. நெய்யுண்ணோம் என்கிறது கிருஷ்ணன் பிறந்த பின்பு முதலிலே வ்யுபத்தியில்லாமை. (நெய்யுண்ணோம்) பாலில் ஸாரமான நெய்யைத் தவிர்ந்தவர்கள் பாலைத்தவிர்க்க கேட்க வேணுமோ? (நாட்காலே நீராடி) "ப்ராம்ஹேமுகூர்த்தே இத்யாதிப்படியே ராம விரஹத்தாலே பிறந்த வெக்கையை ஆற்றுகைக்காக ஸ்ரீபரதாழ்வான் நீராட்டுப்போலே, கிருஷ்ண விரஹம் தின்ற உடம்பை நீரிலே தோய்க்கவென்கிறார்கள். (9) ஸாத்விகாக்ரேஸரர்எழுந்திருக்குமாப் போலே எழுந்திருக்கை

(மையிட்டெழுதோம்) (10) அஸிதேக்ஷணைகளாகையாலே வேண்டுவதில்லை. அஞ்ஜநபர்வதத்தின் அந்தராத்மாவைப் பிடித்தாய்த்துக் கொள்ளீர் இவள் மையெழுதுவது. (மலரிட்டு நாம்முடியோம்)மாலைமுடியோம்(11)பறப்பதின் குட்டிதவழுமோ! சூடிக்களைந்தன சூடுவர்களிறே. மாலாகாரர்மகளிறே.

(செய்யாதனசெய்யோம்) விதியுண்டேயாகிலும் (12) பூருவர்களாசரித்தபடியை யொழியச் செய்யக் கடவோமல்லோம். "முடி சூடுகை சிஷ்டாசாரமல்ல" என்றிருந்த பரதாழ்வானைப் போலே, பஞ்சலக்ஷம் குடியிலே உள்ள பெண்களிலே ஒருத்தி குறையிலும் கிருஷ்ணன் பக்கல் போகோமென்கிறார்கள். (தீக்குறளை சென்றோதோம்) நம்மில் நாம் பேய்ப் பெண்ணே" என்று சொன்னோமேயாகிலும், கிருஷ்ணன் செவிகேட்கஒருகுறை சொல்லோம். ஸ்ரீ வைஷ்ணவர்கள் பக்கல் தோஷங்கண்டால் கண்டது நெஞ்சோடே கூட்டோ மென்கிறார்கள். நெஞ்சோடே கூட்டுகையாவது—அவனுக்குச் சொல்லுகை. "என் நெஞ்சகம் கோயில் கொண்ட" இறே. அந்தர்யாமியிறே. "என் நெஞ்சு நிறையப் புகுந்தான்" இறே. ஆகையாலே நெஞ்சோடே கூட்டோமென்கிறார்கள்.

(ஐயமும் பிச்சையும்) முகந்து இடுகையும், பிடித்து இடுகையும். ஐயமாவது—யோக்யருக்கு இடுமது. பிச்சையாவது—ஸந்யாஸிகளுக்கு இடுமது. (ஆந்தனையும்) கொள்வாரைப்

---

* (9) ஸாத்விகாக்ரேஸரர் = ஸத்வகுணமுள்ளவர்களில் தலை சிறந்தவர்.

(10) அஸிதேக்ஷணை கரிய கண்ணழகுடையவள்.

(11) பறப்பதின்குட்டி தவழுமோ பறவை இனத்தைச் சேர்ந்த குஞ்சு பறக்கத்தான் முயலும் தரையில் ஊர்ந்து செல்லாது. மிருக இனத்தைச் சார்ந்த குட்டி ஊர்ந்து செல்ல முயலுமே யொழிய பறக்க முயலாது. அந்தந்த இனத்தைச் சார்ந்த உயிர்கள் அந்தந்த இனத்தின் பழக்கவழக்கங்களைத்தான் மேற்கொள்ளும். சாதி வழக்கம் மாறாது என்பது கருத்து. "குலவித்தை கல்லாமல் பாகம்படும்" என்பது முதுமொழி.

(12) பூருவர்களா சரித்தபடி = முன்னோர்கள் அனுஷ்டித்த படி.

பெறுந்தனையும், கொடுக்கக் கொள்ளுவார் கொள்ளவல்லராந் தையும் (கைகாட்டி) எல்லாம் கொடுத்தாலும் "நாம் கொடுத்ததுண்டோ? என்று அத்தை அநாதரிக்கை ஔதார்யத்தின் மிகுதியிருக்கிறபடி (உய்யுமாறெண்ணி) இப்படிகளாலே பிழைக்கும் விரகெண்ணி (உகந்து) ப்ரீதைகளாய் (எண்ணியுகந்து)அனுபவிக்கும்படியை மனோரதித்துகந்து செய்யும் கிரிசைகள் கேளீரோ என்றந்வயம்.

3. ஓங்கியுலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெலூடுகயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டுகண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வாங்கக், குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்.
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

மூன்றாம் பாட்டு— (ஓங்கி) பிறர்கார்யம் செய்ய என்றால் பணைக்கு மென்கை. "உவந்த உள்ளத்தனாய் இத்யாதி பனியில் சாய்ந்த மூங்கில் ஆதித்ய கிரணங்கள் பட்டால் எழுமாபோலே ஓங்குகை. வெய்யில்—(1) ஆர்த்தநாதம் (உலகளந்த) (2) ஏகதேசத்தையன்றியே எல்லாரையுமடைய (3) குணாகுண நிரூபணம் பண்ணாதே ரக்ஷிக்கை (உத்தமன்) தென்றலும் நிலவும் போலே பிறர்க்கேயாயிருக்கை. "நதேரூபம்" இத்யாதிப் படியே, நமக்கு "பகவத ஏவாஹமஸ்மி" போலே, அவனுக்கு "நதேரூபம்—பக்தாநாம் ஆகையும்; ஆகையாலே உத்தமனானன். (பேர்) பிறர்க்குமவனுக்குமுள்ள வாசி போரும் திருநாமத்துக்குமவனுக்கும். கங்கா ஸ்நாநம் பண்ணுபவனுக்கு பூர்வத்திலே ஸ்நாநம் வேண்டாதாப் போலே, இது தானே எல்லாசுத்தியும் (பேர்) இதுதான் எல்லா அதிகாரிகளுக்குமபேக்ஷிதம் — கர்மயோகிக்கு விரோதிபோகைக்கும் கர்மம் செய்து தலைக்கட்டுகைக்கும், ஞானயோகிக்கு ஞானம் விசதமாகைக்கும், விரோதிபோகைக்கும் பக்தியோகிக்குப் பக்தி வர்த்திக்கைக்கும் விரோதி போகைக்கும் ப்ரபன்னருக்குச் சோறும் தண்ணீரும் போலே யாகைக்கும் திருநாமம் போலில்லையென்றபடி (பாடி) ஆர்வத்தால் பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல" என்றிறே பாட்டுக்கு லக்ஷணம்.

(நாங்கள்) பாடாவிடில் தரியாத நாங்கள். உபாயமவனேயானால் தாரகமாமத்தனையிறே. (நம் பாவைக்கு) பெறுவது க்ருஷ்ணனையாய், பெறுவிப்பானும் க்ருஷ்ணனேயான நோன்புக்கு

---

(1) ஆர்த்த நாதம் = துன்புற்றவர்களின் கூக்குரல்,

(2) ஏகதேசத்தை = குறிப்பிட்ட ஒரு பகுதியை

(3) குணாகுணநிரூபணம்பண்ணாதே = நன்மை தீமைகளை ஆராயாதே.

(சாற்றி நீராடினுல்) நாட்டுக்குப் புண்யம், நமக்கு (4) விரஹ சமனம்.

(தீங்கின்றி நாடெல்லாம்) எல்லாப் பொல்லாங்குகளும் போக (5) ஸேச்வரமான ஜகத்தடையவாழ. (திங்கள்மும்மாரி) நெடுநாள் மழையின்றிக்கே வ்யஸனப்பட்டாப்போலே வெள்ளத்தாலும் கேடாகாமே ஒன்பது நாள் வெய்யிலெரித்து, ஒருநாள் தலைக்கெண்ணெய் ஊறவிட்டாப்போலே நன்ருய்படி மழை பெய்ய வேணுமென்கை. "யத்ராஷ்டாக்ஷர" இத்யாதிவத்."

* நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனுதேகைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே " என்று சொல்லுகிறபடியே. (ஓங்கு பெருஞ்செந்நெல்) கவிழ்ந்திருந்து முதலையிட்டு அநந்தரம் அண்ணுந்து பார்க்க வேண்டுமென்கை. மேல்நோக்கி உயருமென்கை (ஊடுகயலுகள) "ஒண்மிதியில்" என்னுமாப்போலே பயிர் மேல் நோக்குந்தனையும் ஆனைக்கன்றுகள் போலே செருக்கித் திரிகிற கயல்களுக்குத் தாவித் திரியலாம் படியிருக்கை.

(பூங்குவளைப் போதில்) அழகிய குவளைப் பூவிலே "போது", என்று காலபரமாகவுமாம். கயலுடைய ஸஞ்சாரத்தாலே பூக்கள் நெகிழ்கிறபடி (பொறிவண்டு) ரஸாயனஸேவை பண்ணிப் போலே நரை திரை மாறி இளகிப் பதித்திருக்கை; (கண்படுப்ப) ஸௌக்யத்தாலே உறங்கி "நீ எழுப்பிற்றில்லை. நீ எழுப்பிற்றில்லை" என்று உணர்ந்து விடுவோறே வெறுத்துத் தன்னில்தான் சீறுபாறென்கை.

(தேங்காதே புக்கிருந்து) இனி ஊரில் ஸம்ருத்தியைச் சொல்லுகிறது (தேங்காதே) திருவடி (6) ஸமுத்ர தரணத்துக்கு ஒருப்பட்டாப்போலே, முத்துக்கு முழுகுவார் கடலுக்கு இருயா தாப்போலேயாய்த்து (7) இருயாதே புக்கபடி (இருந்து) பால் வற்றி எழுந்திருக்க விரகில்லை. (8) ஸ்தாவரப்ரதிஷ்டைபோலே (சீர்த்தமுலை பற்றி) விரலாலே பிடிக்கவொண்ணுதே இரண்டு கையாலே அணைக்க வேண்டும்படியிருக்கை (பற்றி வாங்க) தொட்டு விட அமையும் (வாங்கக் குடம் நிறைக்கும்) ஒரு கால் பற்றி வலிக்க இட்ட குடம் நிறைக்கை. வைப்பார் தாழ்வே, வைத்த குடமெல்லாம் நிறைக்குமென்றுமாம் (வள்ளல்) சிறு பிள்ளைகளும் கட்டி விடலாய் கழுத்தைக் கட்டிக் கொண்டு (9) நாலலாயிருக்கை. (பெரும் பசுக்கள்! க்ருஷ்ணனுேட்டை

---

(4) விரஹசமனம் = பிரிவுத்துயர் தணிதல்.

(5) ஸேச்வரம் ஈச்வரனேடு கூடிய

(6) ஸமுத்ரதரணத்துக்கு = கடலைத் தாண்டுவதற்கு

(7) இருயாதே = பின் வாங்காதே

(8) ஸ்தாவரப்ரதிஷ்டை = மரம் போல் அசையாது நிலைத்திருத்தல்.

(9) நாலலாயிருக்கை = தொங்குவதாயிருத்தல்

ஆர்சமுண்டாகையாலே (10) ஸ்ரீ சத்ருஞ்ஜயனைப்போலே இருக்கை. (நீங்காத செல்வம்) ஈச்வரன் பார்த்தவிடம் போலே (11) ஸாவதியன்றிறே இவர்கள் பார்த்தவிடம்.

4. ஆழி மழைக்கண்ணா ! ஒன்று நீகை கரவேல்
ஆழியுள் புக்குமுகந்து கொடார்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம் போல் மெய் கறுத்து
பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழி போல் மின்னி வலம்புரிபோல் நின்ற திர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய்

நாலாம் பாட்டு— (ஆழிமழைக்கண்ணா) பேரளவையுடைய வர்ஷத்து நிர்வாஹகனான வருணனே ! (ஒன்று நீ கை கரவேல்) தந்தாம் பாக்யத்தளவிலே கார்யம் செய்யும் போதன்றோ புதைத்து விட வேண்டுவது. எங்களுடைய பாக்யமன்றோ புஜிக்கப்புகுகிறது. (ஆழியுள் புக்கு) முன் வாயிலே ஸகரர்கல்லின குழியொழிய பெருங்கடலிலே புக்கு. (முகந்து கொடு) பாதாளம் கிட்டி மணலோடே பருகவேணும். (ஆர்த்தேறி)

(1) அநசனத்திலே தீக்ஷித்த முதலிகள் திருவடித்வனியைக் கேட்டு இருந்தபோதே எழுந்திருந்தாட, பிராட்டியைத் திருவடி தொழுத (2) ப்ரீதிப்ரகர்ஷத்தாலே திருவடி ஆர்த்துக் கொண்டு வந்தாப் போலே வரவேணும் (ஏறி) " விச்ரம்ய விச்ரம்ய புந: ப்ரயாந்தி " கர்ப்பிணிகள் நகர்ந்து நகர்ந்து பெரிய ஏற்றமேறு மாப்போலே " மதயானை போலெழுந்த மாமுகில்காள் " " விண்ணில மேலாப்பு விரித்தாப்போலே" " ஆகாசாவகாசமத்தனையும் இடமடையும்படி பாரித்துக் கொண்டுவர வேணும். (ஊழிமுதல்வனித்யாதி)ஸ்ருஷ்டித்தால் இவை பண்ணும் நன்மை தீமைக்குத் தக்கபடி பார்க்கும் பார்வைபோலன்றிக்கே ஸ்ருஷ்டிக்குமுன்பு எல்லாரையும் " ஐயோ" என்றுஒக்கப்பார்க்குமாபோலே, நீயும் இங்குத்தைக்கு ஒத்திருக்கப் பார்க்கவேணுமென்று கருத்து. முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனிறே. (உருவம் போல்) (3) அகவாயில் நீர்மை உங்களால் தேடப் போகாது ;

---

(10) ஸ்ரீ சத்ருஞ்ஜயன் = இராமபிரானது பட்டத்து யானை.

(11) ஸாவதி = அளவுபட்டிருத்தல்

(1) அநசனம் = உண்ணாவிரதம்

(2) ப்ரீதிப்ரகர்ஷத்தாலே = அன்பு மேலீட்டினால்

(3) அகவாயில் = உள்ளிடத்தில்

2

நிறத்தையாகிலும் கொள்ளுங்கோள். (4) நாய்ச்சியார் விழி விழிக்கச் சொல்லுகிறார்கள். (மெய்கறுத்து) அகவாயில் நீர்மை அவனுடைய நீர்மைக்கு நெருப்பென்னலாம். (பாழி) "பாஹுச்சாயாமவஷ்டப்த:" ஒதுங்கின (5) ரக்ஷ்யவர்க்கம் பொருந்தும்படி நிழல் மிக்கிருக்கை. "நிவாஸவ்ருக்ஷஸ்ஸாதூநாம்" (அந்தோள்) (6) உழறுபால். ரக்ஷகமும்தானேயாய் போக்யமும் தானேயாகை. "சுந்தரந் தோளுடையா" னிறே (பற்பநாபன்) "புத்ரஸ்தேஜாத:" என்று ப்ரம்மாவை உண்டாக்கின அநந்தரம் பிறந்த ஒளி. (கையிலாழி) வெறும்புறமேதிரு மேனியே அமையும், அதுக்கு மேலே திருவாழி. "நெய்யாராழியிறே". "ஆழியொடும் பொன்னார்சார்ங்கமுடைய அடிகளை இன்னாரென்றறியேன்," இவர்களைச் சேர்க்கைக்குப் பரிஹாரமதுவே. (வலம்புரி போல் நின்றதிர்ந்து) பாரத ஸமரத்தில் முழக்கம் போலேயிருக்கை. "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்" "கைகழலாநேமியான்" (வலம்புரி) உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்."

(தாழாதே) (7) தேவதாந்தர பஜனம் பண்ணினாரைப் போலேயன்றிக்கே (8) பகவத் ஸமாச்ரயணம் பண்ணினார் பெறுமா போலே பெறவேணும். (9) தேவமாத்ருகம் போலன்றிக்கே பகவத்ஸமாச்ரயணம் (10) நதீமாத்ருகம் (11) சரதமாமென்கை. (சார்ங்கமுதைத்த) பெருமாள் கடைக்கணித்துப் பார்க்குந்தனையுமாய்த்துப் பார்ப்பது, பின்னைதானே பராக்ர

---

(4) நாய்ச்சியார் விழி விழிக்கை = திருவரங்கத்தில் திருஅத்யயனோத்ஸவம் பகல் பத்து பத்தாந் திருநாளில் நம்பெருமாள் நாச்சியார் திருக்கோலம் (மோகினி அலங்காரம்) அணிவது வழக்கம், ஒருசமயம் நாச்சியார் திருக்கோலத்தில் நம்பெருமாளை ஸேவித்த பராசரபட்டர்; திருக்கோலமெல்லாம் அழகிது. ஆனால் உம்மால் நாச்சியாரைப்போலே விழிவிழிக்க வொண்ணாது,, என்றார். அதாவது அழிக்கும் பார்வையாக உள்ளதே தவிர தாயாரைப் போலே வாழ்விக்கும் கருணை நிறைந்த பார்வை இல்லை என்றார். உம்மால் அது முடியாத காரியம் என்கிறார். ஆகவே முடியாத காரியத்திற்கு நாச்சியார் விழிவிழிக்கை எனக்கூறுவது மரபு.

(5) ரக்ஷ்யவர்க்கம் = காக்கப்படுமவர் திரள்.

(6) உழறுபால் = குழம்புப்பால்

(7) தேவதாந்தரபஜனம் = திருமாலைத் தவிர வேறு தெய்வங்களை வழிபடுதல்.

(8) பகவத்ஸமாச்ரயணம் = திருமாலையே தஞ்சமாகப் பற்றுகை

(9) தேவமாத்ருகம் = மழையை எதிர்பார்க்கும் நிலம் (வானம் பார்த்த பூமி)

(10) நதீமாத்ருகம் = வற்றாத நதியிலிருந்து வரும் வாய்க்கால் பாசன நிலம்.

(11) சரதம் = உறுதி

...கும் (12) அகம்படி கிளர்ந்தால் அரசனாலும் விலக்க வொண்ணாது. "சார்ங்கமென்னும் வில்லாண்டானிறே" (சுர மழை) "சரவர்ஷம்வவர்ஷஹ" (வாழ உலகினில் பெய்திடாய்) சரவருஷ்டிபண்ணவன்று ராக்ஷஸர் மேல்பட்டாப்போலன்றிக்கே லோகமடைய வாழும்படி வர்ஷிக்க வேணும். (நாங்களுமித்யாதி) நாங்களும் கிருஷ்ணனும் மகிழ்ந்து நீராட "ப்ரஹர்ஷயிஷ்யாமி" "நாங்கள் வியக்க இன்புறுதும்" "ஏவமுக்தா ஹனுமதா மைதிலீ ஜநகாத்மஜா ! உவாசதர்மஸஹிதம் ஹனுமந்தம் யசஸ்வி நீ."

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்று மணி விளக்கை
தாயைக்குடல் விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினாற்பாடி மனத்தினாற் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோரெம் பாவாய்

அஞ்சாம்பாட்டு:— (மாயனை) தானே தன்னை அமைத்துத் தருமத்தனையல்லது அணுகவும் பேசவு மொண்ணாதபடி கரை கட்டாக் காவேரிபோலேயிருக்கும் பேரளவையுடைய ஸ்ரீ வைகுண்ட நாத னென்கை (மன்னு வடமதுரை) பகவத்ஸம்பந்தம் மாறாத தேசம் (மன்னு இத்யாதி) ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் ஆர்த்தரக்ஷணார்த்தமாக இங்கே பிறக்கைகயாலே உளனானன் (வடமதுரை) மதுராநாமநகரீ (மைந்தனை) பிறந்த போதே கம்ஸனை முடிக்கவல்லமிடுக்கொன்றும் மாதா பிதாக்களுடைய காலிலே விலங்கு கழலும்படியிருக்கை என்றுமாம். பிள்ளை என்றுமாம்.

(தூய பெருநீர்யமுனை) கலங்காப்பெரு நகரைவிட்டவர்க்குத் திருவாய்ப்பாடிபோலே, விரஜையை மறக்க ஆறுமுண்டானபடி. "ப்ரஸாதம் நிம்நகாயாதா". கோதாவரியைப்போலே பிராட்டியைக்கும்பிடுகொண்டு (1) சரணாகத காதுகை யாயிராதே; கம்ஸனுக்கஞ்சிப் போகிற போதைக்கு உதவ வற்றியும் பெண்களுக்கும் கிருஷ்ணனுக்கும் நீர்விளையாட்டு விளையாடுகைக்குப் பெருகுகையும் இப்படி அடிமைக்குப் பாங்காயிருந்தபடி. (தூய) கிருஷ்ணனும் பெண்களும் மாறிமாறிக் கொப்பளித்த தூய்மையென்றுமாம். (பெருநீர்) ச்லாக்யமென்றுமாம் கிருஷ்ணனுடையவும். பெண்களுடையவும் களவுக்குப் பெரு நிலைநிற்கும், "பொருநல் சங்கணி துறைவன்" என்னுமாபோலே பெண்கள் படும் யமுனைத் துறையை உடையவன். கவிபாடுவார்க்கு ஊரும் பேரும் ஆறும் உடையவனென்கை.

(ஆயர்குலத்தினில் தோன்றும்) மதுரையில் பிறப்பு. பிறவாத ஸ்ரீ வைகுண்டத்தோடொக்கும் திரு ஆய்ப்பாடியில் பிறப்பைப் பற்ற (தோன்றும்) "தேவகீ பூர்வஸந்த்யாயாம்"

---

(12) அகம்படி = உள்துறையிலுள்ள மெய்க்காவலர்.
(1) சரணாகதகாதுகை = தஞ்சம் என்று வந்து புகுந்தவர்களிடத்து ஈவு இரக்கம் காட்டாத கொடுமையுடையவள்.

“அஞ்ஜோபிஸந்” இத்யாதிப்படியே. (மணி விளக்கு) புகையும் எண்ணெயுமில்லை அங்கு. வெறும் மங்களதீபம். (தாயைக் குடல் விளக்கம் செய்த) பெற்றவயிற்றுக்குப் பட்டம் கட்டுகை. “கௌஸல்யாசுசுபே தேநபுத்ரேணாமிததேஜஸா” “என்ன நோன்புநோற்றாள் கொலோ இவனைப் பெற்றவயிறுடையாள்” (தாமோதரனை) நம்முடைய பந்தம் நம்மாலறுக்க வொண்ணாதாப்போலே, அவனுடைய பந்தமும் அவனால் அறுக்கப் போகாது “சேஷியினுடைய திருவிலச்சினை” என்று பட்டர் அருளிச் செய்வர் (தூயோமாய்) அவனிடையனாகக் கொண்டு தாங்களிடைச்சியான சுத்தி-க்ஷத்திரியன் இடையனானாப்போலே ப்ராஹ்மணியும் இடைச்சியானபடி (தூயோமாய்) வாயிலும் முகத்திலும் நீரிடாதே வருகை. இருந்தபடியே வருகைக்கு சுத்தியும் அசுத்தியும் வேண்டா. (வந்து நாம்) “உப்ஸ்தேயைரு பஸ்தித:” “பத்ப்யாம் அபிகமாச்சைவ” “ஹ்ரீரேஷாஹி மமாதுலா” அவன் செய்யுமத்தை நாம் செய்யக்கடவோம்; “வந்துனதடியேன் மனம்புகுந்தாய்” உபேயத்தில் த்வரை —

பார்த்திருக்கவொண்ணாது. அப்படியிருக்கிற நாம். (நாம்) நாமே செய்ய வேணும். (தூமலர்) (2) இலை வாணிபம் பண்ணாத மலர் “மிக்கசீர்த்தொண்டரிட்ட பூத்துளவு” “சூட்டுநன்மாலைகள் இத்யாதி, (தூவி) ப்ரணயிநிக்குச் சடங்கு வேண்டா. (தொழுது) வீரன் தோற்றுப் போலே. தொழுவித்துக் கொள்ளுமவர்களிறே தொழுகிறார்கள். “இதுமிகையாதலில்” அவன் பொறுக்கமாட்டாதே “ருணம் ப்ரவ்ருத்தமிவமே” என்னப் பண்ணுகை (வாயினால் பாடி) வாய்படைத்தப்ரயோஜனம் பெறுகை (மனத்தினால் சிந்திக்க) ஞானம் அனுஷ்டான சேஷம். அது வொண்ணாதபடி வந்த அடைவுகேடு தோன்றுது (போய பிழையும் புகுதருவான் நின்றனவும் (4) பூர்வாக உத்தராகங்கள். (தீயினில் தூசாகும்) பூர்வாக மாவது—புத்தி பூர்வகமாகப் பண்ணிப் போந்தவை; உத்தராகமாவது—பகவத்க்ஞானம் பிறந்தால் ப்ரக்ருதிவாஸனையால் ப்ராமாதிகமாகப் பிறந்தவை. (செப்பு) சொல்லவமையும் என்கை. (மாயனை இத்யாதி அடைவே செப்பு) என்றந்வயம்.

6. புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்
வெள்ளைவிளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக்காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோரெம் பாவாய்

---

(2) இலைவாணிபம்பண்ணாதமலர் =

(3) ப்ரணயிநி = காதல் உடையவள்.

(4) பூர்வாகம் = எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றுவதற்கு முன்னேவேண்டுமென்றே செய்தபாபம். உத்தராகம் = பகவானைத் தஞ்சமாகப் பற்றிய பிறகு செய்த பழக்கத்தாலே தன்னை அறியாமல் செய்யும்பாபங்கள்.

[illegible]ம்பாட்டு :- உணர்ந்தவர்களடையச் சென்று உணரா[illegible] எழுப்புகிறார்கள். (புள்ளுமித்யாதி) பகவத் விஷயத்தில் [illegible]யாள் ஒருத்தியை எழுப்புகிறார்கள்; “போது விடிந்தது எழுந்திராய்’’ என்று (1) சிஷ்டகர்ஹை பண்ணுகிறார்கள். ( ) நாழிகைவட்டில் நீர் நிரம்பினால் விழுமாப்போலே இரையறுதியிலே உணரும் புள்ளும் சிலம்பினகாண். காலமுணர்த்துவதாக முன்னே புள்ளு முணர்ந்தன வென்றுமாம் (புள்ளரையனித்யாதி) திருப்பள்ளியெழுச்சியில் சங்கத்வனியும் கேட்டிலையோ? திருவாய்ப்பாடியில் திருமுற்ற முண்டோவென்னில்; உண்டு. “பாலா அபி க்ரீடமாநா:’ இத்யாதிப்படியே, ஒரு தோளே! [illegible]தாள் மாலையே ஒருவளப்பமே ஒரு முறுவலே ஒரு நோக்கே! என்றாப் போலே சக்ரவர்த்தி திருமகன் பக்கலிலே பிள்ளைகளுமகப்படச் செல்லா நிற்க ‘ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா’ என்று அவர் தாமும் பெரிய பெருமாளை ஆச்ரயிக்குமா போலே க்ருஷ்ணனையும் கும்பிடு கொள்வானொரு எம்பெருமானுண்டு (புள்ளரையன்) அவனுக்கு (3) நிரூபகதர்மமாகப் பெரிய திருவடியை முன்னிடு[illegible]றார்கள் “அப்புள்ளின் பின்போன தனி நெஞ்சமே’’ யிறே. சங்கு வெளுக்குங்காட்டில் போது விடியுமோ? அழைக்குங் காட்டில் நமக்குப் புறப்படவேணுமோ? உங்களுக்கெப் போதும் பாவனை இதுவேயிறே: ‘வெள்ளை விளிசங்கிடங்கையில் கொண்ட விமலன்’’ என்றும் “பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்’’ என்று முன்னடிறே (பேரரவம்) நீ உணரும்படிக்குப் போகும் த்வனி யென்கிறார்கள் (கேட்டிலையோ) இதுவும் கேளாதபடியோ அங்குற்றை (4) அன்ய பரதையென்று பழியிடுகிறார்கள் இவள் அது கேட்டு எழுந்திருக்கைக்கு

(பிள்ளாய்) உன்னுடைய இளமையிறே—பகவத் விஷயத்துக்கும் பாகவத விஷயத்துக்குப் வாசியறியாமை யென்ன நீங்களன்றோ பிள்ளைகள். ‘ஒருகாலும் பிரிகிலேனே’’ இத்யாதிவத் (பேய்முலையித்யாதி) போது விடிந்தது ஈண்டென எழுந்திருக்க வேணும் என்று இவள் துணுக்கென்று புறப்படுகைக்காக, “புகுந்த அபாயம் கேட்டிலையோ’ என்கிறார்கள் (பேய்முலைநஞ்சுண்டு) பெற்ற தாயும் கூட உதவாத தனிமையில்பாதிக்கவந்த பூதனையை முடித்து (கள்ளச் சகடமித்யாதி) காவலாக வைத்த சகடமும் அஸுராவேசத்தாலே தன் மேலே ஊரப்புக அது கட்டழிந்து சிதறும்படியாகத் திருவடிகளாலே உதைத்து,

---

(1) சிஷ்டகர்ஹை = பெரியோர்களால் நிந்திக்கப்படுவது.

(2) நாழிகைவட்டில் = அக்காலத்தில் அரண்மனை வாசல்களில் ஒரு அண்டாவில் நீர்வைத்து துளையிட்டவட்டில் ஒன்றை அதில் மிதக்கவிடுவர். அத்துளைவழியே நீர் புகுநது வட்டில் நிறைந்தது மூழ்கினால் ஒரு நாழிகை எனக்கணக்கிடுவர். அதனால் அதற்கு நாழிகைவட்டில் என்று பெயர்.

(3) நிரூபகதர்மம் = மற்ற எவரையும் குறிக்காது, குறிப்பிட்ட ஒருவரையே அறிவிக்கும் பண்பு.

(4) அன்யபரதை = வேறு கார்யத்தில் கருத்தூன்றுகை.

பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே திருவநந்தாழ்வான் மேலே யோக நித்ரையிலே மிகவும் மஸ்கரித்து, (5) ராமாத்யவதாரகந்தமாய் - (6) அநிருத்த ரூபியாய்க் கண் வளர்ந்தருளுகிற எம்பெருமானை.

(உள்ளத்துக்கொண்டு) ஹ்ருதயங்களிலே வைத்துக் கொண்டு ; பகவத் குணங்களை நினைத்து (முனிவர்களும்) (7) ப்ரவ்ருத்திக்ஷமரன்றிக்கே (8) மன்ன சீலரான முனிவர்களும் (யோகிகளும்) நாராயணனை (9) க்ஷணகாலவிச்லேஷத்திலும் ஸஹியாத யோகிகளும் (மெள்ள வித்யாதி) (10) ஸ்தனந்தய ப்ரஜையை மார்பிலேயேறிட்டுக் கொண்டு உறங்கின மாதா, ப்ரஜை உணராமல் க்ரமத்தாலே எழுந்திருக்குமாப்போலே (12) அவஹிதராய்க் கொண்டு எழுந்திருந்து, " ஹரி ஹரி " என்று எம் பெருமானும் உணர்ந்து கேட்டாரும் வாழும்படி பண்ணின திருநாம ஸங்கீர்த்தனமானது படுக்கைக் கீழே வெள்ளம் கோத்தாப்போலே க்ருஷ்ணவிச்லேஷத்தாலே (12) கமர்பிளந்த எங்கள் ஹ்ருதயங்கள் நனைந்து தேறிக் குளிரும்படி வெள்ளமிட்டது அதுகாண் எங்களை எழுப்பிற்றென்கிறார்கள். (வெள்ளம்) திருமேனியிலே (13) ஸௌகுமார்யத்துக்குச் சேரும்படி குளிர்த்தியுண்டானபடி (அரவு) " ப்ரக்ருஷ்டவிஜ்ஞான பலைகதாமநி " ஜ்ஞானம்—இருவரையுமறிகை விஜ்ஞானம்— எல்லா கைங்கர்யமும் பண்ணுகை. ப்ரக்ருஷ்டம்—தன்னை மறக்கை, பலம்—பெரிய பிராட்டியாரும் தானும் துகைக்குப் பாங்கான சக்தி (அமர்ந்த) பிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருக்கிலும் உணராமை (வித்தினை) வித்தை விதைக்கைக்கு நீரிலே சேர்த்தாப் போலே, காரணமிருக்கக் காரியமுண்டாகச் சொல்ல வேணுமோ ? (உள்ளத்துக்கொண்டு) மதுகைடபாதிகள் இல்லாத விடம். பனிக்கடலிலே நீராடி உண்டவிடாய் தீர மனக்கடலிலே கொண்டு (முனிவர்களும் யோகி

---

(5) ராமாத்யவதாரகந்தமாய் = ராமன் முதலிய அவதாரத்திற்கு மூலகாரணமான கிழங்கு.

(6) அநிருத்தரூபீ = ஸம்மோதலோகத்தில் இருக்கும் ஒரு வ்யூஹ மூர்த்தி

(7) ப்ரவ்ருத்திக்ஷமரன்றிக்கே = முயற்சி செய்யத்தக்கவரன்றிக்கே

(8) மனனசீலர் = த்யானத்தையே இயல்பாக உடையவர்கள்.

(9) க்ஷணகால விச்லேஷம் = கணப்பொழுது பிரிந்திருத்தல்

(10) ஸ்தனந்தயப்ரஜை = தாய்ப் பாலருந்தும் குழந்தை

(11) அவஹிதராய் = ஊக்கமுடையராய்

(12) கமர்பிளந்த = வறண்ட நிலத்தில் வெடிப்புண்ட இடங்களைப்போல வெடிப்புண்ட

(13) ஸௌகுமார்யம் = மென்மை.

[illegible]" வைகுந்தத் தமரும் முனிவரும் "போலே (14) குண [illegible]கரும் (15) கைங்கர்யபரரும்; இளையபெருமாளும் பரதாழ் [illegible]ரும் போலே. திருவாய்ப் பாடியில் முனிவர்களும் யோகி களும் உண்டோ்வென்ன; அவனிங்கேவந்தவதரிக்கையாலே அவர்களுமுண்டு. (மெள்ளவெழுந்து) கர்ப்பிணிகளைப்போலே " [illegible]ருதயே நோத் வஹ்ந்ஹரிம் !' (அரியென்ற பேரரவம்) "ஹரி ஹரி" என்கையாவது " ரக்ஷுத்வாமசேஷாணும் " என்னும் படியே உன்னை நீயே காத்துத் தர வேணுமென்று திருப் பல்லாண்டு பாடுகை. (பேரரவம்) பஞ்சலக்ஷம் குடியில் ஒருத்தி த்வனியர்யெழுந்த இத்திருநாமம் செவி வழியே புக்கு உடம்பு (16) வவ்வலிட உணர்ந்தோம்.

7. கீசுகீசென்றெங்கும் ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக்கை பேர்த்து
வாச நறுங் குழலாய்ச்சியர் மத்தினல்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோரெம்பாவாய்.

ஏழாம் பாட்டு :- இப்பாட்டில் பழையளாய் வைத்து புதுமை பாவித்துக் கிடப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். " போது விடிந்தது எழுந்திராய் " " என்ன " விடிந்தமைக் கடையாள மென் " என்ன, " கீசுகீசு என்று—எங்குமானைச் சாத்தன் கலந்து பேசா நின்றன " என்கிறார்கள். (கீசு) (1) அநக்ஷரமாயிருக்கை. ஓரானைச் சாத்தன் பேசுங்காட்டில் விடியுமோ என்ன, எங்கும் பேசா நிற்பதென்ன, நீங்கள் அதுக்கில்லையோ என்ன, எங்களா லன்றிக்கே தானேயுணர்ந்தனவென்ன அதுக்கடையாளமென் னென்ன; கலந்துபேசுகிற பேச்சுகேட்டிலையோ ? ;கேளாமைக்கு மற்றொரவாரமுண்டோ ? "நிஸ்வநம் சக்ரவாகாநாம்" இத்யாதி இப்பேச்சுக் கேட்டுவைத்து க்ருஷ்ணன் முகத்திலே விழித்துக் கொண்டு நில்லாதே தரிக்கவல்லையாவதே ! 'ஸௌமித்ரேச்ருணு வந்யாநாம்" இத்யாதி விடிவோறே மாளிகையிலே சென் றெழுப்புவாரும் கவிசொல்லுவாரும் (2) வம்சாவளி ஓதுவாரு மாக எழுந்திருக்கக் கடவ இவள் பக்ஷிகளுக்கு முன்னே உணரும்

---

(14) குணவித்தர் = பகவானது கல்யாண குணங்களாலே துளைக்கப் பெற்ற நெஞ்சினர்.

(15) கைங்கர்யபரர் = தொண்டில் ஈடுபட்டவர்

(16) வவ்வலிட = குளிரால் நடுங்க

(1) அநக்ஷரமாயிருக்கை = எந்த விதமான எழுத்தொலி யுமல்லாத வெறும் ஒலி.

(2) வம்சாவளி ஓதுவார் = அரசனதுவம்சபரம்பரைகளைச் சொல்லி புகழ்ந்துபாடுமவர்.

படியாவதே! என்ன (3) தர்மஹாநி'' என்று ஆய்த்தானருளிச் செய்வர். (பேய்ப் பெண்ணே) பகவத்விஷயத்திலும் (4) ததீய விஷயம் தன்னேற்ற மென்றிருந்து வைத்துப் பேசாதே கிடக்கை யாலே சொல்லுகிறுர்கள்; என்ன அறிவுதான்? "பேய்ப் பெண்ணே'' என்றத்தோடு "நாயகப் பெண்பிள்ளாய்? என்றத்தோடு வாசியில்லே. அகவாயில் பாவமொன்ரு கையாலே.

பின்னேயுமெழுப்புகிறுர்கள் (காசும்பிறப்பும்) அச்சுத்தாலி யும் முளேத்தாலியும். இடைச்சிகள் பூணுமாபரணம். (கலகலப்ப) "அரவூறு சுலாய்மலே தேய்க்குமொலி'' என்னுமாப்போலே. (கைபேர்த்து) தயிரின் பெருமையாலும், இவர்கள்ஸௌகுமார் யத்தாலும்கைபேர்க்கப் போகாது. அதுக்குமேலே அவன் ஸன்னிதியிலும். கடையப்போகாது. அவன் அஸன்னிதியிலு மப்படியே.

(வாசநறுங்குழல்) தயிர்கடைகைக்கு நியமித்த முடித்துக் கட்டிய மயிர்முடி கடைகிற ஆயாஸத்தாலே குலேந்து கடைந்த வேர்ப்பாலே (வேர்வையாலே) (5) அதிபரிமளிதமாய் முடை நாற்றமும் தோற்ருதபடி (6) கிண்ணகவெள்ளம் கரையை யுடைத்துப் பெருகுமாபோலே எங்கும் சுற்று வெள்ளமிடா நின்றது. பரிமளம் ஊரை உறங்க வொட்டுகிறதில்லே. ஆய்ச் சியர்) க்ருஹிணிகளெல்லாரும். "விக்ரேது காமாகில கோபகந்யா ''இத்தியாதி. ஊராகக்கிளர்ந்தது. மத்திஞலோசை படுத்துகிறத்வனியும், இவர்கள் சிலம்பின்த்வனியும, குழல் களில் வண்டுகளின்த்வனியும், ஆபரணம் தன்னில் கலகல வென்கிற ஒலியும். கைகளில் வளேகளிஞெலியும் கிளர்ந்து பரம பதத்திலேசென்றுகிட்டி கிருஷ்ணகுணங்களாயெங்கும் பரப்புகை. "கோவிந்ததாமோதரமாதவேதி'' போலே. (அரவங்கேட்டிலே யோ) ',கெண்டையொண்கண் மடவாளொருத்தி'' இத்யாதிப் படியே. ஆண்களான தேவஜாதிக்கு ஒருகைபற்றுமவன் பெண் களேக் கைவிடான். இக்கோலாகலங்களடையக்காண எழுந்திரா யென்கிறுர்கள். விடிந்தமைக்கடையாளம் கேட்டிலேயோ? தயிர்கடைகிற ஓசையென்ன, க்ருஷ்ணனவதரித்தபின்பு நல்ல டிக் காலமாகையாலே எப்போது முண்டென்ன! (நாயகப் பெண்பிள்ளாய்) (7) சேஷபூதர் சேஷிகளுக்குச். சொல்லு வாருண்டோ? அழகிதாகநிர்வாஹ கையானுய் என்று; அவள் துணுக்கென்று புறப்படுகைக்காக (8) கேசிவதவ்ருத்தாந்

---

(3) தர்மஹாநி = தர்மத்தின்கேடு.
(4) ததீயவிஷயம் = அவனடியார்களாகிற விஷயம்.
(5) அதிபரிமளிதமாய் = மிகுந்தவாசனேயுடையதாய்,
(6) கிண்ணகவெள்ளம் = பெருவெள்ளம்.
(7) சேஷபூதர்களுக்கு = அடியவரானவர்கள் தலேவர்கட்கு
(8) கேசிவதவ்ருத்தாந்தம் = ஆய்ப்பாடியில் கண்ணனேக் கொல்வதற்கு கம்சனுல் ஏவப்பட்டு குதிரை வடிவில் வந்த கேசி என்ற அசுரனேக் கொன்ற வரலாற்றை.

தத்தைச் சொல்லுகிறார்கள். (நாராயணன் மூர்த்தி) முகம் தோற்றுதே நின்று வாத்ஸல்யத்தாலே விடாதே ரக்ஷிக்கக்கடவ ஸர்வேச்வரன். (மூர்த்தி) (9) ஆச்ரிதரக்ஷணார்த்தமாக "பரித்ராணாய" இத்யாதிப்படியே அவதரிக்கை. (கேசவனை) பின்னும் நம்முடையவிரோதிகளைப் போக்குமவனை. (பாடவும் நீ கேட்டேகிடத்தியோ தேசமுடையாய) உன்னைக்கண்டு நாங்கள் வாழும்படிவாய் திறவாய் என்கிறார்கள்.

8. கீழ்வானம் வெள்ளென்றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண்மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகல முடைய
பாவாய் ! எழுந்திராய் பாடிப்பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரைமாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்றா ராய்ந்தருளேலோ ரெம்பாவாய்.

எட்டாம் பாட்டு :—பின்னையும் ஒரு பெண்பிள்ளை வாசலிலே சென்று எழுப்புகிறார்கள்.

(கீழ்வானமித்யாதி) கிழக்கு வெளுத்தது, எழுந்திராய் என்கிறார்கள். ஆண்களும் (1) வ்ருத்தைகளும் உணருவதுக்கு முன்னே எழுந்திராய் என்கிறார்கள். "பாஸ்கரேணப்ரபாயதா;" "திங்கள் திருமுகத்துச் சேயிழையார்" என்கிறபடியே நீங்களெல்லாம் கிழக்கு நோக்கி விடிந்ததோ இல்லையோ என்று பார்க்க உங்கள் முகத்தினொளி கீழ்திக்கிலே சென்று தாக்கி உங்கள் முகத்திலே வந்து ப்ரதிபலிக்கையாலே கிழக்கு வெளுத்ததாயிருக்கிறதத்தனை: இது (2) அந்யதா ஜ்ஞானம்; மற்றடையாளமுண்டாகில் சொல்லுங் கோளென்ன; (எருமை சிறுவீடு இத்யாதி) சிறுவீடு—பனிப்புல்லு மேய்ச் சலுக்குக்காலமே விட்டு அவை மேய்கைக்காக எங்கும் பரந்தனகாண். ஸ்ரீநந்த கோபர்க்கு (3) முத்திற முண்டு அவற்றின் பின்னே கிருஷ்ணனும் போம்; பின்னையாரைக் காண்பது? எழுந்திராய் என்ன. உங்கள் முகத்தில் ஒளியைக்கண்டு இருள் திரண்டுபோகிறினவித்தனை யென்ன; விடிந்ததில்லை யென்று உன்னால் சொல்லலாவதுண்டோ வென்ன; பஞ்சலக்ஷம் குடியில் பெண்களுக்காக நீங்கள் இத்தனை பேரோ வுள்ளது அல்லாதா ருணராமையாலே விடிந்ததில்லை யென்ன (மிக்குள்ளபிள்ளைகளும்) அவர்களாராயாதே போனார்கள்; நீ எழுப்பக்கிடந்தாய். (போவான் போகின்றாரை) போகை

---

(9) ஆச்ரிதரக்ஷணார்த்தமாக = அடியார்களைக் காப்பதற்காக.

(1) வ்ருத்தைகளும் = கிழவிகளும்

(2) அந்யதாஞானம் = ஒரு பொருளின்பண்பை மற்றொரு பொருளின் கண் உள்ளதாக அறிதல்.

(3) முத்திறம் = பசு, எருமை, ஆடு, ஆகிய மூன்று செல்வங்கள்.

தானே ப்ரயோஜனமாகப்போனார்களென்ன, (போகாமல்காத்து) அவர்களைக் காற்கட்டச் செய்தோம். ''திருவாணை நின்னாணை'' என்ன வேண்டாவே (இவர்களுக்கு உன்னைக் கூவுவான்) நீங்கள் தான் எழுப்புகிறதென்னென்ன, இன்னார்வாசலிலே வந்து எழுப்பினார்கள் என்னும் தரம் பெறுகைக்காக எங்களுக்கு இதுவே ப்ரயோஜனம் (வந்து) ''உத்தரம் தீரமாஸாத்ய'' (நின்றோம்) ''கஸ்த ஏவவ்ய திஷ்டத'' (கோதுகல மித்யாதி) எங்கள் திறத்தாரோ மிகுத்தள்ளுண்டார். (கோதுகலமுடைய) இங்கே புகுந்து போகவே எம்பெருமான் கைக்கொள்ளவேண்டும் படி அவனாலே கொண்டாடப்படுமவள். (பாவாய்) ''நாரீணாமுத்த மாவதூ:'' என்று (4) நிருபாதிகமானஸ்த்ரீத்வ முடையாளாகை (எழுந்திராய்) நாங்களுன்னை உணர்த்த உணர்ந்தாயாகில் பெரிய தரத்தை எங்களுக்குத்தாராய் ''ஆத்மானம் பூஜயந்ராம'' இத்யாதி. பட்டர் விடியுந்தனையும் கண்வளர்ந்தருள சிஷ்யர் களெல்லாரும் திருவாசலிலே வந்திருக்குமாபோலே, (பாடிப் பறைகொண்டு) நாட்டுக்கு நோன்புக்குப்பறை, தங்களுக்கு ஸேவிக்கைபலம்.

(மாவாய் பிளந்தானை) நாம் சென்றால் நம்ம பேக்ஷிதம் செய்யுமோவென்னில், நமக்காகக்கேசியைப்போக்கி நம்மையும் தம்மையு முண்டாக்கித் தந்தவனன்றோ? ஸ்ரீப்ருந்தாவனம் கேசியோடே (5) வன்னியமற்றது; பின்பு பெண்ணுக்கும் பேதைக்கும் பயங்கெட்டு உலாவித்திரியலாய்த்து (மல்லரை மாட்டிய வித்யாதி) இப்போது பெரியநாகரிகனாய் நமக்கு விநியோகப்படஸௌலபனாயிருக்கை. (மல்லரை மாட்டிய) ''ஸக்ய: பச்யத'' என்கிறபடியே அவ்வூரில் பெண்களுக்கு உதவின இது தங்களுக்கும் உதவிற்றென்கிறார்கள். (தேவாதி தேவனை) ''ஜாதோ஽ஸி தேவதேவேச'' ''ஸோஹம்தே தேவதேவேச'' ''அவரை நாம் தேவரென்றஞ்சினோமே'' (சென்று நாம் ஸேவித்தால்) ''பத்ப்யா மபிகமாச்சைவ,'' ''விபீஷணமுபஸ்திதம்'' என்றும் ''உபஸ்தேயைருபஸ்தித:'' என்றும் அவன் நெஞ்சும் புண்படுகைக்குடலாக அவனிருந்தவிடத்தே சென்று அவன் செய்வதை நாம் செய்து விடுகிறோம். நாம் ''ஏஹிபச்யசரீராணி'' என்று விரஹம் தின்ற உடம்பைக்காட்டுகிறோம், ''ப்ராது: சிஷ்யஸ்ய தாஸஸ்ய'' (6)ப்ரணயித்வம் போனாலும் (7) பொதுவான ஆர்த்த ரக்ஷணம் விடுமோ? ஆவா வென்றாராய்ந்தருள்'' ''ஆந்ருசம்ஸ்யம் பரோதர்ம: ''என்று சொல்லி வைத்தும் அது அனுஷ்டியாதே இருக்குமோ? அவன் பக்கல் ஒரு தட்டில்லை, நம் குறையத்தனை, கடுகப்புறப்படவமையும் என்கிறார்கள்.

---

(4) நிருபாதிகம் = ஸ்வாபாவிகம் அதாவது ஏறிட்டுக் கொண்டதல்லாமல் இயல்பாகவே இருப்பது.

(5) வன்னிய மற்றது = பகையற்றது.

(6) ப்ரணயித்வம் = அன்புடையவராகை.

(7) ஆர்த்தரக்ஷணம் = வருந்தியவர்களைக்காத்தல்.

9\. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங்கமழத் துயிலணை மேல் கண் வளரும்
மாமான் மகளே ! மணிக்கதவம்தாள் திறவாய்
மாமீர் ! அவளையெழுப்பீரோ ? உன் மகள் தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப்பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தனென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோரெம்பாவாய்.

ஒன்பதாம் பாட்டு—கீழில்பாட்டில் முக்தர் படி போலே இருப்பாளொருத்தியை எழுப்பிற்று இப்பாட்டில் நித்ய முக்தர் படியேயிருப்பாள் ஒருத்தியை எழுப்புகிறது. தொடர்ந்தடிமை செய்யும் இளைய பெருமாளையும், இட்டவிடத்தேயிருக்கும் ஸ்ரீ பரதாழ்வானையும் போலே.

(தூமணிமாடம்) " துவளில் மாமணிமாடமெ"ன்று குற்ற முண்டாயெடுத்துக் கழிக்க வேண்டாதே எல்லா நன்மையையு முடைய மணியாலே செய்த மாடம் ; அது முக்தனுடைய (1) அபஹதபாப் மத்வாதிகள் போலே திருத்தொலைவில்லி மங்க லத்துக்குக் கழித்தவை கொண்டு செய்தது. அந்தப் புரத்துக்கு நல்ல திட்டுச் செய்து அங்கு கழித்ததிறே தந்தாமுக்கு மாளிகை செய்வது. (சுற்றும் விளக்கெரிய) " தானுறுமாகில் நோற்று வருகிறுன் " என்றிருக்கிருளிவள். மாணிக்கக் குப்பி போலே. புறம்பே நிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்று நின்றதென்கை ப்ரகாசத்துக்கு ப்ரகாசம் வேண்டாமையாலே விளக்குமங்க ளார்த்தம். புறம் புள்ள விளக்குகள் புகையா நிற்கவென்றுமாம்.

(தூபங்கமழ) (3) பரிமளம் ஸஹ்யமானபடி. எங்ஙனேதானி வளுக்கு " சீருற்றவகில்புகை " இத்யாதிபபடியேயிறே அவர் களுக்குச் சொல்லுகிறது புகையுள்ளிட்டனவன்றிற்கே கந்தமே கமழ (துயிலணைமேல்) மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளி " யாயிறே இவர்களுக்கிருக்கிறது. இருவர்க்குப் படுத்த படுக்கையிலே ஒருவர்க்குப் படுக்கப் போமோ ? (கண் வளரும்) இளைய பெரு மாளைப் போலே உறங்காமைக்கு நாங்களும் உறங்குகைக்கு நீயுமாயிற்றோ என்கிருர்கள். (கண்வளரும்) இங்ஙனேயாகாதே

---

(1) முக்தனுடைய அபஹதபாப்மத்வாதிகள் = முக்தி யடைந்த ஆத்மாவுக்கு ஸம்ஸாரதசையில் பாபம் இருந்து பிறகு கழிந்தன.

(2) அவனுடைய அபஹதபாப்மத்வாதிகள் = எம் பெரு மானுக்கோ வெனில்பாபம் முதலியன இயற்கையாகவே இல்லாம லுள்ளன.

(3) பரிமளம் ஸஹ்யமானபடி = நறுமணம் பொறுக்கத் தக்கதானபடி.

ஸ்ரீ வைஷ்ணவர்கள் சொல்லுவது. " படுத்த பைந்நாகணை " இத்யாதிப்படியே தமப்பனார் பகவத் விஷயத்திலே சொல்லுவ தெல்லாம் இவளும் ததீய விஷயத்திலே சொல்லுகிறாள் (மாமான் மகளே) (4) இட்டீடு கொள்ளுகைக்கு விட வொண்ணாத உறவை ஸம்பாதிக்கிறார்கள். (மணிக்கதவம்) எங்களுக்குக் கதவும் சுவரும் தெரிகிறதில்லை நீயே திறவென்கிறார்கள். (5) தேசி கர்க்கல்லது தாள் திறக்கத் தெரியாதென்கை. (மாமீர்) " அடி யாரடியார்தம் " " தொண்டர்தொண்டர் " என்று ஆழ்வா ருடைய (6) பாகவதசேஷத்வத்தில் எல்லை போலே, இவர்களும் இவளுடைய திருத்தாயாரான இவளை உறவாகச் சொல்லி தரிக்கி றார்கள். (அவளை எழுப்பீரோ) நீராகிலுமவளையெழுப்பீரோ வென்கிறார்கள் அவளை இவர்களுக்குத் தோற்றுமோவென்னில், மாளிகையில் தெளிவாலே தோற்றும் தாயார் (7) பாவஜ்ஞை ஆகையாலே எழுப்பாள் ; ஆகையாலே " உன் மகள் தான் ஊமையோ" என்கிறார்கள் அன்றிக்கே (அன்றிச் செவி (கு) டோ) நாங்கள் சொன்ன வார்த்தை கேளாதபடி (8) அந்யபரையாளோ ? (அநந்தலோ) இரவெல்லாம் க்ருஷ்ண னுக்கு ஆடல் கொடுத்து இப்போதோ உறங்குகிறது (ஏமப் பெருந்துயிலித்யாதி) (9) ஆர்த்தநாதம் கேளாதபடி காவலிட்டுக் கொண்டு, உணராதபடி உறங்குகைக்கு ஆரேனும் மந்த்ரித் தாருளரோ ? மந்த்ரம் இவளுக்கு ப்ரஸித்தமிறே. " உன் முகம் மாய மந்திரந்தான் கொலோ " என்று மாயப்பொடி தூவினாருண்டோ வென்கை. (மாமாயன்) பெண்களுக்குக் காணச் சிறையாய்க் கிடக்குமவன். (மாதவன்) அதுக்கு குருகுல வாஸம் பண்ணின விடம். (வைகுந்தன்) பெண்களோடொக் க ஆண்களை அடிமை கொள்ளுமவன். அப்பெருமையையுடைய வனாய் ச்ரிய : பதியாயிருக்றவன் கீழ்ர் பெண்களுக்கெளியனா யிருக்கிறான். (என்றென்று நாமம் பலவும் நவின்று) மேன்மைக் கும் நீர்மைக்கும் ஏகாந்தமான திருநாமங்களை அனேகம் சொன் னோம் என்கிறார்கள் " நாமம் பலவும் நவின்று மாமீர் அவளை எழுப்பீரோ " என்று க்ரியையாகவுமாம்.

---

(4) இட்டீடு கொள்ளுகைக்கு = வார்த்தையிட்டு வார்த்தை கொள்ளுகைக்கு (விவாதம் என்றும் கொள்ளலாம்) மிகவும் நெருங்கிய உறவைக் குறிக்கும் செயல்.

(5) தேசிகர்க்கு = அந்தந்த தேசத்திலுள்ளவர்க்கு

(6) பாகவத சேஷத்வம் = அவனடியார்களுக்கு அடிமையா யிருத்தல்.

(7) பாவஜ்ஞை = உட்கருத்து அறியுமவள்.

(8) அன்யபரை = வேறிடத்தில் கருத்தூன்றியவள்.

(9) ஆர்த்தநாதம் = வருந்தியவர்களின் கூக்குரல்.

10. நோற்றுச் சுவர்க்கம்புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோவாசல் திறவாதார்
நாற்றத் துழாய் முடி நாராயணன், நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால், பண்டொரு நாள்
கூற்றத் தின்வாய் வீழ்ந்த கும்பகரணனும்
தோற்று முனக்கே பெருந்துயில் தான் தந்தானோ
ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே !
தேற்றமாய் வந்து திறவேலோரெம்பாவாய்.

பத்தாம்பாட்டு : க்ருஷ்ணனுக் கசலகமாய் இடைச் சுவர் தள்ளிப்பொகட்டு (1) ஒரு போகியாக அனுபவிக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள். (நோற்று) (2) ஸித்தஸாதனை. இவனுடையவும் தன்னுடையவும் (3) ஸ்வரூபங்களையுணர்ந்தால் யத்னம் பண்ண ப்ராப்தியில்லை. "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்கிறபடியே அவன் தலையிலே பாரத்தைப் பொகட்டோமாகில் நமக்கு நீரிலே புக்குமுழுக வேணுமோவென்றிருக்கிறாளிவள். உபேயத்துக் கன்றோ உபாயம் (4) ஸித்தோபாய நிஷ்டர்க்குவிளம்பஹேதுவில்லாமையாலே ப்ராப்யத்தில் த்வரையில்லாதார் சேதனரன்றென்றிருக்கிறார்கள் (அம்மனாய்) (5) ரக்ஷ்யரக்ஷகபாவம் மாறி நிற்கவோ பார்க்கிறது. அழகிதாக (6) நிர்வாஹகையானாய். (சுவர்க்கம் புருகின்ற) சுகமனுபவிக்கை. "யஸ்த்வயாஸஹஸஸ்வர்க : " நிர்வாஹகையாயிருப் பார்க்குக் கண்ணுறங்கவிரகுண்டோ ? இவர்கள் பேச்சைக் கேட்டு ஈடுபட்டுப்பேசாதே கிடந்தாள் "ஸம்ச்ரவேமதுரம் வாக்யம்" பழியிடுவதேயென்று பேசாதே கிடந்தாளாகவுமாம் "அம்மனாய்" என்பதே தங்கள் அடியேனாயிருக்கிறவென்னை. பேசாதேயிருந்தாளாகவுமாம் ப்ரஹர்ஷேணாவருத்தா ஸாவ்யாஜஹார நகிஞ்சன. என்று ப்ரீதியாலே விக்கிப் பேசாதே இருக்கிறாளாகவுமாம்.

இவர்கள் பொறுக்க மாட்டாமே (மாற்றமும் தாராரோ) என்கிறார்கள். ஏதேனுமொருபடியால் இவள் பேச்சேயமையுமிவர்களுக்கு. "துளம்படு முறுவல் தோழியர்க்கருளாள் என்கிற

---

(1) ஒருபோகியாக = நடுவே தடையில்லாத வெளியாக்கி)

(2) ஸித்தஸாதனை = நாம் உண்டாக்க வேண்டாதபடி எப்போதுமிருக்கிற எம்பெருமானை உபாயமாகப் பற்றியவள்.

(3) ஸ்வரூபம் = உண்மை நிலை பரமாத்மாவுக்கு ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம், ஜீவாத்மாவுக்கு பாரதந்த்ர்யம் ஸ்வரூபம்.

(4) ஸித்தோபாயந்ஷ்டர்கள் = நாம் உண்டாக்கவேண்டாதபடி எப்போதுமிருக்கின்ற எம்பெருமானை உபாயமாகக் கொள்வதில் ஊற்றமுடையவர்கள்.

(5) ரக்ஷ்யரக்ஷகபாவம் = காப்பாற்றப்படுகிறவனுடையவும் காப்பாற்றுகிறவனுடையவும் தன்மை.

(6) நிர்வாஹகை = பொறுப்பேற்று நடத்திநிறைவேற்றுமவள்.

படியே இவளுடைய பேச்சு உஜ்ஜீவனமாய் (7) தாரகமாயிறே இவர்களுக்கிருப்பது. தர்மபுத்ரன் கிருஷ்ணனுக்கும் அர்ஜுநனுக்கும் என்புகுகிறதோ என்றஞ்சின வளவிலே, யுத்தத்தில் ஸ்ரீபாஞ்சஜந்யத்வனி கேட்டு தரித்தாப் போலே இவர்களுக்கிவள் பேச்சு உடம்பை கிருஷ்ணனுக்குக் கொடுத்தால் பேச்சாகிலும் தரலாகாதோ? "மதுரா மதுராலாபாகிமாஹ மமபாமிநீ" யிறே அங்கு செல்லுகிறது கண்ணின் பட்டினி தீராதாகில் செவியின் பட்டினியாகிலும் தீர்க்கலாகாதோ?

நீங்கள் பழியிடுகிறதென்? இங்கு அவனுண்டோ வென்ன: (நாற்றத்துழாய்முடி) (8) மாளிகைச் சாந்து உன்னுலொளிக்கப்போமோ? "அந்தியம் போதே வாசலைக் கைக்கொண்டீர்கள் அவனுக்குப்புகுர வழியுண்டோ" வென்ன (நாராயணன்) அவனுக்கு எங்களைப் போலே கதவு திறக்கப் பார்க்கவேணுமோ? புறப்படுகைக்கு வழிதேடுமத்தனையன்றோ?

(நம்மால்)வெறுமையே பச்சையாகவுடைய நம்மால் (போற்ற) குடிப்பிறப்பால் வந்தது: உபாய மல்ல (பறைதரும்) இப்படி பெரியவன்நமக்குப் பறை தருமோவென்னில், நாராயணனன்றோ பறை தரும் என்றுமாம். (புண்ணியனால்) "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்"

(புண்ணியனால் பண்டொருநாள்) முன்பும் உன்னைப் போலே ஒருத்தனுண்டு காண் உணராதே படுத்தினனென்கை (புண்ணியனால் கூற்றத்தின்வாய் வீழ்ந்த)

கொடுவினைப்படைகள் வல்லையாய்" "ததோராமோ மஹா தேஜா: என்று நீரிலே நெருப்பு எழுந்தாப் போலே சீறுகைக்குள்ள அருமை. (கும்பகரணனும்) பிராட்டியைப் பிரித்தராஜத்ரோஹியோடே கூட்டுகிறார்கள். அவனொருத்தியைப்பிரித்து வைத்து உறங்கினான் நீ ஊராகப் பிரித்து வைத்து உறங்குகிறாய் (தோற்றுமுனக்கேயித்யாதி) ஸ்ரீ பரசுராமன் கையில் வில்லை சக்ரவர்த்தி திருமகன் வென்று வாங்கினாப் போலே, கும்பகர்ணன் நித்திரையை வென்று வாங்கிக் கொண்டாயோ?

(ஆற்ற அநந்தலுடையாய்) இனி கிடக்கில் த்ரோஹிகளாவோம் என்றஞ்சிப் புறப்பட்டு முகங்காட்டுவோமென்று உணர்ந்தபடி தெரிய "க்ருஷ்ண க்ருஷ்ண" என்றாள் நீ உணரும்படி கண்டு வாழ அமையாதோ (அருங்கலமே) இனித் தெளிவு கண்டனுபவிக்கவேணும் "ஹாரத்தைப் பண்ணினால் அதுக்குக் கல்லழுத்த வேண்டாவோ? இக்கோஷ்டியை (9) ஸநாதமாகாய் என்றவாறே பதறிப் புறப்பட (தேற்றமாய் வந்து திற) மேலில் நிலங்களில் நின்றும் தடுமாறி விழாதே தெளிந்து திற. "ஸாப்ரஸ்கலந்தீ" இத்யாதிவத்.

---

(7) தாரகம் = ஆத்மா தரிப்பதற்குக் காரணமாயிருப்பது

(8) மாளிகைச் சாந்து = இயற்கையிலேயே நறுமணம் மிக்க சந்தனம். (கோயில் சாந்து என்றும் கூறுவர்)

(9) ஸநாதம் = தலைவியோடு கூடியதாக

11. கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே !
புற்றரவல்குல் புனமயிலே ! போதராய்
சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து, நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி ! நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய்.

பதினொராம் பாட்டு—க்ருஷ்ணன் ஊருக்கொரு பிள்ளையானாப் போலே (1) ஆபிஜாத்யமுடையளாய் ஊருக்கொரு பெண் பிள்ளை யாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள் (கற்றுக்கறவை) கன்று நாகுகள் நித்யசூரிகளைப் போலே (2) பஞ்ச விம்சதிவார்ஷிகமாயிருக்கை. க்ருஷ்ணனுடைய ஸ்பர்சத்தாலே கீழ் நோக்கின வயஸ்ஸு புகுமித்தனை. (3) ப்ரணயத்துக்கு முலை பட்டாராகாதாப்போலே ஆகாதென்கை. கன்றுகளை ரக்ஷிக்க. வென்று வ்யவஸ்தையுண்டோவென்னில் ? "கன்று மேய்த்தினிதுகந்த காளாயென்றும்," "திவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தி" என்று நித்ய சூரிகளிலும் பசு மேய்க்க உகக்கும் அவன் சரணாகதவத்ஸலனானால் சரணாகதவத்ஸலமாமித்தனையிறே. "யதாதருணவத்ஸா" "கறவாமடநாகு" "சரணாகதவத்ஸல:" "த்வயிகிஞ்சித்"

(கணங்கள் பல) நம்முடைய (4) அனாத்மகுணங்களும் அவனுடைய (5) ஜ்ஞானசக்த்யாதி குணங்களும் நார சப்தத்திலே சொன்ன நாரங்களினுடைய ஸமூஹமானாலும் எண்ணலாம். இவை எண்ணப் போகாது "ரதகுஞ்ஜரவாஜிமாந்" என்னுமாப்போலே (பல கறந்து) ஈச்வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக்களுக்கும் நியமனங்கள் பண்ணுமாபோலே ஜாதியினுடைய மெய்ப்பாட்டாலே செய்ய வல்ல ஸாமர்த்தியம்.

(செற்றார்) "சத்ரோ: ஸகாசாத்ஸம்ப்ராப்த:" என்ற அங்கதப் பெருமாளைப் போலே இவ்வைச்வர்யம் காணப் பொறாதார் நமக்குச் சத்ருக்களாயிருக்கிறபடி (திறலழிய) கம்ஸாதிகளை (6) மறுமுட்டுப் பெறாதபடி கிழங்கெடுக்கைக்கு மிடுக்குடை

---

(1) ஆபிஜாத்யம் உடையளாய் = உயர்குடிப் பிறப்பை உடையவளாய்

(2) பஞ்சவிம்சதிவார்ஷிகம் = இருபத்தைந்து பிராயத்திலுள்ளது.

(3) ப்ரணயத்துக்கு = காதல் செலுத்துகைக்கு

(4) அனாத்மகுணங்கள் = ஆத்மாவினிடத்து இருக்கத் தகாத தீய குணங்கள்.

(5) அவனுடைய ஜ்ஞாந சக்த்யாதிகுணங்கள் = எம்பெருமானது அறிவு, ஆற்றல் முதலிய குணங்கள்.

(6) மறு முட்டுப் பெறாதபடி = பின்னை ஒரு காரியத்துக்கும் உதவாதபடி

யார்கள் இவ்வூரார் என்கை, (சென்றுசெருச்செய்யும்) எரிதிகள் வந்தால் பொருகையன்றிக்கே இருந்தவிடம் சென்று பொருகை. (குற்றமொன்றில்லாத) எடுத்து வரப் பார்த்திருக்கும் குற்றமொன்றில்லை கையிலாயுதம் பொகட்டால் எதிரியை நிரஸிக்கிறகுற்றமில்லை பகவத்பாகவத விஷயங்களிலே குற்றம் செய்தாரை (7) அக்நீஷோமீயஹிம்ஸைபோலே பாராதே கொல்லவல்லார்களென்னுமாம் (கோவலர்தம் பொற்கொடியே) ஜநகராஜன் திருமகள்போலே ஊருக்கொரு பெண்பிள்ளை. (பொற்கொடியே) தர்சனீயமாயிருக்கையும் கொள் கொம்பையொழிய ஜீவியாமையும் கொடி தரையிலே கிடக்கலாமோ? ஒரு தாரகம் வேண்டாவோ? எங்களோடேகூடி நில்லாயென்கை. "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகிலேன்யான்".

(புற்றரவல்குல்) வெய்யிலடியுண்டு புழுதிபடைத்த அரவு போலன்றிக்கே தன் நிலத்திலே வாழும் பாம்பின் படமும் கழுத்தும் போலேயிருக்கை இத்தனை சொல்லலாமோவென்னில் பெண்ணைப் பெண் சொல்லுகிற தன்றோ? "யாஸ் ஸ்த்ரீயோ த்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம்மநஸாயயு:" = "என்று அவன்" பும்ஸாம் திருஷ்டிசித்தாபஹாரியானுப்போலே. (புனமயிலே) இது தன் நிலத்திலே நின்ற மயில், க்ருஷ்ணனையும் தங்களையும் (8) பிச்சேற்றவல்ல (9) அளகபாரத்தை உடையளாயிருக்கை. (போதராய்) "சோபயன் தண்ட காரண்யம்" போலே எங்களை வந்து களிக்கப்பண்ணுயென்கை. (சுற்றத்துத் தோழிமாரித்யாதி) நான்புறப்படுகைக்கு நீங்களெல்லோரும் வந்திகொளோ வென்ன; "உத்தரம் தீரமாஸாத்ய" என்னும் படியே எல்லாரும் வந்து (10) ப்ராப்யதேசமான உன் திரு முற்றத்தேவந்து புகுந்தது. "முற்றம் புகுந்து முறுவல் செய்து நின்றீர்;" "முற்றத்தூடு புகுந்து நின்முகங் காட்டிப் புன்முறுவல் செய்து" என்றும் (11) சேஷியானவனுக்கும் ப்ராப்யமான உன்திரு முற்றம் (12) சேஷபூதைகளான எங்களுக்கு ப்ராப்யமென்னச் சொல்லவேணுமோ? புகுந்து கொள்ளப்புகுகிறகார்யமென்னென்ன (முகில் வண்ணன் பேர்பாட) உகக்குந்திருநாமங்களை நீ பாட, நாங்கள் உன்பக்ஷத்தே நின்று கூட்டம் பற்ற, நீ அவன முகிலே ஈடுபட்டுப்பாட, உன்னீடு பாடுகண்டு நாங்கள் ஈடுபட்டுப் பாட.

---

(7) அக்நீஷோமீயஹிம்ஸைபோலே = அக்நீஷோமீயம் என்ற யாகத்தில் செய்யப்படும் பசுஹிம்ஸைபோலே.

(8) பிச்சேற்றவல்ல = பைத்தியமாக ஆக்கவல்ல

(9) அளகபாரம் = அடர்ந்து நீண்ட கூந்தல்.

(10) ப்ராப்யதேசம் = அடையத்தக்க இடம்

(11) சேஷியானவனுக்கும் = அடிமை கொள்ளும் எம் பெருமானுக்கும்

(12) சேஷபூதைகள் = அடிமைப் பெண்கள்

(சிற்றாதே) சேஷ்டியாதே, கண்ணையும் செவியையும் பட்டினி விடுவியாநின்றாய் (செல்வப்பெண்டாட்டி நீ) உன்னை நீபிரிந்தறி யாயே, உனக்குக் (13) கூடுபூரித்திருந்த தென்னுமாம். (எற்றுக் குறங்கும் பொருள்) "குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்றிருப்பார் செய்வதோ இது (14) கைவல்ய மோக்ஷம்போலே தனி கிடக்கிற கார்யமன்றே என்று.

12. கனைத்திளங்கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழ நின்வாசற்கடை பற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும் நீவாய் திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்

பன்னிரண்டாம் பாட்டு—க்ருஷ்ணன் வளர வளரத் தீம்பிலே கைபுக்கவாறே இவனைக்காக்கைக்கு இவனைப் பிரியாதே போரு கிறானொருத்தன் தங்கையை எழுப்புகிறார்கள்.

(கனைத்து) கறப் பாரில்லாமையாலே இவ்வகத்துக்கு "கன்றுகாலியாய் நாம் பட்டதோ" என்று கூப்பிடாநிற்கும். இளங்கன்று பாடாற்ற மாட்டாமை. (கன்றுக்கிரங்கி) எம் பெருமான் (1) ஆச்ரிதவிஷயத்திலிருக்குமாபோலே. அவன் எருமை கறவாவிட்டால் அவைபடும் பாடு நாங்கள் உன்னாலே படாநின்றோம் (நினைத்து) கன்றை, நினைத்து (2) பாவனாப்ரகர் ஷத்தாலே முலையிலே வாய்வைத்ததென்று பால் சொரியா நிற்கும் (முலைவழியே) கைவழியே தவிர (நின்று பால்சோர) கேட்பாரன்றியேயிருக்க ஆற்றாமையாலே பகவத் குணங்களைச் சொல்லுவாரைப் போலே மேகத்துக்குக் கடலிலே முகந்து கொண்டு வரவேணும் இவற்றுக்கு வேண்டா (நனைத்தில்லம் சேறாக்கும்) பாலின் மிகுதியாலே அகம் வெள்ளமிடும்' அவற்றின் காலிலே துகையுண்டு சேறாம் சேறாய்ப் புகுரவொண் கிறதில்லை. (நற்செல்வன்) "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" தோற்றி மறையும் செல்வமன்று. 'ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல்" "வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே" என் கிறபடியே இவனுடைய வைஷ்ணவஸ்ரீ இருந்தபடி. "ஸௌ மித்ரே புங்க்ஷ்வ போகாம்ஸ்த்வம்,, (தங்காய்) குணஹாநிக்கு ராவணனைப்போலே "ராவணஸ்யாநுஜோப்ராதா" என்னும்படி

---

(13) கூடு பூரித்திருந்தது = நிறைந்து கிடந்தது
(14) கைவல்யமோக்ஷம் = ஜீவாத்மாவான தன்னையே தான் அனுபவிக்கும்வீடுபேறு.
(1) ஆச்ரிதவிஷயத்தில் = அடியார்கள் திறத்தில்
(2) பாவனாப்ரகர்ஷம் = நினைப்பின்மிகுதி.

இக் குணத்திலே (3) தஸ்யானுஜனைப்போலே (4) அந்தரிக்ஷகத ச்ரீமானுடைய மகளான அனலையைப் போலே. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குமில்லாத பிராட்டிக்கு கைங்கர்யம் பண்ணவுண்டிறே அனலைக்கு (வீழ) மேல் பனிவெள்ளமிட நின்ற லைந்து (வாசல்கடைபற்றி) தண்டியத்தைப்பற்றி நால நின்றோம். இத்தர் மஹாநியை அறிகிறிலே இவர்கள் படுமலமாப்பு காண் போமென்று பேசாதே கிடக்க (தென்னிலங்கை) பறைச்சேரி யென்பாரைப் போலே பெருமாளோடே கூடியிருக்கிற பிராட்டியைப் பிரித்த படுகொலைக்காரனிருக்கிற விடமிறே (கோமானை) "யத்யதர்மோந பலவாந்" என்று திருவடிமதித்த ஐச்வர்யம். (செற்ற) ஓரம்பாலே தலையைத்தள்ளி வில்லைமுறித்து "தான் போலுமென்றெழுந்தான்" னித்யாதிப்படியே பின்னைத் தலையை அறுத்து விட்டபடி.

(மனத்துக்கினியானை) வேண்டிற்றுப் பெறுவிட்டால் "சொல்லாய் சீமானே" என்னுமாபோலே (பாடவும் நீ வாய்திறவாய்) ராமவ்ருத்தாந்தம் கேட்டது உறங்குகைக் குறுப்பாயிற்றோ (வாய்திறவாய்) ப்ரீதிக்குப் போக்கு விடவேண்டாவோ? தாங்கள் ஒருதலைப்பற்ற வேண்டியிருக்கிறீர்கள்.

(இனித்தான்) எங்களுக்காக உணராவிட்டால் உனக்காக உணரவுமாகாதோ? சூர்ப்பணகி உள்ளிட்டார்க்குள்ள இரக்கமும் உன்பக்கல் கண்டிலோமே. (ஈதென்னபேருறக்கம்) எம்பெருமான் (5) பரார்த்தமாக உணரும். ஸம்ஸாரிகள் (6) ஸ்வார்த்தமாக உணருவார்கள். இதொருபடியுமன்று (7) ஆர்த்தி கேட்டு உணராதொழிவதே! "பையத்துயின்ற பரமன்"! "பகவதஸ்த்வராயைநம:" "என்னும்படி ஆர்த்தி கேட்டால் அப்படிப்படுமவனோடே வர்த்தித்து இங்ஙனே கிடப்பதே.

(அனைத்தில்லத்தாருமறிந்து) உன் வாசலிலே வந்தெழுப்ப நீ எழுந்திராதது எல்லாரும் அறியும்படியாய்த்து இனி உணராய். ஊராரறியாதபடி பகவத்விஷயத்தை அனுபவிக்க வேணுமென்றிராதேகொள்.

13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமைபாடிப் போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக்குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய்.

(3) தஸ்யானுஜன் = அவன் தம்பி
(4) அந்தரிக்ஷகத:ச்ரீமான் = ஆகாயத்தில் நின்ற, ராம கோஷ்டியில் புகப்போகிற செல்வத்தை உடைய விபீஷணன்;
(5) பரார்த்தமாக = பிறர்க்குப் பயனை விளைவிப்பதற்காக
(6) ஸ்வார்த்தமாக = தனக்குப் பயனை விளைவிப்பதற்காக
(7) ஆர்த்தி = (பிறர்) படுந்துயரம்.

பதின்மூன்றும் பாட்டு: இவளையெழுப்புகிறது அசலகத்தே கேட்டுக் கிடந்தாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

(புள்ளின்வாய் கீண்டானை) கொக்கின் வடிவு கொண்டு வந்த பகாசுரனைப் பிளந்தவனை. (பொல்லாவரக்கனை) தாயையும் தமப்பனையும் பிரித்த (1) நிர்க்ருணனை "சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்." (பொல்லா) "முன்பொலாஇராவண னிறே; பிராட்டி "த்வம் நீச சசவத்" என்றாள் "விபீஷணஸ்து தர்மாத்மாநது ராக்ஷஸ சேஷ்டித:" என்று நல்ல அரக்கனும் உண்டென்கை.

(கிள்ளிக்களைந்தானை) (2) மறுவலிடாதபடி கிழங்கோடே வாங்கினபடி. தோஷாம்சத்தை வாங்கிப் பொகட்டபடி. குணாம்சம் ஸ்ரீவிபீஷணாழ்வான் (கீர்த்திமை) எதிரிகள் நெஞ்சு உளுக்கும்படியிறே. பெருமாள் பராக்ரமம் இருக்கும்படி. "சத்ரோ: ப்ரக்யாதவீர்யஸ்ய" என்னும்படியான வீர்யம் ராவணன் வீர்யத்துக் கிலக்கானான். தங்கை அழகுக்கிலக்கானாள். தம்பி சீலத்துக்கிலக்கானான். தங்களுக்கு பலமுண்டாக அவன் விஜயத்தையே அனுசந்திக்கிறார்கள். பரம சேதனன் உபாயமாமிடத்தில் அது "ஞானசக்திகருணாஸ" என்கிற ஜ்ஞான சக்தி க்ருபைகள் வேண்டுகையாலே, அவற்றை அனுஸந்தித்து மார்விலே கை வைத்து உறங்குமவர்கள் இவர்கள் குணவான் வீர்யவானிறே (பாடிப்போய்) கால் கொண்டு போய் என்கை (பிள்ளைகளெல்லாருமித்யாதி) இன்னமுணர்ந்து முணராத சிறு பிள்ளைகளை எழுப்பிக் கொண்டு விடிந்த வாறேபோகிறோம்என்ன அவர்கள் முன்னேஉணர்ந்துக்ருஷ்ணன் மெய் காட்டுக் கொள்ளுமிடம்புக்கார்களென்கிறார்கள். (பாவைக்களம்) 'போர்க்களம்' "நெற்களம் என்பாரைப் போலே. (பிள்ளைகளெல்லாரும்) எல்லாரும் — நாம் சென்றெழுப்ப வேண்டுமபடியான பாலைகளும் (பாவைக்களம்) ஸங்கேதஸ்தலம் அவர்கள் போனார்களாகிலும் அகாலத்திலே போகவெணுமோ? விடிந்தால் போருங்கோள் என்ன (வெள்ளியெழுந்து) நினைக்கிறபடியே வெள்ளியுச்சிப்பட்டு வியாழனும் அஸ்தமித்தது என்ன; "நக்ஷத்திரங்கள் கண்டதெல்லாம் வெள்ளியாயும் வியாழமாயுமன்றோ உங்களுக்குத் தோற்றுவது அவைபுனர் பூசம் பூசமுமாகக் கொள்ளீர்; மற்றடையாளமுண்டோ" வென்ன நாங்கள் இரண்டு தோன்று மதல்லவோ என்ன நீங்கள் பிரியிலன்றோ திரளவெண்டுவது, மற்றடையாளமுண்டோ என்ன, (புள்ளும் சிலம்பினகாண்) புள்ளும் சிதறிப் போந்தன (போதரிக் கண்ணினாய்) இக்கண்ணுடைய எனக்கு ஓரிடத்திலே புறப்பட வேணுமோ? என்ன · என்காலிலே விழுகிறார்கள்" என்று கிடக்கிறாயோ? (அரி) வண்டு பூவிலே வண்டிருந்தாப் போலே (3) அஸிதேக்ஷணையாகையாலே, அவனும் அவன் (4) விபூதியும்

---

(1) நிர்க்ருணன் = தயையில்லாதவன்

(2) மறுவலிடாதபடி = மீண்டும் தோன்றாதபடி.

(3) அஸிதேக்ஷணை — கறுத்து அழகிய கண்களை உடையவள்

(4) விபூதி = ப்ரக்ருதிமண்டலமும், பரமபதமுமாகிய செல்வங்கள்,

கண்ணிலொரு மூலைக்குப் போராது. இக்கண்ணாலே அவனைக் குமிழி நீருண்ணப்பாராய், (குள்ளக்குளிர) ஆதித்யகிரணங்களாலே நீர் வெதும்புவதற்கு முன்னே (குடைந்து நீராடாதே) தாங்களானையாலே உள்ளே கிடந்தாலும் தங்கள் ஸம்பந்தத்தாலே கொதிக்குமென்று அறிகிறிலள் (பள்ளிக்கிடத்தியோ) பிள்ளைகள் தாங்களும் படுக்கையை விட்டுப் போகாநிற்க, நீ படுக்கையிலே கிடப்பதே, அவன் கிடந்து போன படுக்கையென்று மோந்து கொண்டு கிடக்கிறாயோ ? பயிர் விளைந்து கிடக்க, கதிர் பொறுக்கி ஜீவிக்கிறாயோ ? (பாவாய் நீ) தனி கிடக்க வல்லவளோ நீ (நன்னாள்) (6) அடிக்கழஞ்சு பெற்ற இந்நாளிலே. இந்நாலு நாளும் போனால், மேலில் நாள்கள் ராவணனைப் பொலேயிருக்கும் நாள்கள்.

(கள்ளம் தவிர்ந்து) "சோரேணாத்மாப ஹாரிணா" என்று தத்வஸ்துவிலும், ததியவஸ்துவை அபஹரிக்கை யன்றோ பெருங் களவு. 'கலந்து குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே ' என்று க்ரியை.

14 ஊங்கள் புழைக் கடைத்தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோவில் சங்கிடுவான் போதந்தார்.
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய் !
சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய்.

பதினாலாம் பாட்டு ;—இதுக்கெல்லாம் கடவளாய் எல்லாருக்கும் முன்னே தானுணர்ந்து எல்லாரையுமுணர்த் தக்கடவளாக ப்ரதிஜ்ஞை பண்ணினவொருத்தியை எழுப்புகிறார்கள்.

(உங்கள் புழைக்கடையித்யாதி) இவர்கள் வாசலிலே வந்து "போது விடிந்தது எழுந்திராய்" என்ன அடையாளமென் என்ன; பஞ்சலக்ஷம் குடியில் பெண்களும் போய், பேசுவாரும் பேசாதிருப்பாருமாய் வந்து நிற்கிறது விடிந்த மைக்கடையாளமன்றோ என்று, செங்கழுநீர் அலர்ந்தாப் போலேயும் ஆம்பல் மொட்டித்தாப் போலேயும் என்று தங்கள் வாயைச் சொல்ல உங்கள் வாய் நீங்கள் வேண்டின போது அலர்ந்து மொட்டியாதோவென்ன; வயலில் அவையும் அப்படியே என்ன; நீங்கள் போய் அலர்த்தியும் மொட்டிக்கப் பண்ணியும வைத்தீர்கள் என்ன; தோட்டத்தில் வாவியில் அவையும் அப்படியே யென்ன, "வயலிலணித்தன்றோ உங்களுக்குத் தோட்டத்து வாவி ' என்ன, புழைக்

---

(5) குமிழிநீரூட்டல் = பெருவெள்ளத்தில் சுழியுள்ள பகுதியில் அகப்படுத்துதல் (அதாவது சிக்கவைத்தல்)

(6) அடிக்கழஞ்சு = ஒரு அடியிடமானது கழஞ்சு பொன்னை விலையாகப் பெறும்படி. உண்டான மதிப்பு. (மிகவும் சிலாக்கியமானது என்று கருத்து)

கடைத் தோட்டத்தில் வாவிகளிலவையும் அப்படி அலர்ந்து மொட்டித்ததென்ன, "அது உங்களுக்குக் கைவந்த விடமன்றோ "என்ன (1) அஸூர்யம்பச்யமாய் க்ருஷ்ணனுக்குப் புகுராவொண்ணாதபடி உங்கள் புழைக்கடைத் தோட்டத்தில் வாவியில் செங்கழுநீரலர்ந்து ஆம்பல் மொட்டித்ததென்ன;

அலரப்புக் கமர்த்ரத்திலே கழியவெல்லாமலர்ந்ததென்றும் மொட்டிக்கப்புக்க மாத்திரத்திலேமுட்ட மொட்டித்ததென்றும் சொல்லுகிறீர்கள், இதொழிய அடையாளமுண்டானால் சொல்லுங்கோள்; என்ன (செங்கற்பொடிக் கூறை இத்யாதி) அளற்றுப் பொடியிலே புடவையைப் புரட்டி ப்ரஹ்மசர்யம் தோற்றப்பல்லை விளக்கி ஸபையார் பொடிகிறார்கள் (2) கோமுற்றவன் தண்டம் கொள்ளுகிறான்" என்று போதுவைகிற்றென்று தபசிகளுமகப்பட உணர்ந்தார்கள், (தங்கள் திருக்கோயில்) அவர்கள் சொல்லும் ப்ரகாரம் "சங்கு" என்றுகுச்சியைச் சொல்லுகிறது சங்கு ஸமாராதனத்துக்கு (3) உபலக்ஷணம், வெள்ளையைத்தவிர்ந்து காஷாயத்தை உடுத்து (4) போகோபகரணங்களைத்தவிர்ந்து (5) தபஸ்சர்யை உடையராயிருக்குமவர்கள் ஸந்த்யா வந்தனாதிகள் சமைந்து அ;கங்களில் திருமுற்றத்திலே எம்பெருமானை ஆராதிக்கும் காலமாயிற்றென்றுமாம் இரண்டுப்ரகாரத்தாலும் ஸாத்விகரோடு தமோபிபூதரோடு வாசியற உணர்ந்ததென்கிறார்கள்" தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்; வேதா:ச (எங்களைமுன்னமிபாதி) நேற்று எங்களை எழுப்புகிறேன் க்ருஷ்ணன்பாடு கொடுபோகிறேன், என்றது கண்டிலோமேயென்கிறார்கள். (வாய்பேசும்) பொய் சொல்லவுகக்கும் க்ருஷ்ணனோடேயிறே பழகுகிறது பொய்யை நினைத்ததுக்கு மேலே பிறரறிய வேணுமோ? (நங்காய்) சொன்னத்தோடே சிலவாகிலும் கூட்டாதேயிருப்பார்க்கு ஒருபூர்த்தியும் வேணுமோ வென்கை (எழுந்திராய்) இவர்கள் பேச்சே அமைந்தது இவளுக்கு.எங்கள் குறைதீராய். (நாணாதாய்) (6) நீயிருந்த

---

(1) அஸூர்யம் பச்யமாய் = கதிரவன் ஒளியைக் காணாததாய்.

(2) கோமுற்றவன் அரசன்

(3) உபலக்ஷணம் = தனக்குரியபொருளைக் குறிப்பதோடல்லாமல் அதனோடு சேர்ந்த பிறபொருளையும் குறிப்பது

(4) போகோப கரணங்கள் = அனுபவிப்பதற்கு உதவுமவையான சந்தனதாம்பூலாதிகள்

(5) தபஸ்சர்யை = தவஒழுக்கம்.

(6) நீயிருந்த ஊரில் பூசினியும் காயாதோ பூசினிக் கொடியின் மேலே சொர சொரப்பாகமுள்போன்று இருக்கும். அதன் பெயர் 'சுரணை" என்பர் பூசனிக் கொடியில் சுரணையிருந்தால் தான் அதில் காய்க்கும் சுரணை சுணை என்றால் வெட்கமும் சுரசுரப்பும் உனக்கு வெட்கமில்லை யென்பதேயில்லை. வெட்கமென்றும் பொருள் தரும் சுணை என்றும் சொல்லுக்கு மற்றொரு பொருளும் = சொரசெரரப்பும் பூசனிக்கொடிக்கும் இல்லாததால் அதுவும் காயாதோ என்று பொருள் சூடு சொரணை கெட்டவளே என்று அவளைப்பழிப்பதற்காக இவ்வாறு பேசுகின்றனர்.

ஊரில் பூசினியும் காயாதோ வென்கை. (நாவுடையாய்) வாயேயிறே உனக்குள்ளதென்கை.

(சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையனித்யாதி) இவர்களை தரிப்பிக் கைக்காக. "நாவா லுள்ளகாரியம் கொள்ளுங்கோள்" என்ன, அவன் திருநாமங்களைப்பாடு என்கிறார்கள். (சங்கொடு சக்கரம்) இன்னுரென்றறியேனித்யாதி (பங்கயக்கண்ணனை) "ஜிதம் தேபுண்டரீகாக்ஷ" சங்குசக்கரங்களைக் கொண்டு திரு நாபீகமலம் போலேயிருக்கை, "தூதுசெய்கண்களிறே" இள வாய்ச்சியர் கண்ணினுள் விடவே செய்து விழிக்கும் பிரான்.

15. எல்லே' இளங்கிளியே இன்ன முறங்குதியோ?
சில்லென்றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தானுயிடுக
ஒல்லை நீபோதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்
ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோரெம்பாவாய்

பதினைந்தாம் பாட்டு —இவர்கள் தங்களிலே கூடிப் பாடின பாட்டைக் கொண்டு அசல் திருமாளிகையிலே கேட்டுக் கிடப்பா ளொரு பெண்பிள்ளையை தன்னிலே நுடங்கிப்பாடுகிறபடியைக் கேட்டு "எல்லே இளங்கிளியே" என்கிறார்கள்.

திருவானபேச்சிருந்தபடி என்னென்று கொண்டாடுகிறார் கள். யாழிலேயிட்டுப்பாடி இனிதானவாறே (1) மிடற்றிலே யிட்டுப்பாடுவரைப் போலே முற்படப். பெண் பாடக்கேட்டு அவர்கள் பாடுகிறார்கள்.

(எல்லேயித்யாதி) இளங்கிளி என்று கிளியை (2) வ்யாவர்த் தித்தபடி. தாங்கள் கிளிகள் இவள் இளங்கிளி பாட்டிலினிமை யுமப்படியே இதொரு பேச்சே என்று கொண்டாடுகிறார்கள். இவர்கள் பாட்டுக்கொண்டாடினத்தை, பயத்தாலே தங்களு டைய உடம்பும் வாயும் வெளுத்திருக்க க்ருஷ்ணசம்ச்லேஷத் தாலேநம் முடம்பு பசுமையுண்டாய் வாயும் சிவந்திருக்கிறது என்று ஒன்றும் பேசாதே கிடந்தாளாயிருந்தவாறே. (இன்ன முறங்குதியோ) (3) உத்தேச்யம் கைபுகுந்தாலும் உறங்குவா ருண்டோ? (சில்லென்றழையேன்மின்) (4) தானனுஸந்திக்கிற அனுஸந்தானத்துக்கு இவர்களழைக்கிற சொல்

(1) மிடற்றிலே = தொண்டையிலே
(2) வ்யாவர்த்தித்தபடி விலக்கியபடி
(3) உத்தேச்யம் விரும்பப்படுமது
(4) தானனுஸந்திக்கிற அனுஸந்தானத்துக்கு = தான் அனு பவித்துப்பாடுகிறபாட்டுக்கு.

(5) விக்னமாகையாலே சிலுகிடாதே கொள்ளுங் கோளென்கிருள். (6) திருவாய்மொழி பாடா நின்ருல் செல்வரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாப்போலே. (நங்கைமீர் போதருகின்றேன்) இவர்கள் சிவட்கென்ன. நாங்களும் எங்கள் சொல்லுமாகாதபடி உன் குறை வறுகை இருந்தபடியென்னென்ன நீங்களன்றோ குறை வற்றீர்கள் : படுத்தாதே கொள்ளுங்கோள் புறப்படாநின்றேன் என்ன (வல்லையுன் கட்டுரைகளித்யாதி) நீ சொல்லிற்றைச் சொல்லி எங்களதே குற்றமாம்படி வார்த்தை சொல்லவில்லை என்னுமிடம் இன்னேயல்லவறிகிறது. எத்தனை காலமுண்டு உன்னோடே பழகுகிறதென்ன.

(வல்லீர்கள் நீங்களே) உங்கள் வாசலிலே வந்து உங்களாலே படாததுண்டோவென்ன அது (7) ஸாத்யம் இது (8) ஸித்தமன்றோ ; (9) ப்ரத்யக்ஷத்துக்கு அனுமானம் வேணுமோ ? என்ன? (நானேதானாயிடுக) வென்று ஸ்ரீபரதாழ்வான் "மத்பாபமேவாத்ர" என்ருப்போலே "மத்பாக்யஸங்க்ஷயாத்" இறே (10) பரஸ்துதியோடொக்கும் (11) ஸ்வநிகர்ஷம். (ஒல்லை நீ போதாய்) அவள் புகுராவிடில் தங்களுக்கு ப்ராணஹாநியாகையாலும் அவளுக்குமனர்த்தமாகையாலும் சடக்கெனப் புறப்பட்டுக் கொடுநில், என்ன ; வைஷ்ணவ கோஷ்டியைப் பிரியாதிருக்கை நன்று (உனக்கென்ன வேறுடையை) பஞ்சலக்ஷம் குடியில் பெண்களுக்குள்ளதொழிய உனக்கு வேறே சில உண்டோ ? உன்ஸ்வயம்பாகம் இன்னம் தவிர்ந்ததில்லை. பெரும்பானை கண்ட

---

(5) விக்னம் = இடையூறு.

(6) திருவாய் மொழி பாடா ... போலே = ஸ்ரீ ரங்கத்தில் சந்திர புஷ்கரிணிக் கரையிலுள்ள புன்னை மரத்தடியில் நாள் தோறும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளாக இருந்து திருவாய்மொழி பாராயணம் பண்ணிக் கொண்டிருப்பர். அதுசமயம் நித்யோத்ஸவத்திற்காக செல்வர் எழுந்தருளுவர். அப்போது பாராயணத்தை நிறுத்திவிட்டு எழுந்திருந்து மரியாதை செய்வர். செல்வர் எழுந்தருளுவதையும் கூட திருவாய்மொழி அனுஸந்தானத்து இடையூறு ஏற்பட்டதே என வெறுப்புக் கொள்வாராம் (இது திருவாய்மொழியில் உள்ள அத்துணை ஈடுபாட்டைக் குறிக்கிறது)

(7) ஸாத்யம் = நம் முயற்சியினுல் உண்டு பண்ணப் படுவது

(8) ஸித்தம் = நம்மால் ஸாதிக்க வேண்டியதாக இராது எப்போதுமிருப்பது.

(9) ப்ரத்யக்ஷத்துக்கு அனுமானம் வேணுமோ = கண்ணுக்கு நேரே தென்படும் பொருளை, மற்றொரு (குறி) காரணத்தினுல் ஊகித்து அறிய வேணுமோ.

(10) பரஸ்துதி = பிறரைத் துதித்தல்

(11) ஸ்வநிகர்ஷம் = தன் தாழ்மை

(12) ஸ்வயம்பாகம் = தானே சமையல் செய்வது

பின்பும் என்கிறுர்கள். அதாவது (13) மத்யமபதமும் மூன்றும் பதமும். காட்டில் இளைய பெருமாளுக்கு ஸ்ரீ பரதாழ்வானைக் காண்கை அஸஹ்யமானவாறே பெருமாள் " ஆகில்நீர் ராஜ்யத்தை ஆளவேணும் " என்ன இளையபெருமாள் தரைப்பட்டாப் போலே, இவளும் " உனக்கென்ன வேறுடையை " என்ன, அப்படி தரைப்பட்டாள். சாதுகோட்டியுட் கொள்ளப் படுவாரென்கை புருஷார்த்தம். இக்கோஷ்டிக்குப் புறம்பாயிருக்கைக்கு மேற்பட அனர்த்தமுண்டோ ? விஷயங்களைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம். ஈச்வரனைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம் ; ஆத்மாவைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம். "ஸஸைந்யம் பரதம்கத்வாஹநிஷ்யாமிநஸம்சய: " "ராஜ்ய மஸ்மை ப்ரதியதாம் " " ஸ்வாநிகாத்ராணிலஜ்ஜயா ".

(எல்லாரும் போந்தாரோ) உங்களையொழிய எனக்கொரு ஸுகமுண்டோ ? உணர்வறியாத சிறு பெண்களுமிழக்க வொண்ணுது ; அவர்களும் உணர்ந்தால் புறப்பட வேணுமென்று கிடந்தேன் : எல்லாரும் போந்தாரோ) அடையவந்து புறப்பட்டு (14) மெய்க்காட்டுங் கோளென்ன ; மெய்க்காட்டுக்கு ப்ரயோஜனம் தொட்டெண்ணுகையும், தனித்தனி எல்லாரையும் தழுவுகையும்.

(வல்லானை கொன்றுனை) இனி உங்களுக்குச் செய்யு வேண்டுவதென்னென்ன உன் அழகிய மிடற்றுலே ' வல்லானை கொன்றுனை என்னுய் என்கிறுர்கள். " ஒருநாள் செய்த உபகாரம் அமையாதோ நமக்கு" என்று கொண்டாடுகிறுர்கள் (வல்லானை கொன்றுனை) " புகுவாய் நின்ற போதகம் வீழப் பொருதான் " என்று வாசலிலே ஆனையை நிறுத்தி பிள்ளையை ஆனை நலிந்ததாகக் கேட்போமிறே என்று கம்ஸன் அம்மானுயிருக்கப் பார்க்க, அத்தைக்கொன்று அவ்வூரில் பெண்களையும் தம்மையும் உளோமாம்படி பண்ணி ஜீவனமான தன்னைநோக்கித் தந்தவன். (மாற்றுரையித்யாதி) சக்ரவர்த்தி திருமகனைப் போலே " நாளை வா " என்னுதே அக்கணத்திலே கம்ஸாதிகள் நினைத்த நினைவை அவர்கள் தங்களோடே போக்கி தாய் தமப்பன் காலில் விலங்கைப் போக்கி வாழ்வித்தவன்.

(மாயனை) தன் கையில் எதிரிகள் அகப்படுமவற்றைத்தான் பெண்கள் கையிலே அகப்பட வல்லவன் (பாட) நமக்கவன் தோற்கும் தோல்விக்குத் தோற்றுப்பாட. இவ்விஷயத்திலே

---

(13) மத்யமபதமும் மூன்றும் பதமும் = அஷ்டாக்ஷரத்திலுள்ள " நம :" என்னும் நடுப்பதமும், " நாராயணுய ' என்ற மூன்றும் பதமும் ஆகும். ஆத்மாக்களாகிய நாம் நமக்கு உரியவர்களல்லோம். நாராயணனுக்கும் அவனடியார்களுக்கும் உரியவர்களாவோம் என்பது கருத்து. நம: பதத்திற்கு பாகவத சேஷத்வம் பொருள். நாராயணுய என்பதற்கு பகவத் கைங்கர்யம் பொருள். ஆக பாகவதர்களோடு கூடி பகவத் கைங்கர்யம் செய்ய வேணும், தனியே கூடாதென்றபடி.

(14) மெய்க்காட்டுங்கோள் = நேரில் வந்து நில்லுங்கள்.

ஜயம் (15) ப்ரணயித்வத்துக்குக் கொற்றை ; ஆதலால் தோல்வி விஜயமான விடமிறே இவ்விடம்.

16. நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய
கோயில் காப்பானே ! கொடித்தோன்றும் தோரண
வாசல் காப்பானே ! மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர்சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா ! நீ
நேசநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய்.

பதினாறும் பாட்டு—கீழ்ப்பத்துப்பாட்டாலுமாக பஞ்ச லக்ஷம் குடியில் பெண்களையும், ஒருவரையுமொருவர் எழுப்பினமைக்கு உபலக்ஷணமாகையாலே எல்லாரும்கூட எழுந்திருந்து ஸ்ரீ நந்த கோபர் வாசலிலே வந்து நின்று ஸ்ரீ நந்த கோபருள்ளிட்டாரை எழுப்பி "செய்யாதன செய்யோம்" என்ற முறை தப்பாமே முதலிகளையும் பிராட்டியையும் முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானைப் பற்றப் பார்க்கிறார்கள்.

(நாயகனாய் நின்ற நந்தகோபன்) "யேஷாம் த்ரீண்யபதா நாநி யோநிர் வித்யாச கர்மச. தேஸேவ்யாஸ்தைஸ்ஸமாயுக்த : சாஸ்த்ரேப் யோ S பி விசிஷ்யதே." "த்வதீயகம்பீரமனோ S னுஸாரிண :; இவர்கள் சாஸ்த்ர தாத்பர்யங்களை அரைச் சந்தையாலே சொல்லி விடுவர்கள். "வேதம் வல்லார்களைக் கொண்டு" இத்யாதி. அவனைப் பெறுமிடத்தில் ததீயர்களைக் கொண்டு பற்ற வேணுமென்கை.

(கோயில் காப்பானே) இவர்களால் (1) லபிக்கிற எம்பெருமான் பக்கலன்று நாயகத்வம், இவர்கள் தங்கள் பக்கலிலே. "பிதாமஹம்நாதமுநிம்விலோக்ய". புருஷகாரம் (2) கார்யகரமென்கை பட்டர்நஞ்சீயர்க்கு "பெருமாளைத் தஞ்சமென்றிரும் பெருமாள் தஞ்சமென்று சொல்லுகையாலே நான் தஞ்சம் என்றபடி" என்றருளிச் செய்தார். ஆகையால் ஆசார்யர்களே உபகாரகரென்று நாயகனென்கிறாள் (நந்தகோபனுடைய கோயில்) எம்பெருமான் (3) பரதந்த்ரனாகையாலே. "அடியார் நிலாகின்ற வைகுந்தமிறே." அங்குவானிளவரசு. ஸ்ரீஸேனாபதியாழ்வானைப் போலே இங்கும் ஸ்ரீ நந்த கோபர். சக்ரவர்த்திக்குமப்படியே (கோயில் காப்பானே) சிறு பெண்களாகையாலே அவன் தொழிலையிட்டுப் பேசுகிறார்கள். (கொடியித்யாதி) கோயில் காப்பானென்று இங்குத்தைக்குமாய் அவன் தன்னையே வாசல் காப்பான் என்கை. அன்றிக்கே வேறே திருவாசல் காப்பானைச் சொல்லிற்றாகவுமாம். ஆர்விக்னம் பண்ணுகிறரென்று

(15) ப்ரணயித்வத்துக்கு = காதலுடைமைக்கு
(1) லபிக்கிற = அடையப்படுகிற
(2) கார்யகரம் = கார்யத்தை முடித்துத் தருவது.
(3) பரதந்த்ரன் = பிறர்க்கு வசப்பட்டவன்.

அறியாமை பயப்பட்டு எல்லார் காலிலும் விழுகிறார்கள். (மணிக் கதவம்) அழகு—உள்ளே போவாரை வழி பறிக்கும். "பொன்னியலும் மாடக்கவாடம் கடந்து புக்கு" 'ஸததந்த : புரத்வாரம் ஸமதீத்யஜநாகுலம்." "ஒரு வண்ணம் சென்று புக்கு." (மணிக் கதவம்) இது உள்ளே புகுவாரைக் கால் கட்டும். (ஆயர்சிறுமியரோமுக்கு) திருவாசல் காக்குமவன் "இம்மத்ய (4) ராத்ரிப் போதிலே யார் ? திறக்க அழைக்கிற நீங்களார் ? பயம்மிக்கிருக்கிற தேசத்திலே" என்ன, "பயமென்?" என்ன சக்ரவர்த்தியும் திருவயோத்யையும், ஆண் புலிகளும், மந்த்ரிகளான வசிஷ்டாதிகளுமில்லையே இங்கு ; ஸாது ஸ்ரீ நந்தகோபரும், சிறு பிள்ளைகளும் இடைச்சேரியுமாயிருக்கிறதுக்கு மேல், கம்ஸன் சத்ருவாயிற்று. ஆன பின்பு பயம் கெட்டிருக்கலாமோ என்ன, எங்களுக்குப் பயப்பட வேணுமோ, பெண் பிள்ளைகளன்றோ" என்ன; "சூர்ப்பனகிராக்ஷஸியன்றோ" என்ன, நாங்களிடைப் பெண்களென்ன; "பூதனைக்குப் பின்பு இடைச்சிகளுக்கன்றோ பயப்பட வேண்டுவது" என்ன. "நாங்கள் (5) க்ருத்ரிமைகளல்லாத கன்யகைகளன்றோ, எங்கள் பருவத்தைப் பாராய்" என்ன; "பருவம் பார்த்துக் கொள்ளுகிறோம்; வார்த்தையிலே அறியலாம். நீங்கள் வந்த கார்யம் சொல்லுங்கோள்" என்ன, (அறைபறை) நோன்புக்குப் பறை வேண்டி வந்தோம்" என்ன.

"அதுவாகில் கேள்வி கேட்க வேணும்" என்ன (மாயன்மணிவண்ணனித்யாதி) நேற்றே கேட்டு அவனும் தருகிறோம் என்றான் என்கிறார்கள். (மாயன்) கோஷ்டியிலே தாழநின்று கையைக் காலைப் பிடித்தபடி. (மணிவண்ணன்) தாழ நின்றதிலும் அவன் வடிவே போருமென்கை. பூவலரும்போது பிடிக்கும் செவ்வி போலே, வார்த்தை அருளிச் செய்யும் போதை அழகு. "வாக்மீ ஸ்ரீமான்" (நென்னலே) திருமுளையன்று நேற்று "கையார் சக்கரம்" என்னுமாபோலே. (நென்னலே) உன் கால் பிடிக்க வேண்டுகிற இன்று போலேயோ ? அவன் காலைக் கையைப் பிடிக்கவிருந்த நேற்றை நாளும் ஒரு நாளே என்கிறார்கள். (வாய்நேர்ந்தான்) (7) ஓலக்கத்திலே ஒரு வார்த்தை சொன்னானாகில் மெய்யென்றிருக்கவோ ? அந்தரங்கமாகச் சொல்ல வேண்டாவோ ? என்ன, "ராமோ த்விர்நாபி பாஷதே" யன்றோ, சொல்லாதொழிந்தவன்று செய்யலாவதில்லை; சொன்ன பின்பு அவன் வார்த்தையிலே பழுதுண்டோ ? (தூயோமாய் வந்தோம்) என்கிறார்கள், தூய்மை அவனுடைய ரக்ஷையும், அவன் ப்ரயோஜனமுமொழிய (8) ஸ்வயத்னம், (9) ஸ்வப்ரயோஜனமிலலாமலிருக்கை: திருவடி, திருவாழி மோதிரத்தை

---

(4) மத்யராத்ரி = நள்ளிரவு

(5) க்ருத்ரிமைகளல்லாத பெண்கள் = வஞ்சகம், சூது மாயை கபடமறியாத அப்பாவிப் பெண்கள்.

(7) ஓலக்கத்திலே = சபையிலே (கோஷ்டியிலே)

(8) ஸ்வயத்னம் = தன்முயற்சி

(9) ஸ்வப்ரயோஜனம் = தன்னுடையபயன்

யும் தன் வடிவையும் காட்டாதே தன்மிடற்றி ஞேசையைக் காட்டி (10) விச்வஸிப்பித்தாப் போலே தங்களுடைய ஆர்த்தத்வனியைக் காட்டுகிறுர்கள். "ப்ரணுதஸ்ச மஹாநேஷ,,; என்ற (11) ஆர்த்தநாதம் "ஆநயைநம்" என்னப் பண்ணிற்றிறே

(வந்தோம்) இங்குவர்த்திக்கிற உனக்கு அமைவு தெரியாமையில்லே (துயிலெழப் பாடுவான்) "ஸமயாபோதித:" என்று பிராட்டி உறங்குகிறபடி கண்டு உகந்தாள், நாங்களும் பெரியாழ்வார் பெண்பிள்ளேகள். "படுத்த பைந்நாகணே" "மடியாதின்னே"

(வாயால் முன்ன முன்னம் மாற்றுதே) மனத்திஞல் நிஃனத்தாலும் வாயாலே நெருப்பைச் சொரியாதேகோள் இவர்களுக்கு இவன் வாயதிறேவாஞள், (அம்மா) அவன் வாய் நேர்ந்தாலும் இவர்கள் நடத்தாவிடில் கார்யகரமாகாது. "வத்யதாம்" என்றவாறே "அஸ்மாபிஸ்துல்ய:" என்ன வேணுமிறே (நீநேச நிஃலக்கதவம் நீக்கு) உள்ளிருக்கிறவஞே எங்களுக்கு நாயகன் நீயன்றே; "வாசாதர்மமவாப் நுஹி" பண்ணுயோ? இவர்கஃள, "தாஃளயுருவிக்கதவைத் தள்ளிக்கொடு புகுருங்கோள்" என்ன அது உன்னிலும் பரிவுடையகதவுகாண், எங்களால் தள்ளவொண்ணுது "நீயேதிற" என்கிறுர்கள். கம்ஸன் (12) படைவீட்டிலுடைய ப்ரதிகூலிக்கும்படி; "படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே இத்யாதி.

17. அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா எழுந்திராய்
கொம்பஞர்க்கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறுய்
அம்பரமூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச்செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோரெம்பாவாய்.

பதினெட்டாம் பாட்டு —கருந்தாஃளயுருவித்திருவாசல் காப்பானும் "உள்ளே புகுருங்கோள்" என்று சொல்ல உள்ளே புக்கவாறேபிள்ஃளக்குக் காவலாகப் பெண்கள் களவுகாணப் போவர்களென்று நோக்கிக் கிடக்கிற ஸ்ரீ நந்தகோபரை எழுப்புகிறுர்கள்.

(அம்பரமே தண்ணீரேயித்யாதி) புடவை தண்ணீர் சோறுடு வாசியற வேண்டுவார்க்கு வேண்டிற்றுத் தடை.

---

(10) விச்வஸிப்பித்தாப்போலே = நம்பும்படி செய்தாப் போலே

(11) ஆர்த்தநாதம் = துன்புற்றவரின் துயரக்குரல்

(12) படைவீடு = ராஜதானி (தஃலநகர்)

யின்றிக்கே கொடுக்கை (அறஞ்செய்யும்) (1) (பலாபிஸந்திரஹிதமாக(2) ஆந்ருசம்ஸ்யத்தாலே கொடுக்கை (எம்பெருமான்) பெண்களுக்கு க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்தவன் "ஸர்வலாபாய கேசவ :" "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையு "மெல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றென்றே" எல்லாமாயிருக்கிறவர்களுக்கு அவ்வொன்றையும் தாராய். (நந்தகோபாலா) க்ருஷ்ணனைப் பெற்றுத்தந்த நீர் நாங்கள் பெறும்படி பாரீர். (3) ஹிதபுத்தி பிதாக்கள்பாடே உண்டாகையாலே புகுருங் கோளென்னுனிறே.

(கொம்பனாரித்யாதி) நாங்கள் வருந்தனையுமன்றோ நீ காப்பதென்கை "நாரீணாமுத்தமா" என்று பெண்களாய்ப் பிறந்தார்க் கெல்லாம் தலையாகப் பிறந்தவளே (குளவிளக்கே) பெண்களாய்ப்பிறந்தார்க்கெல்லாம் த்ருஷ்டியான விளக்கே. (எம்பெருமாட்டி) க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்து எங்களுக்கு (4) ஸ்வாமிநியானவளே (அசோதாய்) கிருஷ்ணனுக்கும் பெண்களுக்குமுள்ள சேர்த்திக்கு உகக்குமவளே (5) ஸஜாதீயை ஆகையாலே நோவறியுமே அவள் (அறிவுறாய்) நீயறிந்த அன்று எங்களுக்கு ஒரு குறை யுண்டோ? நீகாவலாக அமையு மென்கை. அவளனுமதி பண்ணின மாத்ரத்தோடே க்ருஷ்ணனை உள்ளேபுக்கு எழுப்புகிறார்கள் (அம்பரமித்யாதி) (6) பரதந்த்ர னென்று (7) கண்ணழிவு சொல்லவேண்டாது, அவளனுமதிகொண்டோம்(8) அநந்யப்ரயோஜநராய் வந்தார்க்கு முகங்கொடுக்கவொண்ணாதோ? ஆண்களுமாய் (9) ப்ரயோஜநாந்தரபரர்க்கோகார்யம் செய்யலாவது; தேவர்களுக்குக் குடியிருப்பைக் கொடுத்த நீ எங்கள் குடியிருப்பை அழிக்கவோபார்த்தது. உறங்குவாரைத் தழுவக்கடவ உனக்கு உணர்ந்து வந்தவர்களைத் தழுவலாகாதோ!

"நம்பி மூத்த பிரானை எழுப்பி நம்மை எழுப்பிற்றிலர்கள்" என்று கிடக்கிறானென்று பார்த்து அவனை யெழுப்புகிறார்கள் (செம்பொற்கழலித்யாதி) பொற்கால் பொலியவிட்டுப் பிறந்த சீமானே எழுந்திராய். அவன் பாரதந்த்ர்யத்தாலே கட்டிக்

---

(1) பலாபிஸந்திரஹிதமாக = பயனை எதிர்பாராமல்

(2) ஆந்ருசம்ஸ்யம் = கொடுமைக்கு மாறுபட்ட தன்மை (தயை)

(3) ஹிதபுத்தி = நன்மை உண்டாக வேணும் என்ற எண்ணம்

(4) ஸ்வாமிநி = யஜமாநை (தலைவி)

(5) ஸஜாதீயை = ஒரே பெண் இனத்தைச் சேர்ந்தவள்,

(7) கண்ணழிவு = சாக்குப்போக்குச் சொல்லுதல் (போலிக் காரணங்களைக் கொண்டு இல்லைசெய்தல்)

(8) அநந்யப்ரயோஜ நராய் = உன்னையே பயனாகக் கருதி வேறு பயன் ஏதும் கருதாதவராய்.

(9) ப்ரயோஜ நாந்தரர்பரர் = வேறு பயனில் கருத்தூன்றியவர்.

கொண்டு கிடக்கும். இவன் ஆற்றாமையாலே கட்டிக் கொண்டு கிடக்குமென்கை. 'ஸந்தேஹச: ஸாமந்துரை: ப்ரேமகர்ப்பைராரர்விதை: ரமேணைச்வாஸிதா கோப்ய : ஹரிணா ஹ்ருத சேதஸ:'' என்கிறபடி எங்களையும் அவனையும் பொருந்த விடுமவனல்லையோ நீ என்கிறார்கள். வெறும் படுக்கையைக் கண்டுகொண்டு கிடக்கவமையுமோ'' சென்றால் குடையாம்'' இத்யாதியாகவேண்டாவோ?

18. உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழியழைத்தன காண்மாதவிப்
பந்தல் மேல் பலகால் குயிலினங்கள் கூவின காண்
பந்தார் விரலி உன்மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார்வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

பதினெட்டாம்பாட்டு— இனிமேல் மூன்று பாட்டாலே நப்பின் னைப்பிராட்டியை எழுப்பி அவள் வழியாலே எம்பெருமானை யெழுப்புகிறது பிராட்டியை யொழிந்தால் பலஸித்தியில்லையோ வென்னில்; இல்லை. எங்ஙனே யென்னில் இளையபெருமாள் பிராட்டி முன்னிலையாகப் பெருமாளைப்பற்றினார் அபராதத்தினு டைய எல்லையிலே நின்றாலும். இவள் ஸன்னிதியாலே காகம் (1) ப்ரபந்நர் பெறும் பேற்றைப் பெற்றது திருவடி பிராட்டி கடாக்ஷம் பெற்றபின்பு 'சீதாமாச்ரித்யதேஜஸ்வீ' ஆன்து மன்றிக்கே ராமதாஸனானன். ''ஏஷஸர்வஸ்வபூத:'' எம்பெரு மானாரும் கத்யத்திலுமப்படியே. ஆகையாலே இவர்களுமொரு பாட்டாலே உபாயத்துக்கு உடலாக அவனைப் பற்றி பின்னை ஒரு பாட்டாலே உபேயத்துக் குடலாக அவளையும் அவனையும் பற்று கிறார்கள்.

(உந்துமதகளிற்றன்) உந்துகை—முறுக்குகை. அதாவது பொருகிற யானையை நினைவையறிந்து நடத்த வல்லனென்றபடி. மதத்தை உந்துகளி றென்னுமாம் களிறுண்டோ இவனுக் கென்னில், ஸ்ரீவஸுதேவரும் ஸ்ரீநந்தகோபரும் ஒரு மிடறாயிருக் கையாலே அங்குள்ள தெல்லாமிங்குண்டு ஆனைகளோடே பொரும்படியான மிடுக்கையுடையவனை. ஆகையன்றோ பிள்ளை கள் போய் ஆனையோடே போருற்றது ''அவச்யம் பிதுராசார'' மிறே 'குணைர்தச ரதோபம' இறே (ஓடாததோள்வலியன்) எதிரிகளைக் கண்டு பிற்காலியாதே கொல்லவல்லமிடுக்கு நம் முடைய தனத்துக்குக் காவலுண்டென்கிறார்கள்.

''ஸ்நுஷாதசரதஸ் யாஹம் சத்ருஸைந்ய ப்ரதாபிந:'' என்று பிராட்டியருளிச் செய்தாப்போலே ஸ்ரீ நந்த கோபரைக் கொண்டாடுகிறார்கள். அது தன்னையே : நந்தகோபாலன்மரும

---

(1) ப்ரபந்நர் = தஞ்சம்புகுந்தவர்.

களே நப்பின்னாய்'' என்கிறார்கள். அவள் பின்னை'' திருவாய்ப் பாடியில் பெண்களானவர்கள் நந்தகோபாலன் மருமகளல்லாதா ருண்டோ? நமக்கென்'' என்று பேசாதே கிடந்தாள். அதுக்காக ''நப்பின்னாய்'' என்கிறார்கள்.

(கந்தம் கமழும் குழலீ) முன்பு க்ரமமறிகிலோ மென்ன; ''என்னை நீங்கள் சொல்லுகிறதென்'' என்ன; ''எங்களையும் க்ருஷ்ணனையும் சேர்த்து விடாய்'' என்ன; இங்கவனுண்டோ, என்ன 'ஆண்நாறுநின்றது: (2) வ்யாவ்ருத்தபரிமளமும், (3) ஸமுதாயபரிமளமும் அறியோமோ'' என்ன அவன் 'ஸர்வகந்த'' என்று பூவுக்கு நாற்றம் கொடுக்குமா போலே அவனுக்கு நாற்றம் கொடுக்கவல்ல குழல் இவளதென்கை. உன் குழலில் பரிமளத்தாலே அவனழுந்திக் கிடக்கும். அனுபவிக்கைக்கு நாங்கள் வேண்டாவோ? (கடைதிறவாய்) (4) கிண்ணகவெள்ளத்தை கரை கட்டினாப் போால, அடைத்துக் கொண்டு திறவாமல் கிடவாதே வெட்டி விடாய் எல்லாரும் அனுபவிக்கும்படி இவர்கள் அவளுக்கு அவயவமாகையாலும், (5) ஸ்ரக்சந்தனாதிகளோ பாதியாகையாலும் (6) போகோ பகரணமாகையாலும் இவளோடு அவன் புஜிக்கும்போது அவனுக்குத் தன் திருமுலைத் தடத்தாலே நெருக்கினவோ பாதி ப்ரியமாகையாலும் அவளையெழுப்புகிறார்கள். '' உன்தன் திருவுள்ளமிடர் கெடுந் தோறும் ''இத்யாதிவத்.

(வந்தெங்கும் கோழியழைத்தனகாண்) கதவு திறக்கப்போது விடிய வேண்டாவோ? என்ன விடிந்தமைக்கடையாளமன்றோ கோழி கூவுகிறதென்ன ஒருகோழி கூவப்போது விடியுமோ என்ன; எங்கும் கோழி கூவாநின்றதென்ன அது சாமக் கோழி மற்றடையாளமுண்டோ என்ன (மாதவியி த்யாதி) இப் பூம்படுக்கையில் நின்றும் இவை உணரும் போது விடிய வேண்டாவோ என்ன; அது மேலே கூவ நாங்கள் கீழே கூவா நின்றோம்; (மாதவிப்பந்தல் மேல்) ஸுகஸ்பர்சத்தாலே படுக்கையிலே உறங்குகிறவை.

(பந்தார்விரலி) க்ருஷ்ணனையொருகையாலும், பந்தையொரு கையாலும் அணைத்துக் கொண்டுகிடக்கை அவன் (7) செண்டை, ஒரு கையாலும் இவளையொரு கையாலும் அணைத்துக்கொண்டு கிடக்கும் அப்பந்தானோமாகில் எங்களைக் கைவிட வேண்டாவே

---

(2) வ்யாவ்ருத்த பரிமளம் = தனிப்பட்ட நறுமணம்,

(3) ஸமுதாயபரிமளம் = பொதுவானநறுமணம்.

(4) கிண்ணகவெள்ளம் = பெருவெள்ளம்.

(5) ஸ்ரக்சந்தனாதிகளோபாதி = மாலை, சந்தனம் முதலியவைகள் போல

(6) போகோபகரணம் = அனுபவிப்பதற்கு உதவுமவையான மாலை, சந்தனம் தாம்பூலம் முதலியவைகள்.

(7) செண்டு = பந்தடிக்கும் மட்டை.

இவனுக்கு அவன் போகோபகரணம் பந்து 8) லீலோபகரணம். (உன்மைத்துனன் பேர் பாட) நீங்கள் வந்ததென்னென்ன நீயும் அவனுமொருவர்க்கொருவர் (9) உத்தரம் சொல்லும்போது ஒத்து நில்லாமே உன்பக்ஷத்திலே நின்று உனக்காக அவனை (10) ஒத்தன சொல்லி அவன் தோல்வி கண்டு உன் விஜயம் பாட "அஸ்மிந்மயாஸார்த்தம்" என்று இளைய பெருமாள் பிராட்டி பக்ஷத்திலே நின்றாப் போலே பேர் பாட. "நாமம் பலவுமுடை நாரண நம்பி" என்று அவனுக்குள்ளவையெல்லாம் சொல்லிக் கொடுக்கைக்கு.

(செந்தாமரைக் கையால்) அவனுமாசைப்படும் கை: அவனுக்கும் "அணிமிகு தாமரைக்கை எங்களை "மாசுச:" என்னும்கை. நீங்கள் பண்ணுகிற பாபத்துக்கு நீங்கள் அஞ்ச வேண்டா: நானுளேனென்கிறது இப்பெருமாளுடைய அஞ்ச லென்றகை. "பவேயம் சரணம் ஹிவ:' என்னும் கை. (11) ஈச் வரஸ்வாதந்த்ர்யத்துக்கு நீங்கள் அஞ்ச வேண்டா என்கிறது பெரிய பிராட்டி யாருடைய அஞ்சலென்றகை. (சீரார் வளை யொலிப்ப) வளையையேறக்கடுகித் திறக்கப் புக்காள். அங்ஙனொண்ணாது. அவனும் நாங்களும் நடையழகைக் கண்டு வாழ வேணும்.

(மகிழ்ந்து) பேறு உன்னதாக வேணும். தர்மத்துக்குத் திறக்கவொண்ணாது. அடியே பிடித்து "பவேயம் சரணம் ஹிவ:' என்னவேணும். (12) எம்பெருமானார் விசேஷித்து கந்த பாட்டு.

19. குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய் திறவாய்
மைத்தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய் காண்
எத்தனையேனும் பிரிவாற்றகில் லாயால்
தத்துவமன்று தகவேலோரெம்பாவாய்.

---

(8) லீலோபகரணம் = விளையாட்டுக்கு உதவும் ஸாதனங்களான பந்து முதலியன.

(9) உத்தரம் = பதில்

(10) ஒத்தன = அவனுடைய தோல்விக்குத் தக்க குற்றங்களை

(11) ஈச்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு = பகவானது சுதந்திரத் தன்மைக்கு

பத்தொன்பதாம் பாட்டு : இவள் திறக்கப்புக, நம்முடையார்க்கிவள் முற்பட்டாளாகவொண்ணாது'' என்று இவளைத் திறக்க வொட்டாதே கட்டிக் கொடு கிடந்து அந்த ஸ்பர்சத்தால் மறந்து உறங்குகிறவனையெழுப்பி மறு மாற்றம் கேளாமை, பின்புமவனை உணர்த்துகைக்காகவும் அவளை யெழுப்புகிறார்கள்.

(குத்து விளக்கெரிய) நமக்குப் போலே இருள் தேட வேண்டாதே பகலையுமிரவாக்கிக்கொண்டு விளக்கெரியக் கிடக்கப் பெறுவதே இவளென்கை (கோட்டுக்கால்) குவலயாபீடத்தைக் கொன்று அதன் கொம்பாலே செய்த கால்களையுடைய கட்டில்; வீரபத்நி ஆகையாலே மற்றையவற்றில் கண்ணுறங்காது. (கட்டில்) ஜாதிப்பேச்சு.

(மெத்தென்ற) (1) ஆர்த்தராயலைந்துகிடக்கப்படுக்கையில் (2) உள்மானம் புறமானம் கொண்டாடிகண் உறங்குவதே? இவர்களுக்கு மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியிறே; அவனுக்கு நெருப்புநீராம் ஔஷத முண்டிறே (பஞ்ச சயனத்தின் மேலேறி) ''பாதேநாத்யா ரோஹதி'' என்று நாங்கள், மிதித்து ஏறினலன்றோ நீ படுக்கையிலேறுவதென்கை. அங்கேறில் அவன் ''கோஸி'' என்ன இவன் ''அஹம்ப்ரஹ்மாஸ்மி'' என்னும், ப்ரஹ்மம் நானென்னனப் போமோவென்னில், ''பரவானஸ்மி'' என்னுமாபோலே ப்ரகாரமானப்ரம்மம் என்கை. ''ரமமாணா வநேத்ரய:'' என்றுரைசைப்படுகிறார்கள்.

(கொத்தலர் பூங்குழல்) (3) பெரிய திரு நாளாய்ச் செல்லாநிற்க, குறியழியா திராதிறே; ஒருமஹாபாரதத்தாலே அலருகை

---

(1) ஆர்த்தராய் அலைந்து கிடக்க = துன்புற்றவர்களாய்

(2) உள்மானம் புறமானம் உள்ளளவுவெளியளவு இவற்றின் தன்மை.

(3) பெரிய திருநாள் = ப்ரம்மோத்ஸவம் (ஸ்ரீரங்கத்தில் அத்யயனோத்ஸவத்தைக் கூறுவர்)

(12) எம்பெருமானார்......பாட்டு = ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் வாழும் நாளில் திருப்பாவை சொல்லிக் கொண்டே பிக்ஷைக்குவரும்போது தன் ஆசார்யரான பெரியநம்பி திருமாளிகைப்பக்கம் எழுந்தருளினர். அப்போது நம்பியின் குமாரத்தி அத்துழாய் என்ற சிறுமிகைவளையொலிப்பகையில் பந்தையெடுத்துக்கொண்டு மற்றொரு கையில் அரிசியை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து வெளியே வந்தாள். ராமானுஜர் அச்சிறுமியைக் கீழே விழுந்து தெண்டனிட்டார். அதுகண்டு பதறிய அவள் தந்தையிடம் சொல்ல, அவர் சூழ்நிலையைக்கண்டு ''ஜீயா! உந்துமதகளிற்றன் அனுஸந்தானமா'' என்றாராம். பந்தும் கையுமாகத் திறந்து கொண்டு வந்த அத்துழாயை ராமானுஜர் நப்பின்னையாகவே பாவித்தார். எனவே இது ராமானுஜர் உகந்த பாட்டு.

காலம் அலர்த்துமா போலே. அவனுடைய ஸ்பர்சம். மலரிட்டு நாமுடியோம்'' என்றது மறந்தாயோ? இழவு சொல்லும் போது தங்களோடே கூட்டுவர்கள் (கொத்தலர்பூங்குழல்) ''வாசம் செய் பூங்குழலாள்'' என்னுமா போலே (கொங்கைமேலித்யாதி) கொங்கையைத் தன்மேலே வைத்துக்கிடத்தல். ''நசாஸ்த்ரம் நைவசக்ரம:'' ''பர்யாயேண ப்ரஸுப்தஸ்ச'' 'மலராள்தனத்துள்ளான்'' (மலர்மார்பா) அவனுக்கு உஜ்ஜீவனம். (வாய்திறவாய்) ''ஆர்த்தோ வாயதிவாத்ருப்த:'' என்று சொல்லிவைத்துப் பேசாதே கிடக்குமித்தனையோ? இருவரும் கூடினபின்பு (4) த்வயத்தில் உத்தரரர்த்தம் போலே அனுபவிக்குமித்தனை. அங்கொன்றும் காணுமை, (மைத்தடங்கண்ணினுய்) என்கிருர்கள். இவள்வாய் திறக்கப்போக, அவள் ''நானன்ரே'' என்ன,பேசாதே கிடந்தான். நீ கண்ணுலே விலக்க வேணுமோ? (தடங்கண்ணி) இக்கடலைக் கரைகண்டாவிறே நம்மைம் பார்ப்பது. ''நஜீவேயம் க்ஷணமபி யிறே. உன்னுலே அவனைப்பெறுகை தவிர்ந்து, இப்போது மற்றைப்படி செய்கையாய்த்தோ? (உன்மணுளனை) கோபீஜன வல்லபனென்கை. இனி உனக்கே சேஷமென்றிருக்கிருேம்.

(எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்) கட்டினகை நெகிழில் பிழைக்க மாட்டாய். புணர்ச்சிக்காகப்பிரியவும் பயப்படுவுதி (எத்தனையே லுமித்யாதி) ''அகலகில்லேனிறையும்'' என்று நீ நில்லாநின்ருய் உனக்காகவன்ரே அவன் புறப்படமாட்டாதொழிகிறது. பிரியில் நீ பிழையாய், உன்னை இழக்கவொண்ணுதென்று.

(தத்துவம்) ஸத்யம் (அன்றுதகவு) சுகவன்று என்று எங்களாற்ருமையரலே சொல்லுகிருேம். (அன்று) மெய்யேதர்மமன்று; தத்துவமன்று—ஸ்வரூபமன்று.

20. முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய் திறலுடையாய் செற்ருர்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்னமென்முலைச் செவ்வாய்ச்சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணுளனை
இப்பொழுதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்

இருபதாம் பாட்டு :— அங்கு சொல்லுவதெல்லாம் சொல்லி இவளைப் பற்றியெழுப்பி அவனுணராவிட்டவாறே ''அவன்

---

(4) த்வயத்தில் உத்தரார்த்தம் = கடவல்லி உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ள த்வயமந்த்ரத்தின் பின்பகுதி. பிராட்டியின் சேர்த்தியில் பெருமாளுக்குக் கைங்கர்யத்தை ப்ரார்த்தித்துச் செய்வதன்ரே அதன்பொருள்.

தனக்கு உரியனே? அவனுக்கும் எங்களுக்கு மடியான நீ எங்களை நீராட்டுவீ என்று நப்பின்னைப் பிராட்டியோடே (1) அர்த்திக்கிறார்கள்.

(முப்பத்து மூவர்) ரக்ஷிக்கைக்கு (ஸங்க்யாநியதியுண்டோ! (அமரர்க்கு) கொன்றாலும் சாவாதார்க்கோ உதவலாவது. (முன்சென்று) நோவு வருவதற்கு முன்னே ரக்ஷிக்க வேண்டாவோ? (சென்று) சென்று உதவக்கடவ நீ வாசலிலே வந்த எங்களுக்கு உதவிஞலாகாதோ? "மிகை" யன்றோ (கப்பம் தவிர்க்கும்) இறை தவிர்க்கை யென்றுமாம் (3) துக்க நிவ்ருத்தியை ஆசைப்பட்டார்க்கோ உதவலாவது (கலியேதுயிலெழாய்) மிடுக்கையுடைடையவனேதுயி லெழாய். எங்களுக்குக் குடியிருப்பும் ஜீவனமும் உணரும்படிகாண்கை.

(செப்பமுடையாய்) (4) பராபிபவனஸாமர்த்யம் எங்களுக்கு அனுகவொண்ணுதபடியாயிற்றே (செற்றார்க்கு இத்யாதி) (5) ஆச்ரிதவிரோதிகளைப் போக்கி, நெடுங்காலம் தேடின குணமெல்லாம் இழக்கப் புகுகிறாய் என்கை (வெப்பம் கொடுக்கை) அனுகூலர் பாடேயாயிற்றோ வென்கை. அம்பெய்ய வேண்டா; எழுந்திருந்து நோக்காய்.

இங்கு கிடையா தொழிய நப் பின்னைப் பிராட்டியை எழுப்புகிறார்கள் (செப்பன்னமென்முலை) இவன் முகம் காட்டாமைக்கு ஹேது இவளென்கை. இவள் ஸந்நிவேசம் அவன் ஜீவனம் நிதியிட்டுவைக்கும் செப்பு. சீரிய சிங்கம் வர்த்திக்கும் மலைத் தாழ்வரை (செவ்வாய்) அங்குள்ள கனியை நுகருமாபோலே (சிறுமருங்குல்) மலையின் நுனியிலேயிருப்பார் விழுகிறோமென்று பயப்படுமாபோலே, இம்மலையை புஜிக்கிற வனுக்கு பயஸ்தானமாயிருக்கை. மேலையும் கீழையும் கொண்டு இடையுண்டென்று அறியுமித்தனை (நப்பின்னைநங்காய்) (7) அனுக்தஸௌந்தர்ய ஸமுச்சயம் (துயிலெழாய்) எங்கள் ஸத்தையை உண்டாக்காய்

செய்யவேண்டுவதென்னென்ன (உக்கம்) ஆலவட்டம் (தட்டொளி) கண்ணுடி (தந்துன்மணாளனை) உன்னோட்டை

---

(1) அர்த்திக்கிறார்கள் = யாசிக்கிறார்கள்

(2) ஸங்க்யாநியதி = எண்ணிக்கையின் நியமம்.

(3) துக்க நிவ்ருத்தி = துயரம் நீங்குதல்.

(4) பராபிபவன ஸாமர்த்யம் = மாற்றாரை வெல்லும் திறன்.

(5) ஆச்ரிதவிரோதிகள் = தஞ்சமென்றுவந்தடைந்தவர்களின் விரோதிகள்.

(6) ஸந்நிவேசம் = அமைப்பு

(7) அனுக்தஸௌந்தர்யஸமுச்சயம் = சொல்லாத அழகையும் குறிப்பது.

(8) ஆலவட்டம் = விசிறி (தாலவிருந்தம் என்பது ஆலவட்டமாயிற்று)

கூட்டுகிறது எங்களுக்கு உறுப்பென்றிருந்தோம். (இப்போதே) "வைதர்ம்யம் நேஹாவித்யதே" என்று மற்றைப் போனதக்கு இரோமென்னக (எம்மை) எல்லார்க்கும் உபாயம் ஒத்திருக்குமா போலே உபேயமும் ஒன்றேயாகை. (எம்மை) "ஏஹிபச்யசரீராணி "(எம்மை நீராட்டு) எங்களையும் அவனையும் கூட முழுக்காட்ட வேணும் (நீராட்டு) "தாரா பித்ருக்ருதாஇதி என்று = ஐயர் பண்ணின விவாஹமென்று உகப்பது. அப்படியே இவர் தந்த க்ருஷ்ணனும்.

21. ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றப்படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்றமுடையாய் ! பெரியாய் ! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே ! துயிலெழாய்
மாற்றாருனக்கு வலி தொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன்னடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோரேம்பாவாய்

இருபத்தோராம் பாட்டு :— கீழ்க்கண்டாரை யெல்லாம் எழுப்பிப்பட்ட வ்யஸனம் தீர அவன் தன்னையே எழுப்புகிறார்கள் நப்பின்னைப்பிராட்டி நான் உங்களிலே ஒருத்தியன்றோ?

நாமெல்லாரும் க்ருஷ்ணனை அர்த்திக்கக் கடவோம் என்ன எழுப்புகிறார்கள்.

(ஏற்ற கலங்களித் யாதி) கலங்களிடுவார் தாழ்வே இட்ட கலங்களெல்லாம் நிரம்பி எதிர் பொங்கி வழிந்து வெள்ளமிடும். (மாற்றாதே) கலமிடுவாரில்லையென்றால் அத்தால் தவிராது. முலையில் கடுப்புப் போகாது. (வள்ளல்) (1) அபேக்ஷையால் கொடுக்குமவனைப் போலே அவையும் அபேக்ஷித்ததற்காகச் செய்ததென்கை. (பெரும் பசுக்கள்) ஸ்ரீ சத்ருஞ்ஜயனைப் போலேயிருக்கை க்ருஷ்ண ஸ்பர்சத்தால் வளர்ந்து, அவன் ஏழு வயஸ்ஸிலே பதினாறு வயஸ்ஸு குமாரனென்னும்படி யிருக்குமாபோலேயிருக்கும். (ஆற்றப் படைத்தான்) மிகவும் படைக்கை. "கழியாரும் கனசங்கம்) (2) கர்ப்பகேதம். பெரிய திருநாளுக்கு வருமாபோலே (வழியார) தார்மிகர் இம்முத்தை வழித் துறைபடக் குவிக்க, வழியை மலையாக்குவிக்கும். (ஆற்றப் படைத்தான் மகனே) அவர் (3) ஆர்ஜித்துப் படைக்க இவன் பிறந்து படைத்தஸம்பத்து பரமபதம் போலேதான் தோன்றி யன்று. (அறிவுறாய்) ஸர்வஜ்ஞனுக்கும் உணர்த்தவேண்டும்படி உள்ளு செல்லுகிறபடி (ஊற்றம்) (4) த்ருடதரப்ரமாணஸித்தன்

---

(1) அபேக்ஷை = விருப்பம்

(2) கர்ப்பகேதம் = கர்ப்பம் தரித்தலாலுண்டான வருத்தம்

(3) ஆர்ஜித்து = சம்பாதித்து

(4) த்ருடதரப்ரமாணஸித்தன் = வலிமை மிக்க ப்ரமாணமாகிய வேதத்தாலே அறியப்படுமவன்.

(பெரியாய்) அவை தனக்கும்'' அப்ராப்யமனஸாஸஹ'' ''யஸ் யாமதம்தஸ்ய மதம்'' என்று சொல்லுகிறபடியிருக்கை.

(தோற்றமாய்) இப்படிப் பெரியனாயிருந்து வைத்து (5) இதர ஸஜாதியனாய் அவதரித்தபடி. (சுடரே) (6) மனுஷ்யத்வே பரத்வம் (ஊற்றம்) மஹாராஜா பிராட்டி முதலானவர்கள் விடவொண்ணாலும் விடாதஊற்றம் (பெரியாய்).தன்பேறு (உலகினில் தோற்றமாய் நின்ற) துரியோதனாதிகளுள்ளிட்டார்க்கு பாண்டவ பக்ஷபாதி என்னும்படியிருக்கை (சுடரே துயிலெழாய்) இப்போது உணராமையாலே. (மாற்றாரித்யாதி) நாங்கள் வருமவர்களோ? (வலிதொலைந்து) ''நநமேயம் துகஸ்யசித்'' என்கை தவிர்ந்து அம்புக்குத் தோற்றாரோ பாதிகுணத்துக்குத் தோற்றோம், அவர்களுக்கு முடிந்து பிழைக்கலாம். 'ஸத்யேநலோகாந் ஜயதி''

(ஆற்றாதுவந்து) ''ஆள்பார்த்துழி தருவாய்'' என்று நீவரக் கடவையாயிருக்கிற நாங்கள் வந்து (உன்னடி பணியுமா போலே) வணக்கம் ஸ்வரூபத்துக் கென்றிருக்கை. (போற்றியாம்) தோற்றார் அவனைப் புகழுமத்தனை அபலைகளை வெல்லுகையும் ஒரு பணியோ? (புகழ்ந்து) படுத்தினபாடும் வென்று கொண்டபடியும் சொல்லிக் கிட்டினார்க்குப் பல்லாண்டு பாடுகை ஸ்வரூபமாயிற்று.

22. அங்கண்மாஞாலத்தரசர் அபிமான
பங்கமாய் வந்து நின்பள்ளிக் கட்டில் கீழே
சங்கமிருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம் மேல் விழியாவோ
திங்களும் ஆதித்யனும் எழுந்தாற் போல்
அங்கணிரண்டுங் கொண்டு எங்கள் மேல் நொக்குதியேல்
எங்கள்மேல் சாபமிழிந்தேலோரெம் பாவாய்

இருபத்திரண்டாம் பாட்டு:-கீழ்ப்பாட்டில தங்கள் (1) அபிமான சூன்யதையைச்சொல்லிற்று இப்பாட்டில் தங்களுக்கும் பிறர்க்குமாகாதபடியான (2) அநந்யார்ஹ சேஷத்வம் சொல்லுகிறது.

(அங்கண்மாஞாலத்தரசர்) இப்பரப்பெல்லாம் தங்களதென்று அபிமானம் பண்ணின ராஜாக்கள். இதடையத்

---

(5) இதர ஸஜாதியனாய் = தன்னிலும் வேறுபட்ட தேவர் மனுஷ்யர் முதலிய பிறரோடு ஸமான ஜாதியை உடையவனாயிருக்கை

(6) மனுஷ்யத்வே பரத்வம் = மனிதனாயிருக்கச் செய்தே ஈச்வரனாயிருக்கும் தன்மை.

(1) அபிமான சூந்யதை = ''நான்'' என்னும் அஹந்தை இல்லாதிருத்தல்.

(2) அநந்யார்ஹசேஷத்வம் = பிறர்க்கு அல்லாமல் எம்பெருமானுக்கே உரிய அடிமையாயிருத்தல்.

தந்தாமபிமானத்திலே அடக்கி வைக்கை. (3) பௌண்ட்ரக வாசுதேவனைப் போலே (அபிமான பங்கமாய் வந்து உன் பள்ளிக் கட்டில் கீழே) இளைய பெருமாளைப் போலே, "குணைர் தாஸ்ய முபாகத:" இறே (சங்கமிருப்பார் போல்) "வெளியே திரியில் பின்னை ராஜ்யம் பண்ணென்று தலையிலே முடியை வைப் பார்கள்" என்றஞ்சி அணுகோலக்கத்திலே ஸேவிப்பார்கள். (வந்து தலைப்பெய்தோம்) கீழெல்லாரையும் எழுப்பிப் பட்ட வ்யஸனமெல்லாம் தீர்ந்து கிடக்கப் பெற்றோம். பண்டுகை கழிந்தபடியும் இன்றுஸங்கதி உண்டானபடியும் "அந்நலனுடை ஒருவனை நணுகினம் நாமே இறே". "வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம:" "(கிங்கிணிவாய்ச் செய்த வித்யாதி) இழவு பேறுகள் அத்தலையிலேயாயிருக்கிறபடி. காலத்தினிளமை மொட்டிக்கப் பண்ணிப் பெண்கள் ஆற்றாமை அலரப் பண்ணுகிற படி (செங்கண்) உபமானம் நேரே நில்லாமை உபமேயம் தன்னையே சொல்லப் பெறும்படி (சிறுச்சிறிதே) (4) ஒரு நீர்ச் சாவியிலே வெள்ளமாகாமை பொறுக்கப் பொறுக்க (5) ப்ரதம பரிஷ்வங்கமே பிடித்துக் காணவேணுமென்கை (எம்மேல் விழி யாவோ) (6) கோடையோடின பயிரிலே ஒரு பாட்டம் வர்ஷி யாதோ என்னுமா போலே (7) சாதகம்வர்ஷதாரையை ஆசைப் படுமா போலே (திங்களுமாதித்தியனும் எழுந்தாப் போல்) பெறுதார் விடாய் ஆற்றுகைக்கும், கிடையாதோ வென்கிற (8) அஜ்ஞானாந்தகாரம் போகைக்கும் 'ப்ரஸன்ன திக்ய வர்ச்சஸம்.

(அங்கணிரண்டும் கொண்டு) கார்கால ஆதித்யனும் (9) நகட்டுச் சந்திரனும் போலல்ல. "சந்த்ரகாந்தாநநம்ராமம்" முழுநோக்குப் பொறுக்கும்படியால் உன்னழகிய இரண்டு

---

(3) பௌண்ட்ரகவாஸுதேவனைப் போலே—கண்ணன் த்வாரகாதிபதியாய் வாழும் போது பௌண்ட்ரகவாஸுதேவன் என்பவன் கண்ணன்பால் தூதனுப்பினான் நான் தான் உண்மை யான வாசுதேவன் எனக்குத்தான் சங்குசக்ரங்கள் உண்டு. நீ போலிப் பெயரையும் மாற்றிக் கொண்டு சங்கு சக்ரங்களை என்னிடம் கொடுக்கிறாயா? போர்க்கு வருகிறாயா? என்ன கண்ணன் போர்க்குச் சென்று அவனைக் கொன்றார்.

(4) ஒரு நீர்ச் சாவியிலே = ஒரு தடவை தண்ணீர் பாய்ச் சாதுபோனால் அத்தனையும் அழிந்து விடும் என்ற வாடிய நிலையி லுள்ள பயிர்.

(5) ப்ரதமபரிஷ் பந்தம் – உறங்குமவன் விழித்தெழக் கூடிய நிலையில் முதன் முதலாகக் கண் இமை அசையக் கூடிய நிலை.

(6) கோடையோடின பயிர் = வெப்பத்தினால் வாடி வதங்கிய பயிர்.

(7) சாதகம் வர்ஷதாரையை = சாதகப் பட்சி (வானம் பாடி) மழைத்துளியை,

(8) அஜ்ஞானாந்தகாரம் = அறியாமையாகிய இருட்டு.

(9) நகட்டுச் சந்திரன் = களங்கமுள்ள சந்திரன்.

கண்களையுமிட்டுப் பார்க்க வேணும் நாங்கள் பிழைக்க (10)கோப ப்ரஸாதங்களுக்குச் சந்த்ர ஸூர்யர்கள் ஒப்பல்ல.

(எங்கள்மேல் சாபமிழிந்து) (11) யாதனா சரீரம் போலே உன்னையும் பெருதேவ்யஸனப் படுகைக்கடியான (12) சாபோ ஹதரான துக்கம் போக வென்கை. (13) விச்லேஷவ்யஸனத் தாலே வரும்துக்க மனுபவித்தே விட வேண்டுகையாலே சாபமென்றது. "சாபமிழிந்து நோக்குதியேல்" என்றந்வயம் "விழியாவோ" என்றுமநோரதம். "நோக்குதி" என்றது அவனைக் குறித்து.

23. மாரிமலை முழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமா போலே நீ பூவைப் பூவண்ணா உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்தருளேலோரெம்பாவாய்.

இருபத்துமூன்றும் பாட்டு ;- பெண்காள்! உங்கள் காரிய மழகிதாகச் செய்து தருகிறோம்; உங்களுக்குச் செய்ய வேண்டுவ தென்னென்ன, இங்ஙனே (1) குன்னுங்குருச்சியாகக் கேட்டருள வொண்ணாது. புறப்பட்டுக் கேட்டருள வேணும் என்கிறார்கள். "பின்னை நெடும்பணைத்தோள் மகிழ்பீடுடை முன்னை அமரர் முழு முதலானே"

(மாரிமலை முழஞ்சில்) பெருமாள் மால்ய வானிலே எழுந் தருளியிருந்தாப்போலே வர்ஷம் பெய்து வழிகளெல்லாம் தூறெ ழுந்து ராஜாக்கள் படை வீட்டிலேயிருந்து வினையுண்டானாலும் புறப்படாதாப்போலே ஸிம்ஹங்கள் (2) கிரிகுஹைகளிலே கிடந்துறங்குங்காலம். (3) விச்லேஷித்தார் கூடுங்காலம். கூடி

---

(10) கோபப்ரஸாதம் = கோபமும் அருளும்

(11) யாதனா சரீரம் = மனிதன் இறந்த பிறகு நரகானுபவம் பண்ணுவதற்கு ஏற்ற உடல்

(12) சாபோபஹதர் = சாபத்தால் கெட்டழிந்தவர்.

(13) விச்லேஷவ்யஸனத்தால் = பிரிவுத்துன்பத்தால்

(1) குன்னுங்குரிச்சி = குழந்தைகள் விளையாடும் போது ஒருவன் காதில் மற்றொருவன் ரகசியம் சொல்கிறேன் என்று சொல்லி காது த்வாரத்தில் வாயை வைத்து "குன்னுங்குன்னுங் குருச்சி குன்னுங்குர்ர்ர்...) என்று சொல்வான். கேட்டவன் காதில் குருகுரு என்னும் இது ஒரு விளையாட்டு. (அயலாருக்குத் தெரியாமல் பரம ரகசியமாகச் சொல்வது என்பது கருத்து)

(2) கிரிகுஹை = மலைக்குகை

யிருந்தார் ஸம்போகம் அனுபவிக்குங்காலம் நாங்கள் உன் வாசலிலே நிற்குங்காலம். (மன்னி) ஆருக்கஞ்சுமது மலைக் குகை போலேயிருக்கை. (கிடந்துறங்குமித்யாதி) ஒருத்தர் முடி சூட்ட வேண்டாதே புறம்பே ம்ருகேந்த்ரனுகையும், (4) நிரங்குச ஸ்வபாவமுண்டாகையும் ஸமயா போதித ச்ரீமான். "க்ஷுத்ரம் ருகங்கள் மண்ணுண்ணும்படியிருக்கை." அபித: பாவகோபமம் அனுகூலரான தம்பிக்கு மகப்பட அணுகவொண்ணாத படியிருக்கை (அறிவுற்று பூவலர்ந்தாப்போலே காலத்திலே உணருகை. ஸம்ஸாரி உறங்கும்போது (5) தமோபிபூதனாய் உணர்ந்தால் (6) பராகர்த்தானுபவமாயிருக்கும். இவனுறக்கம் (7) வ்யதிரேகத்தில் ஆற்றாதார் வருமளவும் (தீ விழித்து) (8) ப்ரதமாக்ஷி ஸந்நிபாதத்திலே பேடைக்குமருகே நிற்க வொண்ணாதென்கை.

(வேரிமயிர்) உளைமயிர். அவனுக்காகில் "ஸர்வ கந்த: (எப்பாடும் பேர்ந்துதறி) ஒரு கார்யப் பாடில்லாமையாலே நாலு பாடும் பேருகிறபடி (உதறி) அவயவங்களைத் தனித்தனியே உதறினபடி (மூரி நிமிர்ந்து) உடம்பொன்றாய் நிமிர்ந்தபடி. (முழங்கி) மானுள்ளிட்ட ம்ருகங்கள் முழுக்காயாகப் பினத்திக் கிடக்கும்படி (முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போலே) (9) கிரி கஹ்வரத்தில் நின்றும் இப்படிப்பட்டதொரு ஸிம்ஹம் புறப் பட்டுப் போருமாபோலே போர வேணுமென்ன பெண்காள்! நர ஸிம்மம் போருமாபோலே போர வேணுமோ என்ன;

(நீபூவைப் பூவண்ணா) காம்பீர்யத்துக்கொன்றைச்சொன்னே மாகில் நீ போருமா போலே போரவேணுமென்கை வடிவையும் நிறத்தையும் உன்னைப் போலே பண்ணவொண்ணுமோ வென்கை இவன் ஸிம்ஹத்தைப்போலே பாவிக்கிறது நாச்சியார் விழிவிழிக் கைக்காக. (உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளி) நப்பின்னைப் பிராட்டியை ஊன்றிக் கொடு திருப்பள்ளியறையில் நின்றும் பெரிய திருமண்டபத் தேறப் புறப்பட்டருள வேணும். "பூர்வாம்திசம்" இத்யாதிப்படியே பிராட்டி மங்களா சாஸநம் பண்ணப் புறப் பட்டருளினாப்போலே, 'பர்வதா திவநிஷ்க்ரம்யஸிம் ஹோகிரி குஹாசய: லக்ஷ்மணம் த்வாரிஸோ பச்யத் ப்ரஹ்வாஞ்ஜலிபுடம் ஸ்திதம்' என்னக் கடவதிறே.

---

(3) விச்லேஷித்தார் = பிரிந்தார்

(4) நிரங்குசவைபவம் = தடையற்ற பெருமை

(5) தமோபிபூதனாய் = தமோகுணத்தாலே வெல்லப் பட்டவனாய்.

(6) பராகர்த்தானுபவம் = வெளிவிஷயங்களை அனுபவித்தல்

(7) வ்யதிரேகத்தில் = பிரிவில்

(8) ப்ரதமாக்ஷிஸந்நிபாதத்தில் = உறங்கியெழுங் காலத்து முதலாகக் கண் பார்வை படுங்காலத்தில்

(9) கிரிகஹ்வரம் = மலைக்குகை

(இங்ஙனே போந்தருளி) கண் வளர்ந்தருளின அழகு காணப்பெற்றோம். இனி நடையழகு காணவும் இருப்பில் வேண்டப் பாடுங்கண்டு வாழவேணுமென்கிறார்கள். "தடங்கொள் தாமரைக்கண் விழித்து நீயெழுந்து' இத்யாதிவத். (போந்தருளி) (10) சதுர்க்கதியிறே. "கஜஸிம்ஹ கதீவீரௌ' இத்யாதிப்படியிறே. நடையழகிலே (11) ருஷபத்தின் செருக்கும் (12) மத்தகஜத்தினுடைய திமிர்ப்பும் புலியினுடைய உறட்டும், ஸிம்ஹத்தினுடைய (13) பராபிபவன ஸாமர்த்யமும் தோன்றியிருக்கும் இதெல்லாம் நம் பெருமாள் நடையழகிலே காணலாம் (கோப்புடைய) (14) உபய விபூதியும் தொழிலாக வகுப்புண்டிருக்கை (சீரிய சிங்காசநம்) ராஜாக்கள் இன்ன மண்டபத்திலே இன்ன ஸிம்ஹாஸனத்தில் இருந்தாப்போலே. (யாம் வந்காரியம்) இப்போது சொல்லார்கள் சிற்றஞ்சிறு காலைக்கு வைக்கிறார்கள் (ஆராய்ந்தருள்) நீங்கள் என்பட்டீர்கள் ? என் செய்தீர்களென்கை

24. அன்றிவ் வுலகமளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி
பொன்றச்சகடமுதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையாவெடுத்தாய்! குணம் போற்றி
வென்றுபகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப்பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோரெம்பவாய்

இருபத்து நாலாவது பாட்டு :—நப்பின்னைப் பிராட்டியோடே கூடிதிவ்யஸிம்ஹாஸநத்திலேயிருந்த இருப்பிலே சாத்தியருளின (1) அத்தவாளத்தலைமேலே பறக்க, திருவடிகளைக் கண்டு அத்திருவடிகளை திருமுலைத்தடங்களிலும், திருக்கண்களிலுமொற்றிக் கொண்டு "உன்சேவடி செவ்விதிருக்காப்பு—நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு என்கிறார்கள்.

(அன்றிவ்வுலகமித்யாதி) இவ்வழகிய திருவடிகளைக் கொண்டே காடும் மலையுமளந்து கொண்டது. மலர் மகள் பிடிக்கும் மெல்லடியிறே: (அடிபோற்றி) 'உன் சேவடி செவ்வி திருக்காப்பு' (சென்றங்குத் தென்னிலங்கையித்யாதி) பிராட்டியைப் பிரித்தராவணனிருந்த விடத்தே நடந்து கொல்லுவதே? புலியிருந்த தூற்றிலே கொல்லுமாபோலே. "இலங்கை பாழாளாகப்படை பொருதானுக்குப் பல்லாண்டு" என்றவர்

---

(10) சதுர்க்கதி = நான்கு வகையான நடை

(11) ரிஷபம் = காளை

(12) மத்தகஜம் = மதங்கொண்ட யானை

(13) பராபிபவனஸாமர்த்யம் = பிறரை வெல்லும் திறன்.

(14) உபயவிபூதி = நித்ய விபூதியான பரமபதமும், லீலா விபூதி என்ற இவ்வுலகும்.

மகளிறே. (பொன்றச்சகடமுதைத்தாய்) ஒருத்தரோடும் விசாரியாதே முடித்தபடி. மாரீசனைப்போலே குற்றுயிராக்கி. மேலே அனர்த்தத்தை விளைக்கவையாதே முடித்தபடி. (புகழ் போற்றி) ஸ்ரீப்ருந்தாவனத்தில் முளைத்த பூண்டகப்படராக்ஷஸர் ஆகையாலே மங்களா சாஸநமொழியக்காவலில்லை. தாயுதவாத தசையிலே திருவடிகளுக்கு உதவுகை புகழாயிற்று (கன்று குணிலா வெறிந்தாயித்யாதி) ''சத்ருவையிட்டு சத்ருவை யெறிந்தால் அவர்களிருவரும் (2) ஸங்கேதிக்கில் என் செய்யக்கடவோம்'' என்று (3) வயிறு பிடிக்கிறார்கள். (குணில்) எறிகருவி. கன்று.

(குன்று குடையா வெடுத்தாயித்யாதி) இந்திரனும் பகை யானபடி. அனுகூலர்ப்ரதிகூலிக்கையால் தலையறுக்க வொண்ணாதே ஆந்ருசம்ஸ்யத்தாலே மலையெடுத்தது (வென்றுபகை கெடுக்குமித்யாதி) சக்ரவர்த்திவில் பிடிக்க பிள்ளையும் வில் பிடித் தாப்போலே. 'கூர்வேல் கொடுந்தொழிலன்'' மகனிறே! பசுக்களின் பின்னே திரியா நின்றால் ஸிம்ஹம் வந்தாலும் வேலாலே குத்திப் புடைத்துப் போமத்தனை.

(என்றென்று) ப்ரயோஜனம் போருமளவும் சொல்லி பின்னை ''தேஹிமே ததாமிதே'' என்னுமவர்களன்று. இது தானேப்ரயோஜனம். ஒன்று நூறாயிரமாகக் கொடுத்து கொண்ட துக்குக்கைக் கூலியும் கொடுப்பர்கள். (என்றென்றுன் சேவகமே யேத்தி) 'உன்னுடைய விக்கிரமமொன்றொழியாம லெல்லாம் என்னுடைய நெஞ்சகம் பால் சுவர்வழி யெழுதிக் கொண்டேன்' என்னுமவர் களிறே (இன்று) இசைவு பிறந்த இன்று. நீயுறங்க நாங்கள் உறங்காதே இருந்த இன்று (யாம்) பந்துக்களாலே நெடுங்காலம் நலிவுபெற்ற நாங்கள். (வந்தோம்) எங்களாற்றாமை யாலே வந்தோம். எல்லா இழவுகளும் தீர்ந்தோம் (இரங்கு) இத்தலைக்கு இரங்குகை அத்தலைக்குஸ்வரூபம். 'அவனுக்கு என் புகுகிறதோ'' என்று இரங்குகை இத்தலைக்குஸ்வரூபம்.

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்துவளர
தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே' உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்

இருபத்தஞ்சாம் பாட்டு: பெண்காள்! நோன் பொழிய உங்கள் நெஞ்சிலே ஒன்றுண்டு போலே என்ன நாங்கள் உன்னை அர்த்தித்து வந்தோம் என்ன, என்னை அர்த்தித்துப் பெற்றாருண்

---

(1) அத்தவாளத்தலை = மேலாடையின் தலைப்பு.

(3) ஸங்கேதிக்கில் = உடன்படிக்கை செய்து கொண்டால்

(4) வயிறு பிடிக்கிறார்கள் = வருந்துகிறார்கள்.

போவென்ன; (1) எங்களோட்டை, யார் பெற்றுருண்டென் கிறுர்கள்.

(ஒருத்தி மகனுய்) ஸர்வலோகத்துக்கும் பிதாவானவன் ஒருத்தி மகனுகப் பெறுவதே! "மகனொருவர்க்கல்லாத மாமேனி மாயனிறே. 'ஸ்துதோ ஹம் யத்த்வயா பூர்வம் புத்ரார்த்தி ந்யாயதத்யதே! ஸபலம்தேவி ஸஞ்ஜாதம் ஜாதோ ஹம் யத்த வோதராத்." (2) பித்ருவசனபரிபாலனம் போலே திருவாய்ப் பாடிக்கு வருகை. நம் பிறவி—நம்மையுமவனையும் அகற்றுகைக் குடலாயிருக்கும். அவன் பிறவி இருவரையும் அணுகவைக்கைக் குடலாயிருக்கும். "ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்தவனிறே." (பிறவி) "தேவகீபூர்வ ஸந்த்யாயாம் ஆவிர் பூதம் மஹாத்மநா" "பிறந்த வாறும்" (ஓரிரவில்) ஸம்ஸாரி களில் பொல்லாங்கு ஓரிராத்தங்க வேண்டிற்றில்லையென்கை அவ்விரவையொத்த இரவுமில்லை. மாதா பிதாக்கள் கைவிட்ட வளவிலே காத்த ராத்ரியிறே. (ஒருத்தி மகனுயித்யாதி) இருவரு மவனைப் பெற வேணுமென்று அபேக்ஷித்ததுக்கு அவளுக்கு அவதாரரஸத்தைக் கொடுத்து, இவளுக்கு லீலாரஸத்தை அனுபவிப்பிக்கிறபடி (ஒளித்து வளர) விஷத்ருஷ்டிகள் பட்டாமே, நாட்டார் செய்வன செய்யப் பெறுதே கள்ளர் பட்டது படுவதே. (3) அந்தர்யாமி பட்டது படுவதே. (ஒளித்து வளரத்தரிக் கிலானுகி) (4) ஈச்வரஸத்தையும் பொறுதொழிகை. (தான் தீங்கு நினைந்த) "எத்திறம்" என்று மோஹிக்க வேண்டும் விஷயத் திலேயிறே தீங்கு நினைத்தது (5) துஷ்ப்ரக்ருதியாகையாலே

(கருத்தைப் பிழைப்பித்து) அவன் நினைத்ததைப் பிழைக் கும்படி பண்ணி அவன் நினைவை அவனோடே போம்படி பண்ணினுன் (கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற) ஆச்ரிதர் வயிற்றில் நெருப்பை கம்ஸன் வயிற்றிலே புகும்படி பண்ணி. (நெடுமாலே) இதெல்லாம் படவேண்டிற்று (6) ஆச்ரிதர் பக்கல் (7) வ்யாமோஹாதிசயத்தாலேயென்கை (உன்னையருத்தித்து வந் தோம்) (8) அர்த்தித்வாதி நிரபேக்ஷனை உன்னை; (9) பிச்சன்

---

(1) எங்களோட்டை = எங்களைப் போன்றவர்கள்.

(2) பித்ருவசனபரிபாலனம் = தந்தை சொற்படி நடத்தல்,

(4) அந்தர்யாமி = ஒரு உயிருக்குள்ளேயிருந்து முன் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு நல்லன கெட்டனவற்றில் அவ்வுயிரைத் தூண்டுமவன்

(4) ஈச்வரஸத்தையும் = ஈச்வரன் ஒருவனிருக்கிறுன் என்பதையும்

(5) துஷ்ப்ரக்ருதி = கொடிய தன்மை உள்ளவன்

(6) ஆச்ரிதர் = தன்னை த்தஞ்சமென்றடைந்தவர்

(7) வ்யாமோஹாதிசயம் = அன்பு மேலீட்டினுல் உண் டாகும் மயக்கம்

(8) அர்த்தித்வாதி நிரபேக்ஷன் = யாசித்தல் முதலியவற் றையும் எதிர் பாராதவன்

(9) பிச்சன் = பித்தன்

மேலே பிச்சேற்ற வந்தோம்; ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் வந்தவனிறே. எங்கள் வடிவைப் பாராய். (பறை தருதியாகில்) உன்னழகாலே எங்களை மயக்காதே செய்தருளப் பார்த்தாயாகில்; (10) செருக்கடியாதே செய்தருளப் பார்த்தாயாகில்

(திருத்தக்க செல்வமும்) ''யஸ்யஸா ஜநகாத்மஜா'' (சேவகமும்) இத்தைக் காற்றூட்ட வல்லவீர்யம் (வருத்தமும் தீர்ந்து) உன்னை நீ கண்டறிபாயோ? பிரிந்தார் படும்பாடு அறியாயே? (பாடி வருத்தமும் தீர்ந்து) பேர் சொல்லப் பெறுதநம் வருத்தமும் தீர்ந்து (மகிழ்ந்து) (11) கைவல்யம் போலே துக்க நிவ்ருத்தியன்று தேட்டம். ப்ரீதிக்குப் போக்குவிட வேண்டும்படியாகை.

26. மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்கமுரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியே விதானமே
ஆலினிலையாய்! அருளேலோரெம்பாவாய்.

இருபத்தாறும் பாட்டு :- பெண்காள்[''எளிவருமியல்வினன்'' என்கிறபடி நம்மை உள்ளபடி அறிந்தீர்கள். உங்களுக்குச் செய்ய வேண்டுவதென்னென்ன; தங்களுக்குச் செய்ய வேண்டுவது சொல்லுகிறார்கள்.

(மாலே) வாத்ஸல்யமேஸ்வரூபமானவனே! (மணிவண்ணா) (1) அபரிச்சேத்யனாயிருக்கச் செய்தே (2) முன்தானையிலே முடிந்தாளலாம்படியிருக்கை. (3) காதுகனாலும் விடவொண்ணாத அழகையுடையவனே! (மார்கழி நீராடுவான்) மார்கழி நீராடுகைக்கு உபகரணம் வேண்டிவந்தோம் (4) அங்கிகைப் பட்ட விதத்திலும் அங்கம் கைப்படாதொழிவதே! நாஸ்திகரைப் போலே மார்கழி நீராட்டாவதென்னென்ன; இதறியாயோ வென்ன; (5) ஜ்யோதிஷ்டாமம்போலே ப்ரஸித்தமாயிருக்க வந்நீர்களோவென்ன எங்களுக்கு ஸ்வர்கா திகளில்ச்ரத்தை யுண்டோவென்ன, 'நிதித்யாஸிதவ்ய:'' என்கிறுப்போலே தானுண்டோவென்ன ப்ரமாணங்களை விச்வஸித் தால் பலிக்கி

---

(10) செருக்கடியாதே = கர்வம் கொள்ளாதே

(11) கைவல்யம் = சரீர சம்பந்தம் அறவே நீங்கியபிறகு ஞானனந்த மயனான ஜீவாத்மா தன்னைத்தானே அனுபவிக்கும் நிலை

(1) அபரிச்சேத்யன் = அளவிட முடியாதவன்

(2) முன்றானையிலே ஆடையின் தலைப்பிலே

(3) காதுகன் = கொலைக்காரன்

(4) அங்கி அங்கங்களாலேஸாதிக்கப்படும் முக்யமானபயன்

(5) ஜ்யோதிஷ்டோமம் = ஒருவகையாகம்

லும் பலிக்கும்; தவிரிலும் தவிரும், "யத்யதாசரதி ச்ரேஷ்ட என்றுபூருவர்கள் அநுஷ்டித்ததாகையாலே பலத்துக்கு இழவில்லை அதுவே அமையும். நீ இடையிலறிவதொன்றன்று.

(மேலையார் செய்வனகள்) என்னதப்பைச் சொன்னோம். நும்மைக் கோபியாதே வேண்டுவன சொல்லலாகாதோ வென்றான். (வேண்டுவன கேட்டியேல்) உன் (6) அந்யபரதை கேட்டால் சொல்ல வேணுமோ வென்ன அந்யபரதை என் னென்னில்; பஞ்சலக்ஷம் குடியில் பெண்கள் முன்னே வந்து நிற்கை யாலே இவர்கள் வார்த்தை கேளாதே இவர்கள் வடிவழகிலே மண்டினானென்கை. இவர்கள் உன்கார்யத்துக்கு வந்தோமோ என்ன, உங்கள் வடிவழகு கண்ணுக் கிலக்கானவோபாதி உங்கள் வார்த்தை என் செவிக்கிலக்கன்றோ? அதுவுமென் கார்ய மன்றோ; சொல்லுங்கோளென்ன;

(ஞாலத்தையித்யாதி)இட முடைத்தாய் உன் திரு மேனிக் குப்பகைத்தொடையாம்படி பாலைத் திரட்டினாப் போலே இருக்கிற நிறத்தை யுடைத்தாய் "ஸகோஷோ தார்த்த ராஷ்ட்ராணாம்" என்கிறபடியன்றிக்கே நின்று முழங்கக் கடவது மாய், பல சொல்லி என்? உன்கையில் பாஞ்ச ஜன்யம் போலிருப் பன பல சங்கங்கள் வேணுமென்கிறார்கள்.

(போய்ப்பாடு) புகழ் என்றுமாம். இதுவாயிற்று இனியோ வென்ன (சாலப்பெரும்பறையே) ஒரு ;மன்ன ரளவில் த்வனிக்கை யன்றிக்கே எங்கும் கேட்கத்வனிக்கிற தொருபறை வேணும். "யயௌ தூர்யப்ரணாதேந பேரீணாம்சமஹாஸ்வனை: இது வாய்த்து; ;பின்னையோ வென்ன (பல்லாண்டிசைப் பாரே) திருப்பல்லாண்டு பாடுவாரும் வேணுமென்கை (கோலவிளக்கே) மங்களதீபம் (கொடி) திருக்கொடியாட வேணும் (விதானமே) திருமேல்கட்டு, இவை வேணுமென்ன; பெண்காள் இவை நம்மால் செய்யலாயிருந்ததில்லை யென்ன;

(ஆலினிலையாய் அருள்) ஸர்வலோகத்தையும் உன் திரு வயிற்றிலே வைத்து ஓராலிலையிலே கண்வளர்ந்த உனக்கு முடியாததுண்டோ? தந்தோமத்தனையன்றோ வென்ன அப் பணியாகிறது "என்று புறம்புதன்னைப் போலேயொருதத்துவ முண்டாகிலிறேதன் கையில் சங்கு போலே யிருக்கும் சங்குண்டா வது. "தாமுகக்கும் தம்கையில் சங்கமே போலாவோ" என்று இவர்களுகந்த சங்கு தன்னைக் கொடுத்தான் "பாரோர் களெல்லாம் மகிழப் பறைகறங்க" என்று கூத்தாடுகிறபோது அறையில் கட்டின பறையையும், பறையடிக்கைக்கு ஸ்ரீஜாம் பவான் மகாராஜரையும் கொடுத்தான். திருப்பல்லாண்டு பாடுகைக்குப் பெரியாழ்வாரையும், நம்மாழ்வாரையும் கொடுத் தான். மங்கள தீபத்துக்கு நப்பின்னைப் பிராட்டியையும் கொடுத் தான். கொடிக்குப் பெரிய திருவடியையும், விதானத்துக்குத் திருவனந்தாழ் வானையும் கொடுத்தான்.

---

(6) அன்யபரதை = வேறுபொருளில் கருத்தூன்றுகை

27. கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டுயாம் பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும்யா மணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலொரெம்பாவாய்

இருபத்தேழாம் பாட்டு:— கீழில்தன் (1) ஸ்வரூபஸித்தி சொல்லிற்று இப்போது அவர்களை அலங்கரிக்கிறபடி சொல்லுகிறது.

(கூடாரைவெல்லும்) எங்களைத் தோற்பித்த நீ யாரை வெல்ல மாட்டாய் என்கிறார்கள் அதாவது — நாங்கள் முன்னே வந்து நின்று வார்த்தை சொல்லும்படி பண்ணினாயே; ஆந்தனையும் பார்த்தால் கூடாரை வெல்லுமித்தனை கூடினால் தான் தோற்குமித்தனை: (சீர்) எல்லாரையும் வெல்லுவது குணத்தாலே, (2) அஜ்ஞரை (3) ஸர்வஜ்ஞராக்கும் ஸர்வஜ்ஞரை "எத்திறம் "என்னப் பண்ணும் 'ஸத்யேந லோகாந் ஜயதி" இத்யாதிவத். (கோவிந்தா) பசுக்களுக்கும் தோற்குமவனே.

(உன்னைப்பாடி) விலக்கினவது பெற்றபடி. "ஹிரண்யாய" என்கை தவிர்ந்து உன்னை சொல்லப் பெறுவதேயென்கை (பாடியுன்தன்னை) பெண்கள் புணர்ப்பே தாரகமாகப் பாடித் திரியுமென்கை. பாடுகை ப்ரயோஜனமென்னுமாம். (சீர்) சீலவத்தையின் மிகுதியேயென்னவுமாம் (பறைகொண்டு) ப்ராப்யத்தில் ப்ராபக வ்யவஹாரம். ஊருக்குப் பறையென்கிறது (யாம் பெறு சம்மானம்) தங்கள் பேறு அநாதிகாலம் எல்லாராலும் பட்ட (3) பரிபவம் மறக்கும்படி அவன் கொண்டாடும்படி சொல்லுகிறது.

(நாடு புகழும் பரிசு)" "பாரோர் புகழ" என்னும்படியே ஒருவர் கொடுக்கும்படியே சிலர் பெறும்படியே என்று கொண்டாடவேணும் (நன்றாக) நாடு சிரிக்கும்படியன்றிக்கே, 'ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமிநி' என்று இந்த்ரன் வரக்காட்டின ஹாரத்தைக் கையிலே பிடித்துப் பிராட்டியும் தானும் திருவடியை அலங்கரிப்பித்தாப்போலே (நன்றாக) "தம்ப்ரஹ்மாலங்காரேண அலங்குர்வந்தி போலே (சூடகமே)" அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்" என்னுமாபோலே அவன்

---

(1) ஸ்வரூபஸித்தி = ஒரு ஆத்மாவின் ஸ்வரூபமானது எம்பெருமானுக்கு அடிமையாய் அவனுக்கு எல்லாவிதமான கைங்கர்யங்களும் செய்கை அது கைகூடிய தன்மையைச் சொல்கிறது.

(2) அஜ்ஞர் = இவ்வாத்மா எப்பெருமானுக்கு அடிமை செய்வதற்குரியது என்பதனை அறியாதவர்.

(3) ஸர்வர்ஜ்ஞர் = எல்லாமறிந்தவர்.

(3) பரிபவம் = அவமானம்

சொல்லி மார்விலும், தலையிலும் வைத்துக்கொள்ளும் கைக்கு இடும் (4) சூடகம். "தம்மணிம் ஹ்ருதயே க்ருத்வா" இத்யாதிவத். முந்துறக் காணுமிடம். (தோள் வளையே) அத்தலையில் ஸ்பர்சம் அணைக்க வேண்டியிருக்கையாலே, அணைத்த தோளுக்குத் தோள் வளையுமென்கை. (தோடே) அணைத்தாலும் உறுத்துமவை. "கண்டேன் கனமகரக்குழையிரண்டும் நான்கு தோளும் என்னுமாபோலே. (செவிப்பூவே) (5) ஆக்ராணம் பண்ணுமிடம். கண்ணுகவுமாம் (6) (பாடகம்) அணைத்தால் துவண்டு விழுமிடம் (அனைய பல்கலனும்) பருப்பருத்தன சில சொன்ன வித்தனை. நீயறியுமவையெல்லாமென்கை. பலபல வேயாபரணம் இத்யாதி இத்தசையிலே எண்ணப் போமோ? (யாமணிவோம்) மலரிட்டு நாமுடியோம்" என்ற இவர்கள் அனுமதி பண்ண அமையுமென்கை.

(ஆடையுடுப்போம்) பண்டு உடார்களோவென்னில் அவனுடுத்தது உடை, உடாதது உடையன்றென்கை அதாவது கூறைமாறுகை 'புனையிழை யித்யாதி 'அப்பன் திருவருள் மூழ்கினள் என்கிறபடியே அவனோட்டை ஸம்பந்தமே இவர்கள் நன்மைக்கெல்லாம் அடியென்கை. புதுக்கணிப்பும்—அவனுகப் பொழிய தங்களுகப்பு பொகட்டபடி. (அதன் பின்னே பாற்சோறு இத்யாதி) பகவத் ஸம்பந்தமுண்டான திருவாய்ப்பாடியில் ஸம்ருத்திகளெல்லாம் இவளுக்கு ப்ரியமாயிருக்கிறபடி. (கூடியிருந்து) புஜிக்கக் கடவதன்று பிரிந்து பட்ட க்லேசம் தீர கூடித் தொட்டுக் கொண்டிருக்கை-ப்ரயோஜநம் "அஹமந்நம்" இத்யாதிப்படியே ஓருவர்க்கொருவர் போக்யமென்கை. (குளிர்ந்து) பிரிந்துகமர் பிளந்த நெஞ்சங்கள் (7) வவ்வலிடும்படி,

28. கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து- உன்தன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தா உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கொழிக்கவொழியாது
அறியாத பிள்ளைகளோமன்பினால் உன் தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோரெம்பாவாய்.

இருபத்தெட்டாம் பாட்டு :- பெண்காள் நீங்கள் சொன்னவற்றைத் தருகிறோம் நாடு உங்கள் பாடே நாமும் சிறிது உங்கள் பாடே பெற்றோமாக வேணும். அதுக்கு உங்களுக்குள்ளதென்னென்ன, உனக்குத் தரலாவது ஒன்றுமில்லையே, பண்டுதப்

---

(4) சூடகம் = வளை

(5) ஆக்ராணம் = மோந்து பார்த்தல்

(6) பாடகம் = கால்வளை (பாதகடகம் என்பது பாடகம் என்றாயிற்று).

(7) வவ்வலிடும்படி = குளிரும்படி.

பச்சொன்னதுண்டாகில் பொறுக்க வேணுமென்று (1) க்ஷமை கொள்ளுகிறார்கள்.

(கறவைகள்) அறியாமைக்குக் கன்றுகாலியென்கை. "ஜ்ஞாநேநஹீந: பசுபிஸ்ஸமாந:" இறே. (பின்சென்று) தாங்கள் குருகுலவாஸம் பண்ணுகிறபடி சொல்லுகிறார்கள், (கானம் சேர்ந்து) விசிஷ்டரிருந்தவிடத்தே சென்று இக்கோயில் புகுவதே! உள்ளுள்ள காட்டிலே வர்த்திக்குமத்தனை ஊர் கண்டறியோம். (உண்போம்) ரிஷிகளைப் போலே தபஸ்ஸுக்கல்ல அங்கும் வயிறு வளர்க்க (சேர்ந்துண்போம்) நடந்துண்ணுமத்தனை. எங்களைப் பார்க்கப் பசுக்கள் வஸிஷ்டாதிகளோடொக்கும். இத்தால் கர்மமில்லையென்கை,

(அறிவொன்றுமில்லாத) ஜ்ஞானபக்திகளில்லை யென்கிறது; "பக்திஸ் ச ஜ்ஞாநவிசேஷா என்றாரிறே முதல் தான் இல்லை. இது வேண்டாமோ இவர்கள் (2) அலமாப்பு பக்தியன்றோ வென்னில், அது ஸ்வரூபமாகையாலே உபாய்மாக நினையார்கள். (ஆய்க்குலம்) அதிகாரமில்லை. (உன் தன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்) ஆனால் இப்புண்ணியமில்லாதார் இழக்குமத்தனையன்றோ என் சொன்னாய்? எங்களுக்கன்றோ புண்ணியமுள்ளது எங்கள் புண்ணியம் முதலில்லாதார்க்கு முதலும், (3) பலிசையும் கொடுக்கும் புண்ணியம்காண் (4) ஸாத்யதர்மத்தைப் பற்றினோமோ? (5) ஸித்தமாய் வடிவுள்ளதொரு தர்மத்தைப் பற்றினோம். இதுவோ எங்களுக்குக்குற்றம் (குறைவொன்றுமில்லாத கோவிந்தா) உங்களுக்கொன்றுமில்லையென்றீர்களே யென்ன; உன்னையில்லை யென்றோமோ வென்ன: உங்கள் பெருமைக்கு நாம் செய்வதென்னென்ன; ராஜாக்கள் வழிபோம்போது மேடுபள்ளமொக்க விடுமாபோலே உன் குறையில்லாமையை எங்கள் குறையிலேயிட்டு நிரப்புவது.

(உன் தன்னோடுறவேலித்யாதி) நாங்கள் அறிவொன்றுமில்லாத ஆய்க்குலம் நீ குறையொன்றுமில்லாத கோவிந்தன். ஆன பின்பு இப்பிறவி, "விதி நிர்மிதமேதத்தந்வயம்." நாராயணனன்றோ: எங்களறிவு கொண்டு கார்ய முண்டோ? உறவுண்டாயிருக்கதுர்யோ தனுதிகளை விட்டோமே யென்ன; உனக்குவிடவொண்ணாதபாண்டவர்களாகக் கொள் எங்களை எங்கள் வெறுமையும் உன் பூர்த்தியும் உணர்ந்து எங்களை விடவொண்ணுமோ

---

(1) க்ஷமைகொள்ளுகிறார்கள் = பொறுக்கும்படி வேண்டுகிறார்கள்.

(2) அலமாப்பு = கவலைப்படுதல்

(3) பலிசை = வட்டி

(4) ஸாத்யதர்மம் = நமது முயற்சியால் உண்டாக்கப்படும் கருமம் ஞானம் முதலியன.

(5) ஸித்தம் = நமது முயற்சியால் உண்டாக்கப் பெறாமல் எப்போதும் இருக்கின்ற எம்பெருமான்.

என்கை. (அறியாத) (6) அநவதானம். (பிள்ளைகள்) அஜ்ஞர். (அன்பினாலித்யாதி) தவிரவொண்ணுதாகையால் ப்ரக்ருதி, உபாயபுத்தியாகிலிறே தப்பாவதென்ன; நாராயணனென்று கோவிந்தாபிஷேகம் பண்ணி பூர்ணனாயிருக்கிற வென்னை சிறுபேர் சொன்னீர்களென்ன நாராயணனென்கை குற்றமோ வென்னில்; நீர்மைஸம் பாதிக்கப் போந்த விடத்திலே மேன்மை: சொல்லுகை குற்றமன்றோ?

(இறைவா) உன்ஸ்வரூபம் பெற வேண்டாவோ? (நீதாராய்) ஸ்வீகாரத்தால் செய்யுமத்தனையும் நீ செய்து அனுதாபமும் அத் தலையிலேயாக வேணும். "ஏகம்'' என்கிற படியே செய் தருளாயென்கை (ஒழிக்க வொழியாது) நன்மையுண்டாகிலன்றோ பழியிட்டுவிடலாவது (சீறியருளாதே) உபாயமென்று நினையாதே ப்ரக்ருதியென்று கொள்ள வேணும் இத் தலையால் பற்றும் பற்று சீற்றத்துக்கு விஷயம். இத்தலைக்குக் குறையும் அத்தலைக்கு ரக்ஷையும் (7) ஸ்வரூபப்ரயுக்தம். (நீ தாராய்பறை விலக்குகைக்கு ஆளில்லை நீ தருமித்தனை.

29. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து, நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வானன்று காண்கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும், உன்தன்னோடு,
உற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்'

இருபத்தொன்பதாம் பாட்டு :— எம்மாவீட்டில் ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறது.

(சிற்றஞ் சிறுகாலே) "ப்ராஹ்மே முகூர்த்தே சோத்தாய'' காலை நன்ஞானம்'' இத்யாதிப் படியே இவர்களனுஷ்டிக்கிறார்கள் முன்பு ஒரு போகியாக உறக்கம். பின்பு ஒரு போகியாக உணர்ச்சி நடுவில் காலமிறே சிற்றஞ்சிறு காலையாவது பெண்களாகையாலே சிற்றஞ் சிறு காலம் என்றபடி, யோகிகளும் உணர்வதுக்கு முன்னே சிறு பெண்களான நாங்கள் உணர்ந்த இத் (1) தர்மஹாநியைப் பாராய் என்னில் முன்னம் பாரித்து' என்று—நீ உணருங் காலத்திலே நாங்கள் உணர்ந்து வந்தோமென்கை.

(வந்து) இரண்டு ஸ்வரூபத்தையும் அழித்தோம். ஸ்வரூபம் நிலையிட்டவர்களிறே; பத்ப்யாமபிகமாச் சைவ'' என்று சொல்லுகையாலே அவனிருந்த விடத்தே ஓரடியிட்டுச் செல்ல பதந்தோறும் நெஞ்சுளுக்கும். பொறுக்கமாட்டா னென்கை.

---

(6) அநவதானம் = ஊக்கமின்மை.
(7) ஸ்வரூபப்ரயுக்தம் = இயற்கையாகவே உண்டானது.
(1) தர்மஹாநி = அநியாயம்.

(உன்னைச் சேவித்து) அத்தலை இத்தலையாயிற்று. (2) ஸேவ்ய ரான நாங்கள் (3) ஸேவகரானபடி. "ஸுக்ரீவம் நாதமிச்சதி" தாமேயிறே பார்த்திருப்பார். ஸ்ரீவிபீஷணாழ்வானை முடி சூட்டு கைக்காக இலங்கைக்கு நடந்தவனன்றோ.

(உன் பொற்றாமரையடியே) ஆற்றாமையும் ஸ்வரூபமாகை யாலே அடைவு கெடாமலே விழுந்தபடி. (அடியே போற்றும் பொருள்) சூடவந்த பூவுக்கு விலையிடுவாரைப்போலே உபாயோ பேயங்களிரண்டும் தானே; (4) ஸ்வீகாரமாத்ரத்திலே நிற்கப் போகாமையாலே போற்றுகிறபடி. ருசிக்கவ்வருகுபட்டால். பலத்திலே மீளுமத்தனை கவிழ்ந்து நிற்கச் செய்தே விண்ணப்பம் செய்கிறது (கேளாய்) நாங்களும் முன்னே நிற்கில் வார்த்தை கேட்கவொண்ணாதோவென்கை.

(பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ) நீயன்றோ (5) முற்றீமை செய்தாய்; என்றும் கேட்டே போகக் கடவதா யிருக்கிற நீ வந்து இக்குலத்தே பிறந்து (6) இட்டீடு கொண்டு எளியனானாய் என்கை. நாங்கள் நீயிருந்த விடத்தே வந்து பிறந் தோமோ? வஸிஷ்டாதிகள் விலக்குமிடத்தே வந்தோமோ? (குற்றேவலெங்களைக் கொள்ளாமல் போகாது) பெரும் பசியரா யிருப்பார் சோற்றை வாங்கி எச்சில் படுத்திப் பின்னை உண்ணாதே பொகட்டுப்போமாபோலே சப்தாதிகள் போக்யாதிகளாக விருக்கிற எங்களை வடிவழகைக்காட்டி "உண்ணும் சோறு முதலானவையெல்லாம் நீ" என்னப்பண்ணி ஸ்வரூபானுரூபமான அடிமை தாராதே இருக்கலாமோவென்கை.

(இற்றைப் பறைகொள்வானன்றுகாண்) (இற்றைப் பறையித்யாதி) இவர்கள் நம்மை விடார்களே யினியென்று பறையெடுத்துக்கொடுக்க; ஒரு கையாலே கும்பிட்டு ஒரு கையாலே ப்ரயோஜனங் கொண்டு போமவர் களோ நாங்கள். (கோவிந்தா) பசுக்களின் பின்னே திரிவாற்குப் பெண்கள் (7) ச்ரோத்ரிய ராகப் போமோ.

ஆனால் செய்ய வேண்டுவதென்னென்ன; (எற்றைக்கும்) "நகாலஸ்தத்ரவை" என்கிற பரமபதத்திலேயானாலும் (ஏழேழ் பிறவிக்கும்) இங்கே பிறந்தாலும் ஒக்கப் பிறக்க வேணும். இளையபெருமாள் காட்டிலும் படை வீட்டிலும் அடிமை செய்தாப்போலே, "தேவத்வே தேவதேஹம்" இத்யாதிப் படியேயாகவேணும் என்கிறார்கள்.

---

(2) ஸேவ்யர் = ஸேவிக்கத்தக்கவர்

(3) ஸேவகர் = ஸேவிப்பவர்

(4) ஸ்வீகாரமாத்ரத்தில் = தஞ்சமடைந்த மாத்ரத்தில்

(5) முற்றீமை = முன்பு செய்த தீமை

(6) இட்டீடு = வாதப்ரதிவாதம் (அன்பு மேலீட்டினால் வார்த்தைக்கு மறு வார்த்தை சொலல்)

(7) ச்ரோத்ரியர் = வேதமோதிய அந்தணர்

8

(உன்றன்னோடுற்றோமேயாவோம்) ஒரு உறவைக் குறித்து அதுவாக வேணுமென்னுதொழிந்தது. எல்லா உறவு முறையும் நீயேயாக வேணுமென்கை. "மாதாபிதாப்ராதா" இத்யாதியில்படியே. (உனக்கே நாமாட்செய்வோம்) உனக்குமெங்களுக்கும் பொதுவான அடிமையன்றிக்கே, உனக்கேயாகக் கொள்ள வேணும், ஸ்ரீ பரதாழ்வானைப் போலன்று. இளைய பெருமாளைப் போலே அடிமை செய்ய வேணும்.

(மற்றை நங்காமங்கள் மாற்று)" பாவோ நாந்யத்ர கச்சதி" போலே பண்ண வேணும்.

30. வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப்பறை கொண்டவாற்றை, அணி புதுவைப்
பைங்கமலத்தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரி சுரைப்பார் ஈரிரண்டுமால் வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவரெம்பாவாய்.

முப்பதாம் பாட்டு :- இப் ப்ரபந்தத்தைக் கற்றார்க்கு (1) இவ்வர்த்த மனுஷ்டித்தாரோபாதி பலம் ஸித்திக்கும்; "கன்றிழந்த தலை நாகு தோல் கன்றைமடுக்க, அதுக்கு இரங்குமா போலே இப்பாசுரம் கொண்டு புக நமக்குப் பலிக்கும்" என்று பட்டர் அருளிச் செய்வர்.

(வங்கக்கடல்) கீழில் அமுது மேலேயெழக்கடையா நிற்க, கடலிலே மரக்கலமசையாமல் கடைந்த நொய்ப்பம் சொல்லுகிறது. கடைந்தபோது சுழன்று வருகையாலே கடலடைய மரக்கலமாய் நின்றபடியென்று மாம். க்ருஷ்ணனே (2) ப்ரயோஜநாந்தரபரர்க்கும் கார்யம் செய்யுமவனென்கை, (மாதவனை) தாய் முன்பு பிதாவுக்குப்ரஜை குற்றம் பொறுக்க வேணுமிறே. (கேசவனை) (3) விரோதி நிரஸனஸ்வபாவனை "விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்டவனிறே.

(திங்கள் திருமுகத்து) (4) க்ருஷ்ணஸம்ச்லேஷத்தாலே குளிர்ந்து மலர்ந்த முகம், அங்கு "கதிர்மதியம் போல் முக" மென்றது "ஜகத்வ்யாபாரவர்ஜம்" என்று இதொழிய அல்லாததெல்லாம் கொடுக்கையாலே, இவர்களுக்குக் குளிர்த்தி

---

(1) இவ்வர்த்தமனுஷ்டித்தார் = இந்நோன்பை நோற்றவர்.

(2) ப்ரயோஜநாந்தரபரர் = ஐச்வர்யம் கைவல்யம் முதலிய வேறுவிதமான பயன்களிலேயே கருத்தைச் செலுத்துமவர்

(3) விரோதிநிரஸநஸ்வபாவன் = பகைவரை அழிக்கும் தன்மை உடையவன்,

(4) ஸம்ச்லேஷம் = சேர்க்கை,

வேண்டுகையாலே "திங்கள் திருமுகம் "என்கிறது" மதிமுக மடந்தையரிறே (சேயிழையார்) தானுமவனும் கூடவிருந்து பூட்டின ஆபரணத்தை உடையவர்கள் (சென்று) இவ்வொப்பனை யோடே வரப்பார்த்திருக்குமளவல்லாத (6) த்வரையைச் சொல்லுகிறது. (இறைஞ்சி) மங்களாசாஸநம் பண்ணி (அங்கு) திருவாய்ப் பாடியிலே (அப்பறை) நாட்டுக்குப் பறையென்று அடிமை கொண்டபடியை. (அணிபுதுவை) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான ஸ்ரீவில்லிபுத்தூர். (பைங்கமலத் தண்தெரியல்) ப்ராஹ்மணருக்குத் தாமரைத் தாராகையாலே சொல்லுகிறது. (பட்டர்பிரான் கோதை சொன்ன) ஆண்டாள் அனுகார ப்ரகாரத்தாலே அனுபவித்துச் சொன்ன; "ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என்றாப்போலே பெரியாழ்வார் மகள் சொன்னதில் அர்த்த வாதமில்லை.

(சங்கத்தமிழ்மாலை) "குழாங்களாய்" என்னு மாபோலே திரளாக அனுபவிக்க வேண்டும் ப்ரபந்தம். (முப்பதும் தப்பாமே) இதில் ஒரு பாட்டுக் குறையாமே. அல்லாத போது ரத்னம் குறைந்த (7) ஏகாவளி போலே பேரிழ வாயிருக்கு மென்கை (இங்கு) பிற்பட்ட காலத்திலே (இப்பரிசுரைப்பார்) இப்பாசுர மாத்ரத்தைச் சொல்லுவார். ஆண்டாள் அனுகாரத்தாலே பலம் பெற்றவளாகையால் இது சொன்னார்க்கும் இங்கே பலம் கிடைக்கும். (ஈரிரண்டுமால் வரைத்தோள்) பண்டுபாடினவர்கள் சொல்வழியாலே அனுஸந்திக்கையாலே தோள்கள் பணைக்கும். ஆண்களுக்கு இரண்டாய்த் தோற்றும். இவர்களுக்கு நாலா யிருக்கும்.

(செங்கண் திருமுகத்து) (8) அலப்யலாபத்தாலே சிவந்த கண்கள் (செல்வத் திருமாலால்) (9) உபய விபூதியுக்தனானைச்ர்ய: பதியாலே. இப்பாட்டில் (10) உபக்ரமோபஸம் ஹாரங்களில் த்வயத்தில் போலே பிராட்டி ஸம்பந்தம் சொல்லிற்றாய்த்து.

(எங்கும் திருவருள் பெற்று) (11) த்ருஷ்டாத்ருஷ்டங் களிரண்டிலும், பிராட்டியும் தானும் (12) ஸந்நிஹிதமாம்படி

---

(5) ஒப்பனை = அலங்காரம்

(6) த்வரை = விரைவு

(7) அர்த்தவாதம் = வெறுந் துதி (= பொய்)

(8) ஏகாவளி = ஒரேசரமாக உள்ள முத்துமாலை.

(8) அலப்யலாபத்தாலே = அடையமுடியாததை அடை வதனாலே

(9) உபயவிபூதியுக்தன் = நித்யவிபூதி, லீலாவிபூதி என்னும் இரண்டோடும் கூடியவன்.

(10) உபக்ரமஉபசம் ஹாரங்கள் = துவக்க முடிவுகள்

(11) த்ருஷ்டாத்ருஷ்டங்கள் = இம்மை மறுமைப் பயன்கள்

ப்ரஸாதம் பெற்று. (இன்புறுவர்) (13) பகவத்ஸம்ச்லேஷத்தால் ஆநந்தம் பெறுவர்.

திருநாராயணபுரம் ஆய் அருளிச்செய்த ஈராயிரப்படி

முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

---

(12) ஸந்நிஹிதம் = ஸமீபத்திலிருப்பது.
(13) பகவத்ஸம்ச்லேஷம் = பகவானோடு கூடியிருப்பது.